


# தமிழரசு


மலர் : 5

இதழ் : 20

16-4-1975



கால்நடைச் சிறப்பிதழ்



ஆளுங்கட்சியின் சார்பிலும் எதிர்க்கட்சியின் சார்பிலும் காவல்துறை மானியத்தின் மீது பல்வேறு கருத்துக்கள் இரண்டு நாட்களாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. பேசியவர்களில் ஒரு சிலர் தான், காவல்துறையிலே இருப்பவர்கள் இன்னும் பல சலுகைகளைப் பெற வேண்டும். அவர்களுக்கு அரசு இன்னும் பல உதவிகளைச் செய்ய வேண்டும், காவல்துறை இன்னும் நல்லமுறையிலே செயல்பட நவீன யுக்திகளைக் கையாளுகின்ற முயற்சிகளுக்கெல்லாம் அரசு முன்வர வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

# கடமைகள் ஆற்றிடும் காவல்துறை

பெரும்பாலானோர், இந்த ஆண்டு காவல்துறை மீது மிகக் கடுமையான விமரிசனங்களைச் செய்திருக்கிறார்கள். அவரவர்களுடைய தொகுதிகளிலே நடந்த ஒருசில சம்பவங்களை இங்கே எடுத்துக் காட்டி, காவல்துறையினர் மிகக் கடுமையாக நடந்து கொண்டார்கள் என்று கூறி, இவைகளுக்கெல்லாம் தக்க நிவாரணங்களைக் காண வேண்டும், என்ற அளவில் பேச்சுக்களை முடித்திருக்கிறார்கள்.

பொன்னப்ப நாடார் பேசுகின்ற நேரத்தில் பல சம்பவங்களைச் சுட்டிக் காட்டி, அது சம்பந்தமாகக் காவல்துறையினர் வழக்குகள் பதிவு செய்திருப்பதையும் எடுத்துக் காட்டினார்கள். மற்றும் சிலர், வேறு சில சம்பவங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

பதிவு செய்யப்படவில்லை என்பதாலேயே பதிவு செய்யப்படாமலேயே போய்விடும் என்று பொருளல்ல. திட்டவட்டமான புலன் விசாரணைகளுக்குப் பிறகு உரிய வழக்குகள் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் மீது நிச்சயமாகத் தொடுக்கப்படும்.

ஒவ்வொரு மானியத்திலும் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களுக்கும் பதிலளிக்க எனக்கு நேரம் இல்லாவிட்டாலும், அந்தந்தத் துறையின் அமைச்சர்கள், அதிகாரிகள் இந்த விவாதத்தைக் கவனிக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தால், அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அனைவரும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தங்கமணி பேசுகையில் பிரிட்டிஷார் காலத்திலிருந்து காவல்துறை நிர்வாகம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது, நாமென்ன புதிதாக இதிலே செய்து விட்டோம்? என்று கேட்டார். நான் சில புள்ளி விவரங்களை அந்த அடிப்படையிலே அளிக்க வேண்டியது அவசியமாகும்.

1969-70 ஆம் ஆண்டு காவல்துறைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 13,66,42,500. இந்த ஆட்சி அமைந்த பிறகு, காவல்துறையின் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட பிறகு, ஆண்டு தோறும் இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து, இப்போது 1974-75-ல் ரூ. 25,99,65,000 என்ற அளவிற்கு இருக்கிறது.

எப்படி இந்த அளவிற்கு அந்தத் தொகை உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், காவல்துறையிலே உள்ள அலுவலாளர்களுக்கு அவர்களுடைய உழைப்பிற்கு ஏற்ற ஊதியமும் அகவிலைப்படி உயர்வும் தர வேண்டுமென்று இந்த அரசு விரும்பியதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய உயிரையும் பணயமாக வைத்து ஈடுபடுகின்ற பணியிலே இன்றைக்கு இருக்கிறவர்கள் என்ற காரணத்தால், அவைகளை எல்லாம் செய்திருக்கிறோம். 1970 ஆம் ஆண்டு வரையில், இரண்டாம் நிலைக் காவலர்களுடைய அடிப்படை ஊதியம் 70 ரூபாயிலிருந்து 95 ரூபாய் என்ற அளவிற்குத் தான் இருந்தது. 1970-க்குப் பிறகு, அந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி, 150 ரூபாயிலிருந்து 225 ரூபாய் வரை என்ற அளவிற்கு மாறுதல் செய்திருக்கிறோம். முதல்நிலைக் காவலர் என்ற பதவியே இல்லாமல் இருந்தது. எஸ்.எஸ்.எல்.சி. படித்து வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு இத்தகைய வேலை வாய்ப்பைத் தரலாம் என்ற நல்ல நோக்கத்தோடு முதல்நிலைக் காவலர் என்ற பதவியை ஏற்படுத்தி, அவர்களுக்கு அடிப்படை ஊதியமாக 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை என்று நிர்ணயித்தோம். தலைமைக் காவலர்களுக்கு 1970 வரை 90 ரூபாயிலிருந்து 110 ரூபாய் வரை இருந்ததை, 210 ரூபாயிலிருந்து 325 ரூபாய் என்று மாற்றினோம். துணை உதவி ஆய்வாளர்களுக்கு-110 ரூபாயிலிருந்து 140 ரூபாய் என்று இருந்ததை உயர்த்தி, 250 ரூபாயிலிருந்து 400 ரூபாய் என்று செய்தோம். உதவி ஆய்வாளர்களுக்கு 140 ரூபாயிலிருந்து 220 ரூபாய் என்று இருந்தது. அதை இப்போது 300 ரூபாயிலிருந்து 500ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். துணை ஆய்வாளர்கள் என்ற பதவியைப் புதிதாக உருவாக்கி, அவர்களுக்கு 350 ரூபாயிலிருந்து 600ரூபாய் என்ற அளவிற்கு ஊதியம் வழங்குகிறோம். ஆய்வாளர்களுக்கு 225 ரூபாயிலிருந்து 375 ரூபாய் என்று இருந்தது. அதை 425 ரூபாயிலிருந்து 700 ரூபாய் என்ற அளவிற்கு இன்று மாறுதல் செய்திருக்கிறோம்.

இதைப்போலவே அவர்களுடைய அகவிலைப்படி எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால் மற்ற அரசு அலுவலாளர்களுக் கெல்லாம் உயர்த்தப்படுகின்ற நேரத்தில் அதோடு இணைத்து உயர்த்தப்படுகிறது. நவீன கருவிகளைக் காவல்துறைக்கு வழங்குவதன் மூலம் இன்னும் இந்தத் துறை செம்மையாகச் செயல்பட முடியும் என்ற வகையில் 1971-72ஆம் ஆண்டில் கம்பியில்லாத் தந்திக் கருவிகள், குற்றம் சார்ந்தஅறிவியல்ஆய்வுக்கூடக் கருவிகள், நிழற்படக்கருவிகள், ஆகியவைகளுக்கு மாத்திரம் இந்த அரசு செலவிட்ட தொகை ரூ. 24,87,228. 1972-73-ல் பிராட்மா இயந்திரம், நுண் திரைப்படக் கருவிகள், இரசாயன ஆய்வுக்கூடக்

கருவிகள் ஆகியவைகளுக்காகச் செலவிட்ட தொகை ரூ. 35,29,786. 1973-74-ல் மேலும் இதற்காக 43 இலட்சம் ரூபாய்; 1974-75-ல் நுண் மின் அலைத்திட்டம் என்ற நவீன முறையைப் புகுத்த ஏறத்தாழ 25.5 இலட்சம் ரூபாய்; ஆக இந்த வகையில் மொத்தம் ஒரு கோடியே 29 இலட்சம் வரையில் நவீன கருவிகளைக் காவல்துறையிலே பயன்படுத்த அரசின் சார்பில் நாம் செலவிட்டிருக்கிறோம்.

1971-ஆம் ஆண்டு தான் முதன்முதலாக 100 கிராமக் காவல் நிலையங்களுக்கு ஒவ்வொரு காவல்நிலையத்திற்கும் ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாமன்றத்தில் எழுப்பப்பட்டு, அதை நாம் ஏற்றுக் கொண்டு வழங்கினோம். அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இது வரையில் 440 மோட்டார் சைக்கிள்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் உள்ள 863 காவல் நிலையங்களில் 440 நிலையங்களுக்கு இப்போது வழங்கப் பட்டிருக்கின்றன. 1975-76-ல் மேலும் புதிதாக 50 மோட்டார் சைக்கிள்கள் காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன. இதையும் சேர்த்து 490 மோட்டார் சைக்கிள்களை நாம் வழங்குவது காவல்துறையினர் சம்பவங்கள் நடைபெற்றுவிடுகின்ற இடங்களுக்குச் செல்கின்ற நேரத்தில், விரைவாகத் தங்களுடைய பணியைச் செய்ய உதவும்.

இதைப்போலவே காவல் துறையினருக்கு சைக்கிள்கள் வேண்டும், அதை இந்த அரசு ஒப்புக் கொண்டு அவர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை இந்த மன்றத்தில் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டபோது, அதையும் 1973-ஆம் ஆண்டு அரசு ஏற்றுக் கொண்டு, 5000 சைக்கிள்களுக்கு முதற்கட்டமாக நாம் ஒப்புதல் தந்து, அந்த சைக்கிள்களுடைய விலையில் 40சதவிகிதத்தை அரசு உதவித் தொகையாக தருவது என்றும், மீதித் தொகையைக் கடனாகத் தவணை முறையில் செலுத்துவது என்றும், நாம் ஆணை பிறப்பித்தோம். அந்த 5000 மிதிவண்டிகளில் ஏறத்தாழ 2500 வண்டிகளைத்தான் காவல்துறையினர் இதுவரையில் பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் இன்னும் அதை வாங்க முன்வரவில்லை.

1967-ஆம் ஆண்டுவரையில் காவல்துறைக்கு இருந்த வாகனங்களுடைய எண்ணிக்கை 742. 1967-க்குப் பிறகு 1974 வரையில் காவல்துறைக்கு அதிகமாக வழங்கப்பட்ட வாகனங்கள் 906. ஆக மொத்தம் இன்றைக்கு 1,648 வாகனங்கள் காவல்துறைக்கு அமைந்திருக்கின்றன.

நான் இவைகளைச் சொல்லக் காரணம், காவல்துறை என்பது, அதிலேயிருக்கிற 45,000 காவலர்கள் மாத்திரம் இருந்து நடத்துவது என்பதல்லாமல், அவர்களுக்குரிய வசதி, வாய்ப்புக்களை அளிப்பதன் மூலம் தான் அந்தத் துறை நல்ல முறையில் விரைந்து செயல்பட முடியும் என்பதற்காக நாம் செய்துள்ள ஏற்பாடுகளைக் குறிப்பிட்டேன்.

863 காவல் நிலையங்களிலும் தொலைபேசி வைக்கப்பட வேண்டும் என்பது இதே மன்றத்தில் அனைத்துக்கட்சி உறுப்பினர்களாலும் வைக்கப்பட்ட கோரிக்கை. இன்றைக்கு 722 காவல் நிலையங்களில் தொலைபேசி வசதிகளை நாம் அரசின் சார்பில் வழங்கியிருக்கிறோம்.

பதவிகளிலேகூட எந்த அளவிற்குப் பதவிகளின் எண்ணிக்கைகள் உயர்ந்திருக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும்.

| | 1966-ஆம் ஆண்டு இருந்த பதவிகள் | 1974-ஆம் ஆண்டு உள்ள பதவிகள் |
|---|---|---|
| எஸ்.பி. ... ... | 29 | 63 |
| டி.எஸ்.பி. ... ... | 146 | 174 |
| இன்ஸ்பெக்டர்கள் ... | 369 | 597 |
| சப்-இன்ஸ்பெக்டர்கள் ... | 1,545 | 1,904 |
| ஏ.எஸ்.ஐ. ... ... | 118 | 527 |
| காவலர்கள் ... ... | 28,891 | 36,642 |



முதல்வர் கலைஞர்

ஆக இந்தத் துறையில் 'டெக்னிகல் லேன்' என்ற அளவில் பணியாற்றும் 3,000 பேர் நீங்கலாக, 1966-ஆம் ஆண்டு 35,617 பேராக இருந்த இந்தத் துறை, இப்போது 1974-ல் 45,691 பேராக வளர்ந்திருக்கிறது.


இந்த அரசின் சார்பில் நாம் தொடங்கிய குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக இந்தத் துறையிலே உள்ளவர்கள் எந்த அளவிற்குப் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கொண்டால், அரசு அலுவலாளர்கள் பணியில் இருக்கிறபோது மறைந்து விட்டால், இயற்கை எய்தி விட்டால், அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசின் சார்பில் பத்தாயிரம் ரூபாய் நிதி அளிப்பது என்று அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு, கிட்டத்தட்ட ஆயிரம் அரசு அலுவலர்களுடைய குடும்பங்கள் இந்த நிதியைப் பெற்றதில், காவல்

துறையைச் சேர்ந்தவர்கள் மட்டும், அதிலே 208 பேராவர். இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு காவல் துறையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த விகிதத்தில் 200 பேர் இறந்து கொண்டு தான் இருந்தார்கள் என்ருலும், அப்போதெல்லாம் அந்தக் குடும்பங்கள் திக்குத் தெரியாமல் தான் நின்று கொண்டிருந்தன. ஆக இந்தத் திட்டத்தின் கீழ் காவல் துறையிலே உள்ள குடும்பத்தினர் மட்டும் 208 குடும்பத்தினர் சென்ற ஆண்டு பயனடைந்திருக்கிருர்கள்.

நான் இந்தத் துறையில் பொறுப்பேற்றுக் கொண்டதும், போலீசார் மேலும் தீவிரமாகப் பணியாற்றுவதற்காக இந்தத் துறைக்காகத் தனியாக ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அது 133 சிபாரிசுகளை இந்த அரசுக்குச் செய்தது. அவற்றில் 116 சிபாரிசுகளை அரசு ஏற்றுக் கொண்டது. அதிலும் இப்போது 41 சிபாரிசுகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. மற்ற சிபாரிசுகளும் படிப்படியாக நிறைவேற்றப் படும். எல்லாச் சிபாரிசுகளுக்கும் தொடர் செலவு 2.81 கோடி, தொடராச் செலவு ஆறு கோடி என்ற அளவிற்கு இருக்கும். இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிற 41 சிபாரிசுகளுக்கும் ஆகிற தொடர் செலவு 93.67 இலட்சம். தொடராச் செலவு 18.05 இலட்சம்.

காவலர்களுக்குத் தனிப்படி, உணவுப்படி இவைகள் எல்லாம் ஹைதர் காலத்தில் இருந்தைப் போலவே இப்போதும் இருப்பதாகச் செழியன் சொன்னதாக நினைவு. அவர்களுக்கு அந்தப் படிகள் எல்லாம் உயர்த்திக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தினப்படி காவலர்களுக்கு ரூ. 1.75 என்றுஇருந்தது இப்போது மூன்று ருபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, பாதுகாப்புக்காகச் செல்கிற இடங்களுக்கு, உணவுச் செலவிற்காக அவர்களுக்கு ரூ. 2.00, 2.25 என்று முன்பு வழங்கப்பட்டது, இப்போது ரூ. 4.50 என்கிற அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

வீட்டு வாடகைப்படியைப் பொறுத்த வரையில் கூட, அவர்களுக்குப்போதுமானதாக இல்லை என்ற குறைபாட்டை ஆளுங் கட்சிச் சார்பில் பேசிய ஒரு நண்பர் குறிப்பிட்டார். வீட்டு வாடகைப்படி இன்ஸ்பெக்டர்களுக்கு நகர்ப் புறத்தில் இருந்தால் 80 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் அது இல்லை என்றும் இருந்ததை மாற்றி, இப்போது அவர்கள் நகர்ப் புறத்தில் இருந்தால் 150 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் 100 ரூபாய் என்றும் உயர்த்தி இருக்கிரேும். அதைப்போலவே வீட்டு வாடகைப்படி, சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு நகர்ப் புறத்தில் இருந்தால் 60 ரூபாய் என்றிருந்ததை இப்போது 100 ரூபாய் என்றும், வெளிப்புறத்தில் இருந்தால் 50 ரூபாய் என்றிருந்ததை இப்போது 80 ரூபாய் என்றும் உயர்த்தியிருக்கிரேும். தலைமைக் காவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகரிலே இருந்தால் 20 ரூபாய் என்று முன்பு இருந்ததை, இப்போது 40 ரூபாய் என்று உயர்த்தியும், வெளியூர்களில் இருந்தால் 20 ரூபாய் என்று இருந்ததை, இப்போது 30 ரூபாய் என்றும் மாற்றியிருக்கிரேும். புதிதாக ஏற்படுத்திய முதல் நிலைக் காவலர்களுக்கு வீட்டு வாடகைப்படி நகர்ப் புறத்தில் இருந்தால் 40 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் 30 ரூபாய் என்றும் அளித்து வருகிரேும். இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு உள்ளூரிலும், வெளியூர்களிலும் 14 ரூபாய் என்று வீட்டு வாடகைப்படி இருந்து வந்தது. அதை இப்போது நாம், நகர்ப் புறத்தில் இருந்தால் 30 ரூபாய் என்றும், வெளியூர்களில் இருந்தால் 25 ரூபாய் என்றும் மாற்றி அமைத்திருக்கிரேும்.




ஆக இந்த வகையில் அவர்களுடைய கஷ்டங்களையும், அரசின் நிதி ஆதாரங்களையும் மனத்தில் வைத்துக் கொண்டு முடிந்த அளவிற்கு உதவிகளைச் செய்த காரணத்தாலும், நவீன கருவிகளைக் வாங்கிக் காவல் துறைக்கு வழங்கிய காரணத்தாலும், காவல் துறைக்கு 13 கோடியாக இருந்த செலவு இன்றைக்கு 25 கோடியைத் தாண்டி இருக்கிறது.

ஆண்டு தோறும் காவலர்களை ஊக்கப்படுத்த, உற்சாகப் படுத்த, அவர்களுடைய வீரச் செயல்களைப் பாராட்ட, அண்ணு பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று முதலமைச்சர் வழங்குகிற பதக்கங்கள் என்ற வகையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டு—வெறும் பதக்கங்களாக மாத்திரமல்லாமல், சிறப்புப் பணி புரிந்த காவலர்களாக இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாயும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்களாக இருந்தால் இரண்டாயிரம் ரூபாயும், டி.எஸ்.பி.யாக இருந்தால் மூவாயிரம் ரூபாயும் — வீரச் செயல் புரிந்தவர்களாக இருந்தால் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் மூவாயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்த வகையில் 1969 லிருந்து 1974 வரையில் 23 பேர் வீரப் பதக்கம் பெற்றிருக்கிருர்கள். 129 பேர் சிறப்புப் பதக்கம் பெற்றிருக்கிருர்கள். இந்தப் பதக்கங்கள் டி.எஸ்.பி. யோடு நின்று விடுகிறது, எஸ்.பி.க்களுக்கும் இது வேண்டும் என்ற முறையீடு இருந்து வருகிறது. எஸ்.பி.க்கு பதக்கம் மாத்திரம் அளிக்கப்படும் ; பண முடிப்பு அளிக்கப்பட மாட்டாது என்பதையும், வரும் ஆண்டிலிருந்து எஸ்.பிக்களுக்கும் வீரப் பதக்கம் அல்லது சிறப்புப் பதக்கம் அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் செழியன் பேசுகின்ற நேரத்தில், இந்தப்போலீசார் எந்த வழக்கையும் கண்டு பிடிக்கவில்லை; என்ன செய்கிறது இந்தப் போலீஸ்? என்றெல்லாம் மிகுந்த ஆத்திரத்தோடு கேட்டார். நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். 1970-ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்ட ''கிரைம்ஸ் இன் இண்டியா'' என்கிற புத்தகத்திலிருந்து சில குறிப்புகளை சென்ற ஆண்டு இதே அவையில் நான் எடுத்துக் காட்டினேன். அதற்கடுத்து,

அவர்கள் வெளியிட்டிருக்கிற புத்தகம் ''கிரைம்ஸ் இன் இண்டியா'' என்பது 1971-ஆம் ஆண்டு புள்ளி விவரங்களாகும். மற்ற ஆண்டுகளுக்கான அந்தப் புத்தகம் இன்னும் வரவில்லை. கடைசியாக அவர்கள் வெளியிட்ட புத்தகத்தில் இருக்கிற ஆதாரங்களை வைத்துப் பார்த்தால் உண்மை தெரியும்:

| மாநிலம் | | 1971-ல் பதிவான குற்றங்கள் | குற்றங்கள் விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்ட சதவிகிதம் |
|---|---|---|---|
| உத்தரப் பிரதேசம் | ... | 2,36,328 | 55.38 |
| மராட்டியம் ... | ... | 99,125 | 66.04 |
| பீகார் ... | ... | 83,270 | 40.04 |
| மேற்கு வங்கம் | ... | 78,546 | 56.63 |
| ராஜஸ்தான் ... | ... | 36,743 | 52.93 |
| குசராத் ... | ... | 32,747 | 52.81 |
| பஞ்சாப் ... | ... | 11,433 | 54.03 |
| மைசூர் ... | ... | 36,557 | 54.03 |
| கேரளம் ... | ... | 29,712 | 37.15 |
| ஆந்திரம் ... | ... | 46,390 | 82.08 |
| தமிழ்நாடு ... | ... | 59,616 | 81.62 |

ஆக இரண்டு மாநிலங்களில்தான், தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் தான் குற்றங்கள் விசாரணைக்குப் பிறகு அதிக சதவிகிதம் தண்டிக்கப்பட்டிருக்கின்றன. என்ன செய்கிறார்கள் போலீசார்? என்று கேட்ட செழியனுக்கு, இதைத்தான் செய்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோவை செழியன்** : எங்கள் வீட்டில் நான்காயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் திருட்டுப் போனது இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை; அரசியல் வாதிகளுடைய குற்றங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை என்று தான் கேட்கிறேன்.

**முதல்வர்** : மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகின்ற நேரத்தில் மத்திய அரசின் அறிக்கைப்படி, நம்முடைய மாநிலத்தில் குற்றங்கள் எந்த அளவிற்குப் பதிவு ஆகி இருக்கின்றன, எந்த அளவிற்குத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தான் நான் இங்கே சொன்னேன்.

செழியன் அன்றைக்குக் கூட 60 சதவிகிதக் குற்றங்களில் 51 சதவிகிதம் அரசியல் குற்றங்கள் என்று சொன்னார். என்ன கணக்கில் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் சொல்லி விடலாம். என்ன கணக்குப் போட்டுச் சொன்னார் என்று நமக்குத் தெரியாது.

கொலை வழக்குகள் என்று எடுத்துக் கொண்டால் கூட, பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் 41 சதவிகிதம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் முதலில் குறிப்பிட்ட எல்லா மாநிலங்களையும் விட, தமிழ்நாட்டில் தான் 61 சதவிகிதம் கொலைக் குற்றங்களில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். கொள்ளை என்று எடுத்துக் கொண்டால் உத்தரபிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 6,004; அதில் 34 சதவிகிதம் தான் தண்டிக்கப்பட்டார்கள். பீகாரில் 2,015 குற்றங்கள் பதிவானவை; தண்டிக்கப்பட்டது 44 சதவிகிதம். ஆனால் தமிழ்நாட்டில் கொள்ளை என்ற வகையில் பதிவான குற்றங்கள் 22; தண்டிக்கப்பட்டவர்கள் 57 சதவிகிதம். வழிப்பறி என்று எடுத்துக் கொண்டால், உத்தரப் பிரதேசத்தில் பதிவு ஆன குற்றங்கள் 10,049 ; தண்டிக்கப்பட்டது 48 சதவிகிதம். தமிழ்நாட்டில் பதிவு ஆன குற்றங்கள் 124; தண்டிக்கப்பட்டது 68.54 சதவிகிதம்.

தீண்டாமை ஒழிப்பு சட்ட குற்றங்களைப் பற்றி கே.டி.கே. அவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்புக் குற்றங்களை எவ்வளவு கடுமையாக நாம் பாவிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு எப்போதும் பின் வாங்காது. 1967-ஆம் ஆண்டு 134 குற்றங்கள் பதிவாகி, அதிலே கோர்ட்டிற்கு 129 தாக்கல் செய்யப்பட்டு, 94 குற்றங்கள் தண்டிக்கப்பட்டிருக்கின்றன. 1968-ல் பதிவு ஆன குற்றங்கள் 37 ;கோர்ட்டில் தாக்கல்செய்யப்பட்டவை 33; தண்டிக்கப்பட்டவை 19; 1972-ல் பதிவானவை 882; கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டவை 872; தண்டிக்கப்பட்டவை 590; 1973-ல் பதிவானவை 1633; கோர்ட்டில் தாக்கல்செய்யப்பட்டவை 1,628; தண்டிக்கப்பட்டவை 1,117. 1974-ல் பதிவானவை 954 ; கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டவை 911 ; தண்டிக்கப்பட்டவை 516. மேலும் கடுமையாக இதிலே இருக்க வேண்டுமென்று போலீசார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் ; ஆணையிடப்பட்டிருக்கிறார்கள்.

சில முக்கிய வழக்குகளில் நம்முடைய காவல் துறையினர் எவ்வளவு திறமையைக் காட்டியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் பொன்னப்ப நாடார் அவர்களும், சுப்ரமணியம் அவர்களும், அவர்களே, 'போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற கண்காட்சியைப் பார்த்தோம்; அது ஒரு கோணம்; இன்னொரு கோணம் இருக்கிறது,' என்று சொன்னார்கள். அவர்களுடைய வாதத்தை நான் மறுக்கவில்லை.



பொதுவாகவே காவலர்கள் 45,000 பேர்களில் அத்தனை பேரும் நல்லவர்கள் என்று வாதிட நான் எழுந்து நிற்க வில்லை. ஆங்காங்குச் சில குறை பாடுகள் இருக்கின்றன. ஆளுங் கட்சியின் சார்பில் பேசியவர் களும், எதிர்க் கட்சியின் சார் பில் பேசியவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே போலீசார் ஒருதலைப் பட்சமாக இருக்கிறார்கள் என்பதற்கு இடமில்லாத வகை யில் இந்த மன்றத்தில் இருக் கிற அத்தனை பேரும் அவரவர் களுக்குள்ள குறையை, அந்த அந்தப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்துச் சொன் னதிலிருந்து, போலீஸார் ஆளுங் கட்சிக்குத்தான் சார்புள்ளவர் களாக இருக்கிறார்கள் என்ற வாதம் அடிபட்டுப் போகிறது.

இதையெல்லாம் மீறி, காவல் துறையிலே திறமையான, விஷ ஊசி போன்ற வழக்குகளை எல்லாம் இந்தியாவில் இருக் கும் அனைவரும் பாராட்டுகின்ற அளவிற்குக் கண்டுபிடித்தவர் கள் எல்லாம் இருக்கிறார்கள் என்பதை, உடனடியாக ஒவ் வொரு வழக்கையும் கண்டு பிடிக்கவில்லை என்று வாதமிடுப வர்களுக்குப் பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விஷ ஊசி சம்பந்த மான வழக்கில் 19—12—70 -ல் ஒருவரும், 1971-ல் மார்ச் மாதத்தில் ஒருவரும், ஜூன் மாதத்தில் ஒருவரும், 9—10—71-ல் ஒருவரும், 7—1—72-ல் இன்னொரு வரும், 24—6—72-ல் இன் னொருவரும், இறந்திருக்கிறார் கள். கடைசியாக 26—10—72 -இல் இறந்து போன கீழக் கரையைச் சேர்ந்த தைக்கா தம்பியின் மாமனார் சென்னை ஏழு கிணறு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில்தான் புலன் விசாரணையே ஆரம்பம் ஆயிற்று. ஆக 1970-ல் நடைபெற்ற கொலை சம்பவங் கள் 1972 வரையில் புலன் விசாரணைக்கு ஆளாகாமல் அவ் வளவு மர்மமாக நடைபெற் றது. ஆயினும் நம்முடைய திறமை மிகுந்த காவலர்கள் இந்தக் கொலையைக் கண்டு பிடித்து, கொலையில் ஈடுபட்ட வர்களுக்கு எல்லாம் தண்ட னையை வாங்கிக் கொடுத்திருக் கிறார்கள்.

அதைப் போலவே கமிஷனர் அலுவலகத்திற்குச் சென்ற போது, டெலிவிஷனில் ஒன் றைப் பார்த்திருக்கலாம். அதிலே ஒரு தனவந்தரை எப்படிக் கொன்று, எந்தப் பொருளும் இல்லாமல் ஏமாந் தார்கள் அந்தத் திருடர்கள் என்பதையும்; அவர்கள் எவ் வளவு இளம் வயது படைத்த வர்கள் என்பதையும் பார்க் கும்போது, இந்தச் சமுதாயத் தில் அப்படிப்பட்டவர்களை எல்லாம் திருத்துவதற்கு எவ் வளவு பெரிய பிரச்சாரம் தேவைப்படுகிறது என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். சமுதாயத்தில் இருக்கிற பொருளாதார ஏற் றத்தாழ்வுகள்தான் இதற்கு எல்லாம் காரணமாக ஆகின் றன. அதே நேரத்தில் அவை களுக்கு இது தான் மார்க்கமா என்ற கேள்விக்கும் நாம் விடை கண்டாக வேண்டும். மிகச் சாதாரண வாலிபர்கள், சின் னஞ் சிறியவர்கள், எப்படி அந்தக் கொலையைச் செய் தார்கள் என்பதை மறுபடியும் காட்சியாக ஆக்கிக் காட்டியிரு கிறார்கள். அந்த வழக்கில் மிகத் திறமையாகக் காவல் துறையினர், அவர்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.




அகில உலக ஏமாற்றுக் காரன் — பாஸ்போர்ட்டை வைத்துக் கொண்டு ஏமாற்றிய வன்—ஜெர்ரி லாய்டு என்ப வன் சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் தங்கி, தொடர்ந்து இந்த ஏமாற்று வேலையைச் செய்து கொண்டிருந்தவன், நம்முடைய காவல் துறையின ரால் பிடிக்கப்பட்டு, அவன் மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது.


முத்திரைத் தாள் வழக்கு என்ற வழக்கில் திறமையாக முத்திரைத் தாளை அச்சிட்டு விற்பனை செய்து கொண்டிருந் தவர்களை, காவல் துறையினர் அவர்களுக்குக் கிடைத்த தகவ லின் பெயரில், அண்ணா நகரில் உள்ள ஒரு பங்களாவைச் சோதனை செய்து, கள்ள வில்லை கள் எல்லாம் கண்டுபிடிக்கப் பட்டு, 15 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டு, ரூபாய் 1,17,165 மதிப்புள்ள நீதி மன்ற ஐந்து ரூபாய் கள்ள வில்லைகளும், ஒரு ரூபாய் கள்ள வில்லைகளும் கைப்பற்றப்பட்டி ருக்கின்றன. வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இது நம்முடைய காவல்துறை யின் திறமைக்கு ஒரு சான்று ஆகும்.

அதைப் போலவே, கடந்த நான்கைந்து ஆண்டுக்காலத்தில் சென்னையில் ஐந்தாயிரம் களவு போய்விட்டது, பத்தாயிரம் போய்விட்டது என்றெல்லாம் செய்தி வந்து கொண்டிருந் தது. செழியன் கூட நான்கா யிரம் ரூபாய் வீட்டிலே காணா மல் போய்விட்டது என்று சொல்கிறார். அதைப்பற்றி விசாரிக்க வேண்டும்.

**செழியன் :** நான்காயிரம் ரூபாய் மதிப்புள்ள பாத்திரங் கள் திருட்டுப் போய்விட்டன என்று ஏற்கெனவே நான் போலீசுக்கு புகார் கொடுத் திருக்கிறேன்.

**முதல்வர் :** செழியன் போலீ சுக்குப் புகார் செய்கிற நேரத் தில் எல்லாம் அது கவனிக்கப் படுகிறது. ஒரு முறை அவர் தனக்கு ஏதோ பயங்கரமான டெலிபோன்கள் எல்லாம் வரு வதாகச் சொன்னவுடன் அவரு டைய வீட்டைச் சுற்றி போலீஸ் காவலே போடப்பட்டிருந்தது அவருக்கே தெரியும். ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை அவர் வீட்டைச் சுற்றி போலீஸ் ஜீப் ரோந்து போய்க் கொண்டிருந் தது. ஆகவே செழியன் அல்ல; யார் தங்களுக்கு ஆபத்து என்று தெரிவித்தாலும், உட னடியாக அது கவனிக்கப்படு கிறது. செழியன் வீட்டிற்கு இரண்டு காவலர்களை அவர் வீட்டு வாசலில் போடப்பட் டார்கள். ஆகவே தகுந்த பாதுகாப்பு அனைவருக்கும் அளிக்கப்படுகிறது.

நான்கைந்து ஆண்டுக் கால மாகச் சென்னை நகரில் திருட் டைப்பற்றித் தகவல் வந்து கொண்டேயிருந்தது. அதைக் காவல் துறையினர் ஓர் அறை கூவலாகவே எடுத்துக் கொண் டார்கள். இறுதியாக கிரீன் வேஸ் சாலைக்கு அருகேயுள்ள ஓர் இல்லத்தில் நடைபெற்ற ஒரு களவின் தொடர்பாக நம் முடைய போலீசார், இரண்டு பேரை சென்னையில் ஒரு விடுதி யில் கைது செய்தார்கள். அந்த இரண்டு பேரும் கல்கத் தாவைச் சேர்ந்த வாலிபர்கள்;



அவர்களிடம் 75,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்களும், அதற்கு முன்பு களவாடப்பட்ட நகைகளும் இருந்தன. அவைகள் மீட்கப்பட்டன. அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பிடிபட்டதன் மூலம் இது வரையில் 2.5 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. இங்கேயிருந்து நம்முடைய காவல் துறையினர் கல்கத்தாவிற்குச் சென்று, மாறுவேடத்திலே அலைந்து திரிந்து, குற்றவாளிகளை எல்லாம் மிகத் திறமையோடு கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த வழக்கில் முதன் முதல் காரணமாக இருந்த அதிகாரிகள் யார் என்ற விவரம் கூற முடியுமா ?

**முதல்வர் :** அந்த அதிகாரியின் பெயர் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த அதிகாரியின் பெயர் அண்ணா பதக்கம் வழங்கப்படுகிற நேரத்தில் நினைவில் வைத்துக் கொள்ளப் படும்.

கோவை செழியன் பேசுகின்ற நேரத்தில் சிலைகளைப் பற்றிச் சொன்னார். தாமஸ் நாடார் என்பவரைப் பற்றிச் சொன்னார். இந்தச் சிலை வழக்கில் இரண்டு மூன்று முறை அவர் ஈடுபடுத்தப்பட்டு விடுதலையும் ஆகியிருக்கிறார். இப்போது தஞ்சை பெரிய கோவிலிருந்து பிரதோஷ நாயகர் சிலைத் திருட்டு சம்பந்தமாக 766/73 என்ற குற்ற எண் பதிவு செய்யப்பட்டு, தஞ்சைக் காவலர்களுடைய விசாரணையில் இருந்தது. அந்த விசாரணையில் புலன் எதுவும் கிடைக்கவில்லை. பிறகு அரசு இந்த வழக்கை சி.ஐ.டி. போலீசார் மூலமாக விசாரிக்க வேண்டும் என்று கேட்டு, ஐ.ஜி. அவர்களுடைய உத்தரவின் பேரில் தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறையினர் இந்தச் சிலைத் திருட்டு வழக்கின் விசாரணையை 3—1—75 அன்று மேற்கொண்டார்கள். விசாரணையைச்சிறப்பாகச்செய்த குற்றப் புலனாய்வுத் துறையினர், துரைசாமி என்கிற சப்-போஸ்ட் மாஸ்டரை 24-2-75-ஆம்தேதியும், அவருக்குத் துணையாக இருந்த சேலத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவரை 20—3—75-ஆம் தேதியும் கைது செய்தனர். துரைசாமி மற்றும் ராமகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் அம்மாப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 70/75, 25—2—75-ஆம் தேதி பதிவு செய்து அதில் சம்பந்தப்பட்ட கம்பயர்நத்தம் பெருமாள் கோவில் செல்வர் சிலையைக் கைப்பற்றினார்கள். தஞ்சை மேற்குக் காவல் நிலையத்தில் குற்ற எண். 459/73, 30—3—75-ஆம் தேதி பதிவு செய்து அதில் சம்பந்தப்பட்ட தீப நாச்சியார் சிலையை, சுமார் 10,000 ரூபாய் மதிப்புள்ளது, அதனைக் கைப்பற்றினார்கள். இவ்விருவர் வாக்குமூலத்தின் பேரில், கூகூரில் சிவன் கோயிலிலிருந்து ஒரு சிலை களவாடியதாகக் கிடைத்த புலன் பேரில், நாச்சியார்கோவில் காவல் நிலையக் குற்ற எண். 89/75, 8—3—75-ஆம் தேதி பதிவு செய்தார்கள். அதில் சம்பந்தப்பட்ட சிலையை எதிரிகள் தாமஸ் நாடாருக்கு விற்றதாகத் தகவல் கூற, அதன் மேல் தாமஸ் நாடார் 8—3—75 முதல் தேடப்பட்டு வருகிறார். அவர் தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கண்டுபிடித்துச் சிலையைக் கைப்பற்றி மேல் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. மேற்கொண்டு தகவல்கள் இருக்குமேயானால், நண்பர் செழியன் தவறாக எடுத்துக் கொள்ளாமல், அவர் எங்கே இருக்கிறார் என்ற தகவலைச் சொல்வாரானால், உதவியாக இருக்கும். தாமஸ் நாடாரை நான் கூடப் பார்த்திருக்கிறேன். பார்த்தவுடன் அடையாளம் தெரிந்துவிடும். செழியன் மாத்திரமல்ல, யார் வேண்டுமானாலும் அவரைப் பார்த்தவுடன் போலீசாருக்குத் தகவல் தந்து உதவி செய்வார்களானால், நன்றாக இருக்கும்.

**செழியன் :** முதலமைச்சர் சொல்வதைப் பார்த்தால், தாமஸ் நாடாரை ஏதோ நான் தெரிந்து வைத்திருப்பதுபோல் சொல்கிறார். முதலமைச்சராவது பார்த்திருக்கிறார். நான் அவரைப் பார்த்தது கூடக் கிடையாது. மற்றவர்கள் தரும் ஆதாரபூர்வமான கருத்துக்களைத்தான் நாங்கள் இங்கே கூறுகிறோம். எனக்குக் கிடைத்த விவரம், மைலாப்பூரில் உள்ள ஓட்டலில் அந்த நபர் நீண்ட காலம் தங்கி, அவரோடு இன்னும் சில பெரிய மனிதர்கள் தங்கியபோது, டெல்லி சி.பி.ஐ. இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ 45 நாட்கள் அங்கே தங்கி விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். எனக்கு டெல்லியில் இருக்கிற அதிகாரிகள் இந்த விவரங்களைச் சொன்னார்கள். வேண்டுமானால் யார் யார் தங்கினார்கள் என்ற விவரங்களைக் கேட்டால் கூட நான் அந்த ரெகார்டுகளைத் தரத் தயாராக இருக்கிறேன்.

**முதல்வர் :** அதனால்தான் சொல்கிறேன். செழியனுக்கு இவ்வளவு விவரம் தெரிந்திருக்கிறது. தன்னுடைய வீட்டிற்கு போன் செய்கிறார்கள் என்பதை உடனடியாக போலீசாருக்குச் சொன்ன செழியன் அவர்கள், இப்படி ஒரு சிலையைத் திருடிய ஆசாமி தலை மறைவாக இருக்கிறார் என்பது தெரிந்திருக்கும் போது, கடமை உணர்வோடு காவல் துறைக்கு போன் செய்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும்.

**செழியன் :** இது பல மாதங்களுக்கு முன்னால் நடைபெற்றது. ஆனால் எனக்கு மூன்று நாட்களுக்கு முன்னால்தான் இந்தச் செய்தியைச்சொன்னார்

கள். அப்போதே தெரிந்திருந்தால் முதலமைச்சருக்கே தெரிவித்திருப்பேன். அவர் முதலமைச்சர் மட்டுமல்ல; என்னுடைய நண்பரும், கூட; அவரிடம் சொல்லி, இதைச் செய்யுங்கள் என்று சொல்லியிருப்பேன்.

**முதல்வர் :** என்னை இன்னும் நண்பராக வைத்துக் கொண்டிருப்பதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

**தங்கமணி :** சிலை திருடுகிறவர்கள் தாங்களே சம்பந்தப் படாமல், ஏற்பாடு செய்து அதைச் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**முதல்வர் :** சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. போலீசார் இதில் தீவிரமாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ஐ.ஜி. அவர்கள் ''இண்டர்போல்'' ஸ்தாபனத்தின் துணைத் தலைவர் என்ற முறையில், அங்கே எடுத்துச் சொல்லி, வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார். வெளிநாடுகளுக்கு இவைகள் ஏற்றுமதி செய்யப்படுவதால்தான் இவற்றிற்கு அதிகமாக கிராக்கி ஏற்படுகிறது. இங்கேயென்றால் ஐந்தாயிரம், பத்தாயிரம் என்கிற அளவோடு முடிந்து விடுகிறது. வெளிநாடுகளுக்குச் செல்லும்போது இலட்சக் கணக்கில் மதிப்புஉண்டாகிறது.

**திருமதி அனந்தநாயகி:** தொன்மைவாய்ந்தது என்பதற்காக மட்டும் திருடுகிறார்களா? கலை நுணுக்கம் நிறைந்தது என்பதற்காகத் திருடுகிறார்களா ? அப்படி என்றால் நாமே நம்முடைய கலைஞர்களை வைத்து செய்து விற்கலாமே?

**முதல்வர் :** கலை உணர்விற்காக திருடுவதில்லை; விலை உயர் விற்காகத் திருடுகிறார்கள். நாமே செய்து விற்கலாம் என்றால் வெளிநாட்டார் புதிய சிலைகளை வாங்கத் தயாராக இல்லை. அம்மையார் புதிய சிலைக்கு எண்ணெய் தடவி விற்கலாம் என்று சொல்கிறார்கள். ஒரு வக்கீலாக இருந்துகொண்டு இப்படிச் சொல்வது முறை அல்ல. இது சிலை திருடுகிறவர்களுக்கு வேண்டுமானால் பயன்படும் யோசனையாக இருக்கும். கே. டி. கே. கேட்டபடி, வேறு யாராவது அப்படித் திருடச் சொன்னாலும், அது நிரூபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் வழக்கு போடப்படுகிறது.

கே. டி. கே. அவர்கள் நடன ஆசிரியர் மலேசியா மகாலிங்கம் பற்றிச் சொன்னார். மலேசியா மகாலிங்கம் மரணம் குறித்து போலீஸ் கமிஷனர் முதலில் ஓர் அறிக்கை கொடுத்தார்; மறுபடியும் மாற்று அறிக்கை கொடுத்தார் என்று சொன்னார்.

என்னுடைய வீட்டில் மலேசியா மகாலிங்கம் பற்றி வந்த செய்திப்பத்திரிகைகளை எடுத்து வா என்றதும், மலேசியா சாம்பசிவம் கொலை செய்யப்பட்டது குறித்து வந்த பத்திரிகைகளைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்கள். உள்ளபடியே கே. டி. கே. அவர்கள் சாம்பசிவம் கொலை செய்யப்பட்டது பற்றிப்பேசியிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஏனென்றால், மலேசியா சாம்பசிவம், மலேசியா கணபதியோடு அங்கு உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கணபதி தூக்குக்குப்போன பிறகு, இந்திய அரசியலின் கருணை காரணமாக விடுவிக்கப்பட்டுத் தமிழகத்திற்கு வந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அந்த எண்ணங்கள் கொண்டவர்; அவர் கஷ்டப்படும்போது எனக்குக் கடிதம் எழுதினார். நான் உடனே முதலமைச்சர் நிதியிலிருந்து ஓரளவிற்கு உதவி செய்தேன். அதுகுறித்து கே.டி.கே.. அவர்கள் என்னிடம் பாராட்டுக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அவரைச் சில தினங்களுக்கு முன்னால் எதிரிகள் கொன்றுவிட்டார்கள் என்று கேள்விப்பட்டு நான் மெத்தவும் வருந்தினேன்.

ஆனால் கே.டி.கே. சொன்னது மலேசியா மகாலிங்கம் விவகாரம். இந்த விவகாரத்தில் கமிஷனர் இரண்டு முரண்பட்ட அறிக்கை கொடுத்ததாகச் சொல்வது தவறாகத் தான் படுகிறது. நான் எல்லாப் பத்திரிகைகளையுமே தேடிப் பார்த்தேன். அவர் 6-ஆம் தேதி இரவு விழுந்து இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வரும் போது, பத்திரிகைகளில் மகாலிங்கம் கொலை என்று தான் தலைப்புப் போடப்பட்டது. கமிஷனர் சொன்னதாக அப்படி வரவில்லை. கமிஷனர் சொல்லியிருப்பது—மகாலிங்கம் கொலை செய்யப்பட்டிருப்பது பற்றி, கமிஷனரிடம் நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு கமிஷனர் சொன்னது, ''பிரேதப்பரிசோதனை அறிக்கை கிடைத்த பிறகு தான் இது பற்றி எதுவும் கூற முடியும்; அவர் உடலில் வெளிக் காயங்கள் இல்லை என்றாலும், உள் காயங்கள் இருக்கிறதா என்பது பிரேதப் பரிசோதனையின் போதுதான் தெரியும்''; அதற்குப் பிறகு பிரேதப் பரிசோதனை நடந்தது. அதில் பஞ்சாயத்தார், இது மேலேயிருந்து கீழே விழுந்து இறந்தது என்று அந்த ஐந்து பேர் முடிவு செய்தார்கள். அந்த முடிவைத்தான் மறுபடியும் போலீஸ் கமிஷனர் மலேசியா மகாலிங்கம் செத்தது எப்படி என்று நிருபர்கள் கேட்டபோது பதிலாகச் சொல்லியிருக்கிறாரே அல்லாமல், கொலை என்று அறிவித்துவிட்டு, மறுபடியும் தற்கொலை என்று அறிவித்தார் என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல.

இன்னொன்றும் தங்கமணி சொன்னார். ''மலேசியா மகாலிங்கம் கொலை செய்யப்படு



கிறார்; கமிஷனர் அறிவிக்கிறார் கொலை என்று; மறுநாள் தற்கொலை என்று கமிஷனர் அறிவிக்கிறார்; அதற்கு மறுநாள் அவர் அடிஷனல் ஐ.ஜி. ஆகிறார்''—கே.டி.கே. தங்கமணி போன்றவர்கள் இப்படிப் பேசுவது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் அதற்கும், இதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அடிஷனல் ஐ.ஜி. பதவிக்கு ஐ.ஜி. அவர்களிடமிருந்து 'பிரபோசல்' வந்து, அதற்கு அரசாங்கத்தின் சார்பில் நான் கையெழுத்துப் போட்ட தேதி 5—8—74. மகாலிங்கம் மாடியிலிருந்து விழுந்து இறந்தது 6—8—74. ஆகவே இரண்டையும் இணைத்துப் பேசுவது முறையாகாது.

இவர் எப்படி அடிஷனல் ஐ.ஜி. ஆகலாம்? செழியன் கூட வேண்டுமென்றே இதைச் செய்தீர்கள் என்றார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மேலேயிருந்து விழுந்து இறந்தார் என்றால், தானாகவும் விழுந்து இறந்திருக்கலாம். அல்லது நான்கு பேர் சேர்ந்து தள்ளிவிட்டும் இறந்திருக்கலாம். அதைத்தான் சொன்னேன்.

**முதல்வர் :** முதலில் கொலை என்று கமிஷனர் அறிக்கை விட்டார்; பிறகு தற்கொலை என்று அறிக்கை விட்டார் என்று சொன்னதற்குத்தான் விளக்கம் தந்தேன். கொலை என்று அறிக்கை விட்ட கமிஷனர், மறுநாள் தற்கொலை என்று அறிக்கைவிட்டதும், அவருக்குப் பதவி கொடுக்கப்படுகிறதென்றால் என்ன காரணம் என்று மர்மமாகப் பேசியதற்குத்தான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

அடிஷனல் ஐ.ஜி. பதவி நம்முடைய மாநிலத்தில் மாத்திரமல்ல; எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. மத்திய அரசு அடிஷனல் ஐ.ஜி. பதவி ஒன்றைத் தமிழகத்திற்குத் தந்தது. அதை யாருக்குத் தருவது என்கிற நேரத்தில் எந்த முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. அருள் அவர்கள் ஐ.ஜி. யாக இருக்கிறார். அவருக்கு அடுத்ததாக இருக்கிற ஸ்டிரேசி 'ஐ.ஜி. ஃபுட்-செல்' என்ற பதவியில் இருக்கிறார். அதற்கு அடுத்த, சங்கரன் நாயர் டெல்லியில் ஐ.ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். அதற்கடுத்த, சிங்காரவேலுவும், குப்புசாமியும் ஒய்வு பெற்று விட்டார்கள் ; ஆறாவதாக இருக்கிற ஆர். என். மாணிக்கம் டெல்லியில் ஐ.ஜி. பதவிக்குச் சமமான பதவியில் இருக்கிறார். ஏழாவதாக இருப்பவர்தான் ஷெனாய் ; ஆகவே எல்லா வகையிலும் அந்தப் பதவிக்குத் தகுதியான வருக்குத்தான் அடிஷனல் ஐ. ஜி. என்கிற அந்தப் பதவி தரப்பட்டிருக்கிறதே அல்லாமல், எந்த முறைகேடும் இதில் நடைபெறவில்லை.

விசாரணைகளின் அறிவிப்புகள் எல்லாம் இங்கே வைக்கப் படவில்லை; வைக்கப்பட்ட அறிவிப்புகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அனந்தநாயகி அம்மையார் இங்கே குறிப்பிட்டார்கள். பெரிய குப்பம் நிகழ்ச்சி பற்றி ஏன் அறிக்கை வைக்கவில்லை என்று கேட்டார்கள். புதிய மாறுதல் முன்பிருந்த அரசுகளுக்கும் இப்போதுள்ள அரசுக்கும் உண்டு. அதாவது முன் பெல்லாம் விசாரணையே கிடையாது. விசாரணை நடந்தால்தானே ஏன் அறிக்கையைச் சபையில் வைக்கவில்லை என்று கேட்க முடியும்? இப்போது உள்ள தொல்லை எல்லாம் நாங்கள் விசாரணை வைத்து விடுகிறோம். அதனால் அறிக்கை எங்கே, எங்கே என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அதிலும் இது ஒரு 'ஜுடீஷியல் என்கொயரி' கூட அல்ல; ஜுடீஷியல் என்கொயரியின் அறிக்கைகள் எல்லாம் வைக்கப்படுகின்றன. ஓர் அதிகாரியினுடைய விசாரணை அறிக்கை வைக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர்கள் விரும்புவார்களானால், அதையும் வைக்கத் தயாராக இருக்கிறோம்.


**திரு. பொன்னப்ப நாடார்:** அது சம்பந்தமாகப் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்ற காரணத்தினால், அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்தால் பெரிதும் உதவியாக இருக்கும்.

**முதல்வர் :** அது அச்சாகிக் கொண்டிருக்கிறது. முடிந்ததும் இந்த அவையில் வைக்கப்படும். ஆனால் அதிலே தரப்பட்டிருக்கிற குறிப்புக்களை மாத்திரம் இங்கே படிக்க விரும்புகிறேன்.

1. இரண்டு தனிப்பட்ட நபர்களிடையே எழுந்த ஒரு சாதாரணப் பூசல் அரசியல் காரணமாக அசாதாரணமாக மிகைப்படுத்தப்பட்டு, அரசியல் இலாபம் கருதி, தேவையற்ற முறையில் காவல் துறையினர் மீதும், ஏதுமறியாத மற்றவர்கள் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

2. 12—5—1973 அன்று காவல் துறையினர் பெரிய குப்பம் கிராம மக்களைத் துன்புறுத்தியதாகவும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும், அக் கிராமத்துப் பெண்களை மானபங்கம் செய்ததாகவும் கற்பழித்ததாகவும் கூறப்பட்ட புகார்கள் தகுந்த ஆதாரமற்றவையாதலால் அவைகள் நிராகரிக்கப்பட வேண்டியவையாகும்.

3. 13, 14 மே, 1973 ஆகிய நாட்களில் போலீசார் பெரிய குப்பத்தில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டு, ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை ஆதலால் அக் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ள இயலாததாகும்.




4. திரு. மதுராந்தகம் ஆறுமுகம், எம்.எல்.ஏ., திரு. செய்யூர் பாலகிருஷ்ணன், ஆகிய தி.மு.க பிரமுகர்களை இச்சம்பவங்களில் சம்பந்தப்படுத்தியது தேவையற்றதும், நியாயமற்றதும், அரசியல் நோக்கமுடைய செயலும் ஆகும்.

5. கிராம மக்களுடைய உடைமைகளுக்குச்சேதம் விளைவித்ததற்குக் காவல் துறையினர் பொறுப்பாளிகள் என்று கூற முடியாது. அச் செயல்களை விஷமிகளும் சமூக விரோதிகளும் செய்திருக்கக் கூடும்.

மேலும் இக்குழு கீழ்க் கண்ட பரிந்துரைகளை அரசுக்குக் கூறியுள்ளது :

1. பெரிய குப்பம் கிராமம் ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்துள்ளது. அதற்குச் சரியான போக்குவரத்து வழிகள் அமையாததால் இத்தகைய சம்பவங்கள் நிகழ ஏதுவாகின்றன. எனவே அவ்விடத்திற்கு அருகில் பக்கிங்காம் கால்வாயைக் கடப்பதற்கு வசதியாக, தேவையான இடங்களில் பாலங்கள் அமைக்க வேண்டும்.

2. கடற்கரையோரப் பகுதிகளாகிய இவ்விடங்களில், கிராமங்களின் பாதுகாப்பிற்காக ஒன்று அல்லது இரண்டு காவல் நிலையங்களை—அவுட் போஸ்ட்களை அமைக்க வேண்டும்.

3. இந்நிகழ்ச்சியில் கிராம முன்சீஃப் யாதொரு அக்கறையும் காட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

4. இம்மாதிரி நிகழ்ச்சிகளின்போது சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் உயர்மட்ட அதிகாரிகள், நிகழ்விடங்களுக்கு உடனடியாகச் செல்வது நிலைமையைக் கட்டுப்படுத்த உதவுவதோடு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவும் உண்மையான செய்தியை வெளிப்படுத்தவும் உதவும்.

விசாரணை ஆணைக் குழுவின் தீர்ப்புகளை அரசு ஏற்றுக்கொண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவைகள் இந்த அவையில் வைக்கப்படும்.

பாளையங்கோட்டை சம்பவம் பற்றி வைக்கப்பட்ட அறிக்கைக்கு நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டது என்று அனந்த நாயகி அம்மையார் கேட்டார்கள். அங்கே ஒன்பது நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் ராசசேகரன் 17—3—73 அன்று மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார். குற்றஞ் சாட்டப்பட்ட மற்ற எட்டுப் பேர்கள் மீது திருநெல்வேலி தலைமை மாஜிஸ்டிரேட் முன்பாக தொடர்ந்து வழக்கு நடத்தப்பட்டது. திருநெல்வேலி தலைமை மாஜிஸ்டிரேட் 27—12—74 அன்று இன்ஸ்பெக்டருடைய மகன்கள் மோகன் குமார், வசந்தகுமார் மற்றும் நான்கு காவலர்கள் ஆகியோரைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தார்.. மோகன் குமாரும், வசந்த குமாரும் குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் 4 (1) விதியின் கீழ் விடுவிக்கப்பட்டனர். நான்கு காவலர்களுக்கு மூன்று மாத கால அளவுக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு தலைமைக் காவலர்கள் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்ததை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யலாம் என நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். அதை அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிளைவ் ஆஸ்டல் சம்பந்தமாக, அவைகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க திரு. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருந்தது. அதிலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அலுவலாளர்கள் இருக்கின்ற காரணத்தால் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனையும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவைகளைப் பற்றிக் கார்த்திகேயன் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்.

அரசியல் கிளர்ச்சிகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு அரசியல் கிளர்ச்சிகளில் இந்த அரசு, நான் அடிக்கடி சொல்வதைப் போல், 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற குறள் மொழிக்கேற்ப நடந்து வந்திருக்கிறது.


7—8—70-ல் வலது கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய நிலப் பறிப் போராட்டத்தில் 12,757 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் 30—8—70 அன்று விடுதலை செய்யப்பட்டார்கள். தண்டனை காலம் முடிகின்றவரை இருந்துதான் தீர வேண்டுமென்று யாரையும் வைக்கவில்லை. முன்பு நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த போதெல்லாம் அப்படியில்லை. நாங்கள் எல்லாம் மூன்று மாத காலம் என்று தண்டிக்கப்பட்டால், அதிலே ஒரு மணி நேரம் கூட குறைவாக யாரும் எங்களை விடுதலை செய்தது கிடையாது. இன்றைக்குத் தான் இந்த அரசு தண்டனைக் காலம் முடிவதற்குள்ளாக அரசியல் கைதிகளை விடுதலை செய்கிற அந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டு ஒத்துழையாமை இயக்கம் என்ற பெயரால் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. நல்லசிவம் அவர்களும், மற்றும் ஐவரும் கைது செய்யப்பட்டு, அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்தப் போராட்டத்தில் நாங்கள் எல்லாம் கைது செய்யப்பட்டோம். ஆனால் தண்டிக்கப்படாமல் விடுதலை பெற்றோம். ஆகவே தண்டிக்கப்பட்டு விடுதலை பெற்றோம் என்று சொல்வது உண்மையல்ல.

**முதல்வர்:** மொத்தம் கைது செய்யப்பட்ட 12,757 பேர்களில், 30-ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டவர்கள் 11,651; மன்னிப்புக் கடிதம் கொடுத்து விடுதலை பெற்றவர்கள் 1,048; தண்டனை பெற்ற பின் அரசின் ஆணையின்பேரில் விடுதலை செய்யப்பட்டவர்கள் 58. நான் இந்த விவரங்களைச் சொல்ல வேண்டாமென்று கருதினேன். திரு. தங்கமணி கேட்டதால் சொன்னேன்.

உணவு, வேலையில்லாமை ஒழிப்புப் போராட்டம் என்ற பெயரால் நடைபெற்ற போராட்டத்தில், 3—10—72 முதல் 5—10—72 வரை இந்தியக் கம்யூனிஸ்ட்கள் 3,505 பேர் கைது செய்யப்பட்டு, அன்று மாலையே விடுவிக்கப்பட்டார்கள். 18—10—72 முதல் 20—10—72 வரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் நடத்திய போராட்டத்தில் 8,159 பேரும் அன்றைய தினமே விடுதலை செய்யப்பட்டார்கள். ஆசிரியர்கள் போராட்டத்தில் 30—4—72 முதல் 16—5—72 வரை ஆயிரம் பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு, அவர்கள் 16—5—72-ல் விடுதலை செய்யப்பட்டார்கள்.



3—10—73 முதல், 12—10—73 வரை பழைய காங்கிரஸ் நடத்திய மது விலக்குப் போராட்டத்தில் 32,838 பேர் கைது செய்யப்பட்டு, போராட்டம் முடிந்த 12—10—73 அன்றே விடுவிக்கப்பட்டார்கள். அந்தக் கிளர்ச்சியின்போது, திருச்சி சிறைச்சாலையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அங்கு ஏற்பட்ட ஒரு கலவரத்தில் அங்கே பறந்து கொண்டிருந்ததேசியக் கொடியை இறக்கிவிட்டு, கட்சியின் கொடியை ஏற்றினார்கள். அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டது. ஆனால் அந்த வழக்குக் கூடத் திரும்பப் பெறப்பட்டுவிட்டது.


1974-ஆம் ஆண்டு சென்னையில் மாத்திரம் 50-க்கு மேற்பட்ட கிளர்ச்சிகள் நடைபெற்று, அதிலே ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் தான் நடைபெற்றிருக்கின்றன. 1975-ஆம் ஆண்டு, இந்த மூன்று மாதத்தில் மாத்திரம் 22 கிளர்ச்சிகள் நடைபெற்று, அதிலே கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதைப்போலவே, மாணவர்கள், தொழிலாளர்கள் கலந்து கொண்ட வழக்குகள் 50-க்கு மேல் கைவிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் மீது கனிவு கொண்ட பல தலைவர்கள் ஆளுங் கட்சியிலும், எதிர்க் கட்சியிலும் இங்கே இருக்கிறார்கள். அந்த வகையில், தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும்—நான் தேதி வாரியாக வைத்திருக்கிறேன்—50-க்கு மேற்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன.

சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியைப் பற்றி இங்கே பேசினார்கள். வகுப்பு வெறி இன்றைக்குக் கல்லூரிகளிலே நுழைந்திருப்பது உள்ளபடியே மிக மிக வேதனை தரக்கூடிய ஒன்றாகும். பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் ஏன் காந்தியடிகள் போன்றவர்களும், அவர்கள் வழி வந்தவர்களும், மற்றக்கட்சியின் தலைவர்களும் சாதி பேதம், சாதி வெறி கூடாது என்பதற்காக நாம் உழைத்து வருகிறோம். ஆனால் நம்மையும் அறியாமல் இன்றைக்கு இப்படிப்பட்ட வகுப்பு வாத குரோத எண்ணங்கள் சமுதாயத்தில் ஊடுருவுவது இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படுகிற ஒரு பயங்கரமான புற்று நோய் என்று தான் நான் கூற விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்த வரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிற அரசாகும். எந்தப் பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ அந்தப் பின் தங்கிய மக்களே இரண்டு கூறாக, மூன்று கூறாகப் பிரிந்து ஒருவரை யொருவர் தாக்கிக் கொள்ளுவதும், எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிறோமோ, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களே அவர்களுக்குள் இரண்டு மூன்று கூறுகளாகப் பிரிந்து கொண்டு, அவர்களுக்குள் சச்சரவுகளை வளர்த்துக்கொள்வதும் விரும்பத் தக்க காரியமல்ல.

சாதி ஒழிய வேண்டும் என்பதை நாம் உதட்டளவில் உச்சரிக்கின்ற வார்த்தையாக வைத்துக் கொள்ளாமல், உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி, தோழமைக் கட்சி, ஆகிய அனைத்துக் கட்சியின் நண்பர்களையும் கேட்டுக் கொள்கின்றேன். அதன் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட கலவரங்களானாலும், சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் ஏற்பட்ட கலவரமானாலும், உள்ளபடியே சகித்துக் கொள்ளத்தக்கதல்ல. அவைகளைப் பற்றித் திரு ராசாராம் நாயுடு அவர்கள் கூட மேலவையில் அதற்காக ஓர் அதிகாரியை வைத்து விசாரணை வைக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அதையெல்லாம் மனத்தில் கொண்டு, இங்கே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை மனத்தில்கொண்டு, அந்தச் சம்பவங்களைப் பற்றி விசாரிப்பதற்காக ஐ.ஜி. அவர்களை அதற்காக நியமித்து, அதற்காக ஓர் அறிக்கை அனுப்பும்படி அவரை இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.




கீழ் வெண்மணிச் சம்பவம் பற்றிச் சொன்னார்கள். அந்தத் தீர்ப்பினால் கீழ்க் கோர்ட்டில் தண்டிக்கப்பட்டவர்கள், உயர் நீதி மன்றத்தில் எல்லா எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். கே.டி.கே. அவர்களும், ஏ.கே. சுப்பையா அவர்களும் அந்தக் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்களே என்பதற்காக இங்கே வருத்தம் தெரிவித்தார்கள். சம்பவம் நடந்தது உண்மை. ஆனால் அந்தச் சம்பவத்திலே குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். அப்படி விடுதலை அடைந்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்வதற்கு, (Certificate of leave to appeal) உயர் நீதிமன்றத்தில் அரசின் தரப்பில் கேட்கப்பட்டது. உயர் நீதி மன்றம் மறுத்துவிட்டது. அப்படி மறுத்துவிட்ட காரணத்தால், உச்ச நீதி மன்றத்தில் (Special leave Petition) 22—3—75 அன்று பதிவு செய்துள்ளோம் என்பதை மாத்திரம் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிகாரிகளை மாற்றுவதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். நல்ல அதிகாரிகளை மாற்றிவிடுகிறீர்கள். தீய அதிகாரிகளை மாற்றாமல் விட்டு விடுகிறீர்கள் என்ற கருத்தை கே.டி.கே. சொன்னார். செழியன், இஷ்டப்படி ஆளும்கட்சி சொல்கிற நேரத்தில் எல்லாம் அதிகாரிகளை மாற்றுகிறார்கள் என்று சொன்னார். ஆக மாற்றுவது என்ற கொள்கையை அனைவரும் ஒத்துக் கொண்டு இருக்கிறோம். இதிலே நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்? என்பதைத் தீர்மானிக்கும் நேரத்தில் தான் அபிப்பிராய பேதம் வருகிறது. நல்லவர்களாக இருந்தால் இருக்கலாம் ; தீயவர்களாக இருந்தால் மாற்றலாம் என்கிற அந்தக் கொள்கையை ஏதோ ஒரு வகையில் எதிர்க்கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ ஆளும் கட்சியின் சார்பில் ஆயிரக் கணக்கில் சிபாரிசுகள் தருகிறார்கள் என்று சொன்னார்கள், செழியன் அவர்கள் கூட, ஆளும் கட்சியிலே இருக்கும்போது சிபாரிசுகளைத் தரவில்லையா? எவ்வளவோ கொடுத்தார்கள். கேட்டால் தரலாம் என்று என்னிடம் கூட வைத்திருக்கிறேன். இவ்வளவு கடிதங்களை

(முதலவர் சபையிலே அந்தக் கடிதங்களைக் காட்டி) இப்படிப் பட்ட காரியங்களுக்காகச் செழியன் கொடுத்திருக்கிறார்.

**செழியன் :** நான் ஆளுங் கட்சியிலே இருக்கும்போது எப்போது கொடுத்திருக்கிறேன் என்றால், என்னுடைய தொகுதியிலே இருக்கிற அதிகாரிகளை வேறு யாராவது தலையிட்டு மாற்றுகிற போது நான் தலையிட்டு அவைகளைத் தடுக்க நிறையக் கொடுத்திருக்கிறேன். ஆனால் நானாக அவரை மாற்று, இவரை மாற்று, எனக்குப் பிடிக்க வில்லை என்று சொன்னது கிடையாது.

**முதல்வர்:** நீங்கள் நிறையக் கொடுத்தீர்கள். கொடுத்த எல்லாவற்றையும் நான் செய்தேனா என்று கேட்கிறேன்.

**செழியன் :** நியாயமானதைத் தான் நான் சொன்னேன். நியாயமானதைச் செய்தீர்கள், என்று நம்புகிறேன்.

**முதல்வர்:** நியாயமானதைச் செய்தீர்கள் என்று நம்புகிறேன் என்று சொல்கிறார். ஆக ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கொடுத்தாலும், நியாயமாக இருந்தால் தான் செய்வேன்; அநியாயமாக இருந்தால் செய்ய மாட்டேன் என்று அவரே ஒத்துக் கொண்டதற்காக நன்றி.

அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தாக்கப்படுகிறார்கள் ; கொலை செய்யப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொலையுண்டிருக்கிறார்கள். பொள்ளாச்சியில் லத்தீஃப் என்கிற தி.மு.க. வாலிபர் ஒருவர் கொல்லப்பட்டார். அந்த வழக்கில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, அவர்கள் விடுதலை அடைந்தார்கள். அரசாங்கம் நீதிமன்றத்தினைத் தன்னுடைய கையில் வைத்திருக்க வில்லை. எது நீதியோ அது நடக்கட்டும் என்கிற வகையிலே தான் அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது. எதிலும் தலையிடுவதில்லை என்பதற்கு இவைகள் எல்லாம் உதாரணங்கள்.

பிரதாப் சந்திரன் கொலை வழக்கிலே கூட, குசேலர் மற்றும் நான்கு பேர் விடுதலையாகி யிருக்கிறார்கள். இரண்டு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 30—7—72 அன்று முகவை மாவட்டம் குமாரப் பட்டியில் அண்ணா மன்றத்தில் தி.மு. கழகத்தினர் கம்யூனிஸ்டுகளால் தாக்குண்டு, முத்து என்பவர் கொலையுண்ட வழக்கில், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலையானார்கள். ஆனால் கொலையுண்டது உண்மை. விடுதலையாகிவிட்ட காரணத்தாலேயே சம்பவம் இல்லை என்று ஆகிவிடுமா? கே.டி.கே. கூட விடுதலையாகி விடுகிற காரணத்தாலேயே சம்பவம் நடந்தது இல்லை என்று ஆகிவிடுமா என்று கேட்டார். அதைப் போலவே கோவை மாவட்டத்தில் குறிச்சி கிராமத்தில் ஸ்தாபன காங்கிரஸ் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களால், தி.மு.க.வைச் சேர்ந்த ராசு கொலை செய்யப்பட்டார். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெற்றிருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டம் தேனும் பட்டு கிராமத்தில் மலையாளத்தான் என்பவர் அ.தி.மு.க. விலிருந்து மீண்டும் தி.மு.க. விற்குத் திரும்பினார். 5-7-74 அன்று கொலையுண்டார். அவ்வூர் ஊராட்சித்தலைவர் ரகுபதி உட்பட 12 பேர் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். மூன்றாவது குற்றவாளி கோதண்டபாணிக்கு மட்டும் ஐந்தாண்டுக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. மற்றவர்கள் விடுதலை அடைந்திருக்கிறார்கள்.

இந்த அரசியல் கொலைகள் எல்லாக் கட்சியிலும் நடைபெறுகின்றது. அதற்காக அனைவரும் சேர்ந்து நம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோமே யல்லாமல், வன்முறைகள் அரசியலில் தலையெடுக்கக் கூடாது என்பதில் நான் இரண்டு விதமான கருத்துக்களைக் கொண்டிருப்பவன் அல்ல. அனைத்துக் கட்சிக்காரர்களும் கொலைக்காளாகிறார்கள். எப்படியிருந்தாலும் கூட நான் எடுத்துச் சொல்கிற பொதுவான கருத்து, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வன்முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை இந்த அரசோ, ஆளுங்கட்சியாக இருக்கிற தி. மு. கழகமோ அனுமதிக்கவில்லை; ஆதரிக்க வில்லை. இருந்தாலும் இது நீண்ட காலமாக, எல்லாத் தலைவர்களும் எடுத்துச் சொன்னாலும் சரி, இடையே சில காரியங்கள் நடைபெற்றுவிடுகின்றன.

வெங்கா தாக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். அரசு புலன்விசாரித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கார் டிரைவர் கைது செய்யப்பட்டார். கமிஷனர் அலுவலகத்தில் தவறான நம்பர்கள் பொறிக்கப்பட்ட சில கார்கள் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்திருக்கலாம். அந்தக் கார்கள் எல்லாம் கள்ளக் கடத்தல் கார்கள். ஆனால் அதிலே இருக்கிற நம்பருக்கும், அந்தக் காருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இப்படி அந்த டிரைவர் கைது செய்யப்பட்டபோது கூட, ''நான் அந்தப் பக்கமே வரவில்லை'' என்று சொன்னதாகவும், இருந்தாலும் மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகவும், போலீஸ் அதிகாரிகள் எனக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அதை அப்படியே விட்டுவிட்டோம் என்று நினைக்கத்தேவையில்லை.

சேலத்தில் நடைபெற்ற கொலை பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. அது பற்றியும் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குள் வழக்கு தாக்கல் செய்யப்படாததற்குக் காரணம் இன்னும் புலன் விசாரணை முடிவு வில்லை.

''குசேலர் கேசில் ''பொலிடிகல் மோடிவேஷன்'' (அரசியல் தூண்டுதல்) என்று சொல்லப் பட்டிருக்கிறது'' என்று கே.டி.



கே. சொன்னார்கள். நான் பிறகு அந்த ஜட்ஜ்மெண்டை வாங்கிப் படித்துப் பார்த்த போது அப்படிப்பட்ட வார்த்தையே அதிலே இல்லை. தங்கமணி அவர்கள் மீது போடப்பட்ட கேசிலே கூட, செஷன்ஸ் ஜட்ஜ் ''மோடிவ்'' அரசியலாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்'' என்று தங்கமணி இங்கே குறிப்பிட்டார். தங்கமணி போன்ற பெரியவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தகவலை அவைக்குத் தருவது வேதனைக்குரியதாகும். அப்படி தங்கமணி அவர்கள் வழக்கில் நீதிபதி ''மோடிவ்'' அரசியல் என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அவர் ஆர். எஸ். மங்கலத்தில் பேசிய பேச்சு குறித்த வழக்காகும் இது. ஜட்ஜ் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

"The next point that arises for consideration is whether the words complained of bring home an offence under section 115 read with section 302 I.P.C. as alleged by the prosecution. If the speech complained of is translated into English, according to me, will run as follows:

**" What is the way for the Chief Minister to escape from the enquiry? One way would be to commit suicide like Hitler or he should be beaten to death like Musolini by you all; Except these two courses, I do not see any other way to put an end to the Chief Minister.''**

இது தங்கமணி அவர்கள் பேசிய பேச்சாகும். என்னுடைய முடிவிற்கு தங்கமணியை போன்றவர்கள், ஒரு காலத்தில் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து பேசிய தங்கமணி போன்றவர்கள், என்னுடைய முடிவு இப்படி அமைய வேண்டுமென்று கருதுவார்களேயானால், அந்த முடிவை தங்கமணியைப் போன்றவர்கள் தங்களுடைய கையால் செய்வார்களேயானால், நான் உள்ளபடியே ஒரு தியாகியின் கையால் சாகிறேன் என்ற அளவில் கூட மகிழ்ச்சி அடைவேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தீர்ப்பில், நான் அப்படிப் பேசியிருந்தாலும், அது குற்றமாக ஆகாது என்று தான் இருக்கிறது.

**முதல்வர் :** நான் நீங்கள் பேசியதைத் தான் சொன்னேன். நீங்கள் எல்லாம் பெரியவர்கள் நீங்கள் இப்படிப் பேசலாமா? சின்னப் பிள்ளைகள், சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியன் யார் யாருக்கோ ஸ்ரீலஸ்ரீ, மகாசந்நிதானம் என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார். அவரே யாருக்கோ தலைவெட்டி என்று பெயர் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே சில தலைவெட்டிகள் எல்லாம் இருக்கிறார்கள். செழியனுக்கு ஓர் இளகிய இதயம் உண்டு ; அதுவும் என்பால் அன்பு உண்டு. என்னுடைய தலையை வெட்டுவேன் என்று சொன்னால் செழியனைப் போன்றவர்கள் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகவே தலைவெட்டி என்று யாருக்கோ அவர்பெயர் வைத்து அழைப்பதாக எனக்குக் கேள்வி. ஆனால் அவர் ஒத்துக் கொள்வாரா என்பது வேறு.

**திரு. செழியன்:** நான் யாரையும் தலைவெட்டி என்று பெயர் வைத்து அழைக்கவில்லை. அப்படிக் கூப்பிட்டதே கிடையாது.


**முதல்வர் :** கூப்பிட்டால் தெரிந்து விடும். சிலரிடம் சொன்னதாகக் கேள்வி. தங்கமணி, ஜட்ஜ் அவர் பேசியதைக் குற்றமாக ஒத்துக் கொண்டாரா, என்று கேட்டார். ஜட்ஜ் அதைப் பற்றிச் சொல்கிறார் :

"I find such words have been freely used mainly to attain cheap popularity and to get an applause from the audience rather than with an intention of inciting the audience to murder the Chief Minister. If it were the intention of the accused to insite the audience to murder the Chief Minister, he would have used words like "Go and Kill Him or Kill him when he comes here etc. etc. ''

The words uttered by the accused are not capable of insiting the audience to commit the offence of murder nor could they be understood in the manner in which the prosecution has understood.

இந்தத் தீர்ப்பை என்னைப் படிக்க வைக்கும் அளவிற்குத்





தங்கமணி என்னை ஆளாக்கி விட்டாரே என்பதற்காக மிகுந்த வருத்தப்படுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எந்த மாதிரியான கேஸ்கள் போடப்பட்டு இருக்கின்றன? ஜட்ஜ்மெண்ட் எப்படி இருக்கிறது என்பது இந்த ரெகார்டில் இருப்பது பொருத்தமானதுதான்.

**முதல்வர் :** தங்கமணியைப் போன்ற பெரிய தலைவர்கள் எந்த மாதிரியாகப் பேசுகிறார்கள் என்பதும் இங்கே பதிவு

ஆக வேண்டியது மிகுந்த அவசியமாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** எதிர்க் கட்சிக்காரர்கள் மீது எப்படிப்பட்ட கேஸ்கள் போடப்பட்டன என்பது ரெகார்டில் இருப்பதும் நல்லது தான்.

**முதல்வர் :** எங்களுக்கெல்லாம் அண்ணா அப்படிச் சொல்லிக்கொடுக்கவே இல்லை. இட்லரைப் போலச் சாக வேண்டும்; முசோலினியைப் போல அடித்துக் கொல்ல வேண்டும் என்று கற்றுக் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட பண்பை நாங்கள் என்றைக்கும் பெற்றதும் கிடையாது எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் நீண்ட காலம் வாழ வேண்டுமென்று தான் நாங்கள் கருதுவோம். அப்போது தான் ஒருவருக்கொருவர் நம்முடைய அறை கூவலை ஏற்றுக் கொண்டு, வாழ்ந்து, அதைப் பார்க்க வேண்டும். அவனைக் கொன்று விட வேண்டும்; விசாரணையிலிருந்து தப்புவதற்கு அவன் இட்லரைப்போலத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் ; ஆனால், ஜட்ஜ் கை தட்டலுக்காக அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்.

இதே தங்கமணி அவர்கள் வாணி மகாலில் ஒரு முறை என்னைப் பாராட்டிப் பேசியதை நான் மறந்துவிடவில்லை. அப்படிப் பேசிய தங்கமணி தான் இப்படிப் பேசியிருக்கிறார். தங்கமணி போன்றவர்களே இப்படிப் பேசினால், அரசியலில் இளவெட்டுக்களாக இருப்பவர்கள் எந்த அளவிற்குப் பேச ஆரம்பித்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். உருக்கத்தோடு ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று என்பதற்காகச் சொல்கிறேன்.

ஹண்டே அவர்கள் காவல் துறையில் வறட்சி நிவாரண நிதி கட்டாயமாக வசூலிக்க வேண்டுமென்று ஒரு ஆர்டர் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதில் நான் உன்னிப்பாய் கவனித்தேன். அதிலே ''வாலண்டரி'' அதாவது அவர்களாக முன் வந்து தரவேண்டுமென்று இருக்கிறதே தவிர ''கம்பல்சரி'' என்று இல்லை.

இவ்வளவு சூட்டிற்குப் பிறகு தீ அணைப்பு இல்லாவிட்டால் நன்றாக இருக்காது. தீ அணைக்கும் படை இந்த ஆண்டு 26 இடங்களில் அமைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான இடங்கள் எல்லாம் பார்க்கப்பட்டு, இன்னும் ஆறு மாத காலத்தில், மேலும் 26 இடங்கள் வைக்கப்பட வேண்டும் என்ற அரசின் அறிவிப்பு செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி அனந்தநாயகி:** போலீஸ்காரர்களுக்குக் கராத்தே பயிற்சியைத் தொடர்ந்து கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா?

**முதல்வர் :** கராத்தே பயிற்சியை நான்தான் முதன் முதல் பார்த்து விட்டு, காவலர்களுக்குச் சிபாரிசு செய்து அந்தப் பயிற்சி கொடுக்கச் சொன்னேன். இடையில் நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். எதிர்ப்பார்கள் என்று எண்ணினேன். அவர்களே சொல்லிவிட்ட காரணத்தால் அது தொடர்ந்து நடைபெறும்.

**(காவல்துறை மானியக் கோரிக்கை மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதங்களுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் 3-4-75-ல் அளித்த பதிலுரை)**


தந்தி :— ''கோ ஆப் பாங்கு'' தொலைபேசி : 4189

## திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு, திருச்சி-2.

பெருந்தலைவர் : கே. எம். பெரியசாமி, துணைப் பெருந்தலைவர் : என். பாலன், பி.ஏ., பி. எல்.,

**கிளைகள் :** 1. கரூர், 2. அரியலூர், 3. துறையூர், 4. மணப்பாறை, 5. லால்குடி, 6. பெரம்பலூர், 7. தில்லைநகர் (திருச்சி), 8. ஜெயங்கொண்டம், 9. குளித்தலை, 10. வேலாயுதம்பாளையம், 11. முசிறி, 12. சின்னதாராபுரம், 13 மண்ணச்சநல்லூர், 14. தொட்டியம், 15. ஸ்ரீரங்கம், 16. திருவரம்பூர், 17. சுப்ரமணியபுரம் (திருச்சி), 18. கரூர் (கிழக்கு) 19. துவரங்குரிச்சி, 20. வையம்பட்டி, 21. ஆண்டிமடம், 22. தாத்தையங்கார்பேட்டை, 23. சித்தலவாய், 24. உப்பிலியபுரம், 25. அரவாக்குரிச்சி, 26. செந்துறை, 27. திருமாநூர், 28. அரும்பாவூர்.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | 100.25 | இலட்சங்கள் |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | 85.56 | |
| அலுவலல் நிதிகள் | 1,035.65 | |
| டிபாசிட்டுகள் | 565.43 | |

**தவணை வைப்புகளின் வட்டி விகிதங்கள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| 61 | மாதங்களும் அதற்கு மேலும் | | .. | ரூ. 10.50 % |
| 36 | மாதங்கள் முதல் | 61 | மாதங்களுக்குள் | 9.50 % |
| 12 | ,, ,, | 36 | ,, | 8.50 % |
| 9 | ,, ,, | 12 | ,, | 7.50 % |
| 6 | ,, ,, | 9 | ,, | 6.50 % |
| 91 | நாட்கள் முதல் | 6 | மாதங்களுக்குள் | 6.00 % |

**வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப மாதாந்திர வட்டியும் வழங்கப்படும்.**

**கால இட்டு வைப்புகள் :**

| | | |
|---|---|---|
| 46 நாட்கள் முதல் 91 நாட்களுக்குள் | 4.00 % | |
| 15 நாட்கள் முதல் 46 நாட்களுக்குள் | 3.50 % | |
| சேமிப்புக் கணக்கு | 6.00 % | |
| நடப்புக் கணக்கு | 0.50 % | |
| பாதுகாப்பு வைப்பு | 10.00 % | (கூட்டு வட்டி) |
| மாதாந்திர வைப்பு | 8.00 முதல் 10.00 % | வரை |

**எங்கள் வங்கியிலும் அருகாமையிலுள்ள எங்கள் வங்கி கிளைகளிலும், முதலீடு செய்து உச்ச அளவு பயன் அடையுங்கள்.**

**இ. நடராஜ்,** எம்.ஏ.,
இணைப்பதிவாளர், தலைமை நிர்வாக அதிகாரி.

**வே. முருகேசன்,** பி.ஏ.,
செயலாளர்.

# வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டோம்!

தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்குச் சராசரியாக 84 கிராம் பால் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஊட்டச்சத்துணவு வல்லுநர்கள், இயல்பான உடல் நலம் பேணி வர நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 280 கிராம் பால் தேவைப்படுகிறது என்று வரையறுத்துள்ளனர். தமிழகத்தில் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி வாழ்ந்து வரும் 4.12 கோடி மக்களும் தலைக்கு, நாளொன்றுக்கு 200 கிராம் பால் வீதம் பற்றாக்குறைக்கு உள்ளாகின்றனர். தேவைக்கும், பால் கிடைக்கும் அளவுக்குமிடையே நிலவும் இத்தகைய பெருந்த வேறுபாட்டிற்கு நம் மாநிலத்திலுள்ள கறவை மாடுகளின் குறைவான பால் சுரக்கும் தன்மையே காரணமாகும். நமது மாடுகளை நல்ல தரமான வெளிநாட்டுக் காளைகளுடன் இனப் பெருக்கம் செய்து, அவற்றின் மரபு வழியை மேம்படுத்துவதன் மூலம் அவற்றின் கறவைத் திறனை அதிகரிக்க இயலும். நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளிலுள்ள நாட்டுக் கால்நடைகளை சிந்தி, தர்பார்கர், கிர் போன்ற தரமுள்ள பொலி காளைகளுடன் இனப்பெருக்கம் செய்வதன் மூலமும், நீலகிரி, கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகள் மற்றும், கோயம்புத்தூர், சென்னை, மதுரை ஆகிய பால் வழங்கு பகுதிகளில் உள்ள மாடுகளை 'ஃபிரிஷியன்', 'ஜெர்ஸி', 'ரெட்-டேன்' போன்ற வெளிநாட்டுப் பொலி காளைகளுடன் இனப்பெருக்கம் செய்வதன் மூலமும் கால்நடைகளின் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. எருமைகளைப் பொறுத்தவரையில் உள்ளூர் எருமைகள், முர்ரா எருமைக் கடாக்களுடன் இனப்பெருக்கம் செய்வதன் மூலம் தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. ஓசூர், செட்டிநாடு, ஒரத்தநாடு, கொருக்கை, புதுக்கோட்டை திருநெல்வேலி, உதகமண்டலம் ஆகிய ஏழு இடங்களில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணைகள் நன்கு பெயர் பெற்ற உயர் வகையைச் சேர்ந்த பொலி காளைகளை உருவாக்கும் பண்ணைகளாகத் தொடர்ந்து செயல்படுகின்றன.



**திரு. ஓ.பி. இராமன்,**

*வணிகவரி மற்றும் கால்நடைத்துறை அமைச்சர்.*

**டென்மார்க் அரசின் உதவியுடன் ஈச்சங்கோட்டையில் பெரிய அளவிலான வெளிநாட்டுக் கால்நடைப் பண்ணையை ஏற்படுத்தல்.**

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் பெரிய அளவிலான கால்நடைப் பண்ணையை ஏற்படுத்த 240 ஜெர்சி கிடேரிகளையும், 10 ஜெர்சி காளைகளையும், சில கருவிகளையும் இலவசமாக வழங்க டென்மார்க் அரசு முன்வந்துள்ளது. அவர்களது உதவியுடன் அமையவிருக்கும் இந்தப் பண்ணையும், ஒரத்தநாட்டில் புதிதாக அமைக்கப் படவிருக்கும் உறைய வைக்கப் பட்ட விந்து சேமிப்பு நிலையமும், தமிழ்நாட்டின் கால்நடை வளத்தை—குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தின் கால்நடைவளத்தை—பெருக்க மிகவும் உதவும். இத் திட்டத்தின்கீழ் டென்மார்க் அரசு கீழ்க்கண்ட உதவிகளை அளிக்க உள்ளது.

1. போக்குவரத்து வசதிகள் உட்பட 240 ஜெர்சி கிடேரிகளையும், 10 ஜெர்சி இளங்காளையும் வழங்குதல்.

2. உயரினக் காளைகளிலிருந்து எடுக்கப்பட்ட உறைய வைக்கப்பட்ட விந்தினை ஓரளவு தருதல்.


3. கால்நடைத் தீவன உற்பத்திக்கான பண்ணைக் கருவிகள் வழங்குதல்.

4. இந்திய அதிகாரிகள் இருவருக்கு டென்மார்க்கில் பயிற்சியளித்தல்.

5. டென்மார்க் நாட்டு ஆலோசகர்கள் மூலமாகக் குறுகியகால அளவிற்கு ஆலோசனையளித்தல்.

இத்திட்டம் இந்திய அரசிடமிருந்து 75 சதவீத உதவித் தொகையுடனும், 25 சதவீதக் கடன் தொகையுடனும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகச் செயற்படுத்தப்படும். கால்நடைகள் வந்தவுடன் பேணுவதற்குப் பண்ணையைத் தயார் செய்வதற்கான தொடக்க நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டு வருகின்றன.

ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் பேணப்பட்டு வரும் சிவப்பு சிந்தி கால்நடை வகையின் பயன் கருதி, ஓசூர் கால்நடைப் பண்ணையில் உறைய வைக்கப் பட்ட விந்து சேகரிப்பு நிலையம் ஒன்றுஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய தமிழ்நாடு அரசு இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டுள்ளது என்றால் மிகையல்ல!



# வறட்சி நிவாரணப் பணிகள்

## திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் 29-3-75 முடிய தீவிர வறட்சி நிவாரணப் பணியில் அடைந்துள்ள முன்னேற்ற அறிக்கை.

**குடிநீர்க் கிணறுகள்:**

**ஒதுக்கீடு ரூ. 25·50 இலட்சம்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்க-பழைய கிணறுகள் ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் தோண்டவும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ரூ. 38,20,460 மதிப்பீட்டில் மேற்படி வேலைகளைச் செயல்படுத்தியதில் இதுவரை ரூ. 16,27,690 செலவிடப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ. 10,60,200 மதிப்பீட்டில் மேற்படி வேலைகளைச் செயல்படுத்தியதில் இதுவரை ரூ. 6,60,000 செலவிடப்பட்டுள்ளது.

**சிறிய நீர்ப்பாசனம்:**

**ஒதுக்கீடு ரூ. 23 இலட்சம்**

வறட்சிப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 37,86,900 மதிப்பீட்டில் மேற்படி வேலைகளைச் செயல்படுத்தியதில் ரூ. 20,58,795 செலவிடப்பட்டுள்ளது. மேலும் பொதுப்பணித் துறையின் மூலமாக ரூ.5,62,000 மதிப்பீட்டில் ரூ. 2,81,000 செலவிடப்பட்டுள்ளது. மிகுதியுள்ள வேலைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

**பெரிய நீர்ப்பாசனம்:**

**ஒதுக்கீடு ரூ. 15 இலட்சம்**

வறட்சிப் பகுதிகளில் பொதுப்பணித்துறை மூலமாக ரூ. 31,43,360 மதிப்பீட்டில் ரூ. 14,27,000 செலவிடப்பட்டுள்ளது.

**சாலை பராமரிப்பு:**

**ஒதுக்கீடு ரூ. 11 இலட்சம்**

கிராமச் சாலைகளைப் பழுதுபார்க்கவும் இணைப்புச் சாலைகளை மாற்றிப் போக்குவரத்தை அதிகரிக்கவும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ரூ.23,80,700 மதிப்பீட்டில் ரூ. 9,75,328 செலவிடப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை, கிராமப்பணித்துறை மூலமாக ரூ. 14,73,800 மதிப்பீட்டில் ரூ. 7,22,905 செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

**பொது:**

தீவிர வறட்சி நிவாரணப் பணியின்கீழ் ரூ. 1,62,27,420 மதிப்பீட்டில் ரூ. 77,52,710 செலவிடப்பட்டுள்ளது. மிகுதி வேலைகள் விரைவில் முடிக்கத் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

## வட ஆர்க்காடு மாவட்டம்

இம்மாவட்டத்திற்கு என ஒதுக்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணி ரூ. 50.40 இலட்சம் ரூபாய்கள் அனைத்தும் குடி தண்ணீர், சிறிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கும், சாலைகள் அமைத்தல், மண் வளப் பாதுகாப்புத் திட்டத்துக்கும் செலவிடப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப் பணிகளில் ஒன்றான குடி தண்ணீர் வசதிக்காகக் கீழ்க்கண்ட ஐந்து நகராட்சிகளுக்குப் பணம் ஒதுக்கீடு செய்து தரப்பட்டது.

1. ஆரணி ரூ. 25,000
2. அரக்கோணம் ரூ. 20,000
3. வாலாசா ரூ. 11,000
4. குடியாத்தம் ரூ. 60,000
5. வேலூர் ரூ. 50,000

இதில் 50 சதவிகிதம் கடனாகவும், 50 சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 119 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 6 கிராமங்களில் வேலை முடிந்துவிட்டது. மற்ற கிராமங்களிலும் 30—4—75-க்குள் வேலைகள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 36 இலட்சம். பொதுப்பணித்துறை மூலமும், ஊராட்சி ஒன்றியம் மூலமும் இதுவரை 24,20,775 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.





# குறிஞ்சி

## நறுமண சோப்பு

உங்கள் விருப்பத்திற்குரிய 'கோபுரம்'
சலவை சோப்புடன் இப்போது
உங்கள் உடலைத் தூய்மைப்படுத்த குறைந்த
விலையில் 'குறிஞ்சி' சோப்பினை அளிக்கிறோம்.

கோபுரம் சோப்பு





தமிழகம் முழுவதிலும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களில் கிடைக்கும்.

# தூங்காத நெஞ்சம்

மன்னர் மன்னன்



சிவஞான பாலைய சுவாமிகள் பெயரில் அமைந்துள்ள மடம் ஒன்று புதுவை மாதா கோயில் தெருவில் உள்ளது. அந்த மடத்துக்கு நேர் எதிர் வீட்டில் நாங்கள் குடியிருந்த போது, தமிழாசிரியர் தேர்வுக்குச் செல்லும் இளைஞர் சிலர் இலக்கண இலக்கியப் பாடங்களில் தமக்கெழும் ஐயங்களுக்கு விளக்கம் பெறப் பாவேந்தரிடம் வருவார்கள். தொல்காப்பியமானாலும் நன்னூலானாலும், மிகக்கடினமான பாடம் எதுவாயினும் அதனை எளிய எடுத்துக்காட்டுகளுடன் புகட்டுவார் பாவேந்தர்.

ஆசான்-மாணவன் என்று பழகாமல் மிக நட்புறவோடு பாடங்களை எடுத்துச் சொல்வார் பாவேந்தர். ஒரு நாள் மாலை, மாணவர்க்குப் பாடத்தை முடித்துவிட்டு இரவு உணவு அருந்திய பாவேந்தர் வெகு நேரம் எதையோ எழுதிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் மடத்தின் அருகிலிருந்து சிலர் கூக்குரலிட்டார்கள். எழுந்து போய்ப் பார்த்தார்; தாம் வண்டி நிறைய ஏற்றி வந்த வைக்கோலை நகரில் விற்றுவிட்டு, கிடைத்த தொகையோடு வந்தவர்கள் மண்டிக்குச் சென்று அரிசி வாங்கி வந்து கஞ்சி காய்ச்சி அருந்திவிட்டுப் படுத்து விட்டார்கள். இரவு நேரத்தில் தத்தம் ஊருக்குத் திரும்ப முடியாது. ஆகையால் விடிய இவர்கள் வண்டியைக் கட்டியாக வேண்டும். விற்றுவரவுக் கணக்கைப் பார்த்துவிட்டுப் பணத்தை மடியில் வைத்துப் படுத்தவர்கள் உறங்கிவிட்டார்கள்.

நள்ளிரவில் எவனோ வந்து தொகையைப் பறித்துச் சென்றுவிட்டான். திடுக்கிட்டு எழுந்தவர்கள் போட்ட கூச்சல் தெருவைக் கலக்கிவிட்டது. வேறு யாரும் என்ன நடந்தது என்று எட்டிப் பார்க்கவில்லையென்றாலும், பாவேந்தர் மட்டும் எழுந்து போய்ப் பார்த்தார். யார் செய்த வேலை என்று அவர்கட்குப் புரியவில்லை. மறுநாள் ஊருக்குப் போக இவரே சில்லறைக் காசு கொடுத்து அனுப்பி வைத்தார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மீண்டும் அவர்கள் மடத்துக்கு வந்து தங்கினர். இதை மாலையில் கவனித்தவர், அவர்களை அழைத்து ஏதோ சொல்லி அனுப்பி வைத்தார். மாலையில் வழக்கம்போல் மாணவர்கள் பாடங்கேட்க வந்தார்கள். அன்று பாவேந்தர் சொல்லிக் கொடுத்த முறையிலிருந்தே அவர் எங்கேயோ கவனமாக இருந்ததைக் கண்டு கொண்டார்கள். மிகச் சுருக்கமாக அன்றையப் பாடம் முடிந்தது. மாணவர்களும் போய் விட்டனர். வழக்கத்துக்கு மாறாக நேரத்தோடு இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு விட்டார்.

எப்போதும் தெரு அறையில் படுக்கின்றவர் அன்று எழுதும் வேலை இருப்பதாகக் கூறி மாடியில் படுக்கையைப் போடச் சொல்லிவிட்டார்.

நள்ளிரவு; ஏதோ பேச்சுக் குரல்!...சலசலப்பு! அது முற்றி, பெருங்கூச்சல்!..பிறகு யாரோ ஒருவன் 'ஐயோ' என்று ஓலமிடுவது கேட்கிறது.

எங்கள் வீட்டுத் தெருக் கதவு திறக்கப்படுகிறது. எல்லோரும் எழுந்து பார்க்கிறோம். கையில் நீளமான டார்ச் விளக்கும் பச்சைக் கம்பளிப் போர்வையுமாய்ப் பாவேந்தர் நிற்கிறார். எதிரில், குள்ள உருவம் ஒன்று நடுநடுங்கி நிற்கிறது. அவனுடைய இதழ்க் கடையிலிருந்து இரத்தம் கொட்டுகிறது. சிற்றூர்க்காரர்கள் தங்களின் தொகையை எண்ணிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். தெரு விளக்கைப் போட்டுவிட்டுச் சாய்வு நாற்காலியைத் தெருவில் இட்டு அதில் அமர்கிறார் பாவேந்தர்.

''இவங்களுக்கு ஏன் ஊர் வம்பு?''-என் அன்னையார் முணுமுணுக்கிறார். தூக்கம் கலைந்துவிட்ட வருத்தம் எங்களுக்கு! நையப்புடைக்கப் பட்ட அந்தக் குள்ளனின் கைகளைப் பின்புறமாய்ப் பிணைத்து மடத்தில் கொண்டு போய் நிற்க வைக்கிறார்கள். வருவார், போவார் எல்லோரும் நின்று ''இவனா? போக்கிரிகளின் தலைவனாச்சே!'' என்று வினாக்குறிகளாய் நிற்க, சிற்றூர்க்காரர்கள் எங்கள் வீட்டைச் சுட்டிக்காட்டி இருகை எடுத்து வணங்கிவிட்டு ''வாத்தியாரு தான் இவனைப் புடிச்சாரு'' என்கிறார்கள்.

பிடிபட்ட அவன்தான் எங்கள் ஊரில் புகழ்பெற்ற போக்கிரித் தலைவன்; தேர்தல் காலத்தில் கலவரங்களை உருவாக்கி நாட்டைக் காடாக்குபவன்; மற்றக் காலங்களில் மக்களை அச்சுறுத்தி வயிறு வளர்ப்பவன்.

ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொள்ளும் வஞ்சக நரி! இந்த நரியை நையப் புடைத்த அரிமாவாகப் பாவேந்தர் எல்லோராலும் பாராட்டப்படுகிறார்! அன்பு மலிய அனைத்துயிர்க்கும் தொண்டு செய்தால் இன்பம் மலியும்!-என்கிறது குடும்ப விளக்கு இரண்டாம் தொகுதியில் உள்ள பாடல்!

''வல்லார்க்கும் மற்றுமுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக!''— வீரத்தாய் பாவியத்தில் சுதர்மன் முழங்கும் முரசு இது!

எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொன்னேன் இங்கே. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எண்ணற்றவை, பாவேந்தர் வாழ்க்கையில்!

கேட்பவர் நெஞ்சம் [illegible]கும். இவைகளையும் செய்ய வேண்டுமா, எங்கிருந்து இந்தத் துணிச்சலும் ஆற்றலும் இவருக்குக் கிடைத்தன, என்ற கேள்விகள் எழாமற் போகா. அப்படிப்பட்ட கேள்விகளை மாணவர்கள் இவரிடம் கேட்ட போது நடந்ததைக் கூறினார்!

மாடியில் படுக்கைக்குப் போனதாகக் கூறியவர், யாரும் அறியாமல் கதவைத் திறந்து கொண்டு வெளியிற் சென்று மாதாகோவில் தெருவிற்குக் குறுக்கில் உள்ள மரத்தடியில் நின்றிருக்கிறார். இரவு வெகு நேரத்திற்குப் பிறகு, மெல்ல மெல்ல மற்றொரு தெருவிலிருந்து வந்த ஒருவன், பூட்டு அவிழ்த்து விடப்பட்டிருந்த கட்டை வண்டிகளின் இடையில் வந்து குந்துகிறான். எல்லோரும் தூங்கிவிட்டார்களா என்பதைக் கண்டறிந்தவன், நகர்ந்து சென்று படுத்திருந்தவர்களின் பணப்பையைத் தடவிய போது; அவன் தலையில் விழுந்த தடியின் அடி, அலறச் செய்தது. தூங்கியது போல் நடித்திருந்தசிற்றூர்க்காரர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அடித்த அந்த முரட்டுக்கைகள் ஏழையரின் நலங் காத்த பாவேந்தருடையவை! மாலை நேரத்தில் சந்தித்த போதே வைக்கோல் விற்பனைத் தொகையைத் தம்மிடம் பெற்றுக் கொண்டு, பணப்பையை மட்டும் எப்போதும் போல் இடுப்பில் வைத்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தவர் பாவேந்தர்.



[illegible] யிருக்கும்போது, [illegible] விருந்தபடி இலக்கணப் பாடத்தில் கவனம் செலுத்தாமல் யார் யார் தெருவோரம் செல்கிறார்கள் என்பதைக் கூர்மையாகக் கவனித்திருக்கிறார்.

அரிமாவின் கண்ணுக்குத் தப்பிட முடியுமா குள்ளநரி? வகையின்றி வலையில் விழுந்து விட்டது.

''வலியோரால் வாடும்
எளியாரின் சார்பில்
புலியாகிப் போர் தொடுக்கும்
போதில்,
வலியோர்கள்
எய்யும் கோற்புண்ணும்
இனிதாகும்!''

என்று எழுதிய கைகள், வறியவர் நலங்காக்க விழைந்ததில் வியப்பில்லைதான்!

ஆனால், ஓர் ஐயம் நமக்கு: ''எழுதுகின்றவர் என்பதனால், தமக்குத் துன்பம் வரக்கூடும் என்று அஞ்சத்தக்க இத்தகு முயற்சியிலும் இறங்கத்தான் வேண்டுமா?''

ஆம்! கட்டாயமாக! பல்லாயிரம் பாடல்களை எழுதிவிட்டுச் சென்றிடலாம். துணிவோடும் நுட்பத்தோடும் செயல்படுத்திக் காட்ட வேண்டுமே! அது தான் பாவேந்தருக்குத் தலைபோகிற காரியமாக இருந்திருக்கிறது, எப்போதுமே!

அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளின் படப்பிடிப்புகளே அவர் படைப்புகள். அவருக்கிருந்த தொண்டு மனமே எழுத்தில் வடிக்கப்பட்டது. அவருக்கிருந்த சமுதாய நல ஆர்வமே எழுத்தோவியங்கள், காவியங்கள்.

'இசையமுது' முதற் பகுதியில் வருகின்ற வண்டிக்காரனும், ஆலைத்தொழிலாளியும், குறவனும், பல் வேறு உடல் உழைப்பாளர்களும் பாவேந்தரின் உள்ளத்து ஒலிகள்! சமுதாயம் இவர்களை ஏறெடுத்தும் பார்க்காதபோது இவர்கட்கும் மாந்த உணர்வுகள், பண்புகள் உண்டு என்று நிலைநாட்டத் துடித்த உள்ளம் பாவேந்தருடையது. அந்தத் தூங்காத உள்ளம் செயலாற்றியதன் விளைவு தான் இன்றைய சமுதாயத்தின் வெற்றிகள்!

# கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் பெறும் வாரியம்

கண்ணைக் கவரும் கைவினைப் பொருட்களைக் காணும்போது, அவற்றையெல்லாம் வாங்க வேண்டும் என்ற ஆவல் நமக்கு ஏற்படுகிறது. சென்னைக் குறளகத்தில் தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரிய அங்காடியில் காணப்படும் வகை வகையான பொருள்கள் தமிழ்நாட்டின் கைவேலைப்பாட்டினை உலகுக்கு உணர்த்தி வருகின்றன. இதனை விளக்குகிறார், தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியத் துணைத்தலைவர் திரு. எம். எஸ். மணி அவர்கள்.

**கே: தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் தோற்றம் பற்றிக் கூற இயலுமா ?**


ப : தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் 1960 ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்டது. கிராமக் கைத்தொழில்களும், கிராமத் தொழில்களும் வளர்ச்சி பெற்றால்தான் நாடு சுதந்தரம் அடைந்ததாகக் கருத முடியும் என்ற காந்தியடிகளின் அறிவுரைப்படி மத்திய அரசு 'காதி கமிஷன்' என்ற பெயரில் ஒன்றைத் தோற்றுவித்து இயங்கச் செய்தது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் 1960-ல் இந்த வாரியம் துவக்கப்பட்டது. தமிழ்நாடு அரசே இந்தத் துறையை ஏற்று நடத்தலாம் என்ற அடிப்படையில் காந்தியடிகள் வாழ்த்துத் தெரிவித்தார்.

**கே: வாரியத்தின் நோக்கம் என்ன ?**

ப : குறைந்த மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்புத் தருதல் இதன் நோக்கங்களில் ஒன்று ஆகும். அதாவது கிராமங்களில் வேலை இல்லாமலிருப்போர்க்கும், குறைந்த வேலை வாய்ப்புள்ளோர்க்கும் அதிக அளவில் வேலை வாய்ப்புத் தருதல்; ஓய்வு நேரங்களில் நூற்பதன் மூலம் கிராமப்பெண்களின் வருவாயை அதிகரித்தல்; கிராமத் தொழில்களை ஊக்குவித்தல்; கலப்படம் இல்லாமல் தூய பொருள்களைத் தயாரித்து பொது மக்களுக்கு வழங்குதல் ஆகியவை இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

**கே: வாரியத்தின் சார்பில் தயாராகும் பொருள்கள் என்னென்ன?**

ப : வாரியத்தின் சார்பில் பல்வேறு வகையான பொருள்





தமிழ்நாடு
கதர்-கிராமத்தொழில் வாரியத்
துணைத் தலைவர்
**திரு. எம். எஸ். மணி**
அவர்களின் பேட்டி.

கள் தயாராகின்றன. கதர், கதர்ப்பட்டு, தைக்கப்பட்ட 'ரெடிமேடு' ஆடைகள், ஜமக்காளங்கள், படுக்கைகள், திரைச்சீலைகள் போன்ற துணி வகைகள் கண்ணைக் கவரும் வண்ணம் உருவாக்கப்படுகின்றன.

இவையன்றி எண்ணெய் வகைகள், தோல் பொருள்கள், சோப்புகள், பனை வெல்லம், பனஞ் சீனி, பனை கற்கண்டு, பதநீர், பனந் தும்பு, பனை ஓலைப் பொருள்கள், மரச்சாமான்கள், மட்பாண்டங்கள், கைக்குத்தலரிசி, கையால் செய்யப்படும் காகிதம், செங்கல் ஓடுகள், சுண்ணாம்பு, தீப்பெட்டி, தேனீ வளர்ப்பு, பழங்கள் பதப்படுத்தல், அரக்கு தயாரித்தல், பிரம்பு, மூங்கில், அலுமினியத்தாலான பொருள்கள், மூலிகைகளைச் சேகரித்தல், பற்பொடி, ஊதுவத்தி, சிகைக்காய்த் தூள் ஆகியவை வாரியத்திற்கு உட்பட்ட நிலையங்கள் மூலமாகவும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் தயாராகின்றன.

**கே: இப்பொருள்கள் தமிழ் நாட்டில் எங்கெங்குத் தயாரிக்கப் படுகின்றன ?**

ப : தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பொருள்கள் தயாராகின்றன. குறிப்பாகப் பட்டு காஞ்சியிலும், சேலத்தில் தர்மாவரத்திலும் மற்றும் கும்பகோணம், தாராசுரத்திலும் தயாரிக்கப்படுகின்றது. மூங்கில், பிரம்பாலான பொருள்கள் குற்றாலத்திலுள்ள விசுவநாதபுரத்தில் தயாராகின்றன.

**கே: பொருள்களின் தரம், விலை முதலியன பற்றிக் கூற முடியுமா?**

ப : வாரியத்தின் சார்பில் விற்பனையாகும் பொருள்களுக்கு மக்கள் நல்ல ஆதரவு தருவதிலிருந்தே இதன் தரத்தினை நாம் நன்றாக உணரலாம். தேன், எண்ணெய் வகைகள் எல்லாம் சுத்தமானவை, கலப்படம் இல்லாதவை.

தேன் சுத்தத் தேனா, கலப்படமா என்று கண்டுபிடிக்க ஒரு வழி: ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு, தேன் புட்டியிலிருந்து ஒரு துளியை அந் நீரில் விடுங்கள். அந்தத் தேன் துளி தண்ணீரோடு கலந்து விடுமானால் அது கலப்படம். கலக்காமல் கீழே



சென்று தனித்திருந்தால் அது கலப்படமில்லாதது, சுத்தமானது.

**கே: வாரியத்தில் தயாராகும் பொருள்கள் தமிழகம் தவிர மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?**

ப : ஆம். இவ்வாரியத்தின் சார்பில் தயாராகும் 'பனந் தும்பு' இங்கிலாந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி முதலியநாடுகளுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவற்றின் மதிப்புரூ. 20 இலட்சமும். இதர சர்வோதயம், தனியார் மூலம் ஏறத்தாழ ரூ. ஒரு கோடியும் ஆகும். இந்தப் பனந் தும்புகளைக் கொண்டு இந் நாடுகள் பிரஷ்களை உற்பத்தி செய்கின்றன.

**கே: பொருள்கள் விற்பனை மூலம் இலாபம் கிடைக்கின்றனவா?**

ப : எங்கள் நோக்கம் இலாபம் சம்பாதிப்பது அல்ல, வேலை வாய்ப்புத் தருவதுதான்.

**கே: விற்பனை மூலம் ஓராண்டுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?**

ப : ஒரு ஆண்டில் கிராமக் கைத்தொழில் பொருள்கள் மட்டும் ரூ. 12 கோடிக்கு விற்பனையாகின்றன. கதர்த் துணிகள் ரூ. 1.5 கோடிக்கு விற்பனையாகின்றன. இதிலிருந்து இந்தப் பொருள்களுக்கு மக்களிடம் எவ்வளவு 'கிராக்கி' இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

**கே: விழாக்காலங்களில் விற்பனையில் சலுகைகள் தரப்படுகின்றனவா?**

ப : ஆம். பொங்கல், தீபாவளி போன்ற விழாக் காலங்களில் 10 சதவீதத் தள்ளுபடியில் துணிகள் விற்கப்படுகின்றன. பட்டு வகைகள் 10 லிருந்து 15 சதவீதத் தள்ளுபடியில் விற்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் 50 சதவீதத் தள்ளுபடியில் பட்டுத் துணிகள் பல்வேறு கதர் விற்பனை நிலையங்களில் விற்கப்பட்டன. இதற்குப் பெரும் ஆதரவு கிடைத்தது. இவ்வளவு சதவீதத் தள்ளுபடியில் இதுவரை யாரும் சலுகை காட்டியதில்லை.

ஒன்றை நான் இங்கே குறிப்பிட வேண்டும்; கதர்ப் பட்டு என்றதும், என்னமோ ஏதோ என்று சிலர் நினைத்துக் கொள்கிறார்கள். அசல் பட்டு என்பதே இதுதான் என்பதை அவர்கள் உணர்வதில்லை. மற்ற பட்டுத் துணிகளைப் போல இதில் கலப்படம் கொஞ்சங்கூட இல்லை. கதர்ப் பட்டு கலப்படமில்லாத சுத்தப் பட்டு.

**கே: வாரியத்தின் சார்பில் விற்பனை நிலையங்கள், அலுவலகங்கள் எங்கெங்கு உள்ளன?**

ப : தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் குறிப்பாக எல்லா ஒன்றியங்களிலும் கதர் கிராமக் கைத்தொழில் வாரிய அலுவலகங்களும், விற்பனை நிலையங்களும் உள்ளன.

சென்னையில் உள்ள குறளகம் தான் இந்தியாவிலேயே மிகப் பெரிய விற்பனைக் கட்டடம். பம்பாயில் உள்ள 'காதி பவன்' இதில் நாலில் ஒரு பங்குகூட இல்லை.

தமிழ்நாடு முழுவதும் 188 கதர் விற்பனை நிலையங்கள் உள்ளன. சென்னையில் இரண்டும், திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் நான்கு முதல்நிலைக் 'கதர் கிராஃப்டு'கள் இயங்கி வருகின்றன.

**கே: கதர் கிராமக் கைத்தொழில்கள் மூலம் எத்தனை பேர்கள் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள்?**

ப : தமிழ்நாட்டில் சுமார் மூன்று இலட்சம் மக்கள் இவ்

வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். சுமார் 1,032.61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இவ்வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாரியத்தின் கீழ் 256 நிலையங்களும், 2,340 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

**கே: கிராமிய நூற்பு நிலையமொன்று செயல்படுகிறதாமே ?**

ப : ஆம். 1966-ஆம் ஆண்டில், முதல் கிராமிய நூற்பு நிலையம் ஒன்று துவக்கப்பட்டது. இப்போது 140 நிலையங்கள் உள்ளன. தற்போது ஆறு கதிர் புது மாதிரி இராட்டை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதைப்போல 25 இராட்டைகளும், பஞ்சு உடைத்துப் பட்டை போடுதல் போன்றவையும் கூடிய ஓர் அமைப்பு தான் இந்தக் கிராம நூற்பு நிலையமாகும்.

இதன் மூலம் 7,528 பேர் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இத்தொழிலில் ஈடுபடும் ஒரு பெண்மணி நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 முதல் ரூ. 3வரை ஊதியம் பெறுகிறார்.

**கே: தேனீ வளர்ப்பு, சோப்பு உற்பத்தி போன்ற தொழில்கள் வளர்ந்துள்ளனவா?**

ப : தேன் என்றதுமே 'காதி'யின் தேன்தான் எல்லாருக்கும் நினைவு வரும். தரமான பொருள் என்றால் அதற்கு எப்போதுமே நல்ல ஆதரவு இருக்கும் என்பதை நாம் பார்க்கிறோம். தேனீ வளர்ப்புத் தொழிலை வளப்படுத்துவதற்காக இன்று விவசாயிகளுக்குத் தேன் பெட்டிகள் பாதி விலைக்கே தரப்படுகின்றன. தற்போது தேன் கூடுகள் பெருமளவில் உள்ள இடங்களில் 32 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் சுத்தமான, தரமான தேன் நமக்குக் கிடைக்கிறது.

அடுத்தது, சோப்புத் தயாரிப்புத் தொழில். உண்ணா எண்ணெய்யைப் பயன்படுத்தி சோப்புகள் தயாரிக்கப்படுகின்றன. வாரியம் தயாரிக்கும் 'கோபுரம்' சோப்புக்கு நல்ல ஆதரவு இருந்து வருகிறது. திருக்கழுக்குன்றத்திற்கு அருகிலுள்ள சோப்பு உற்பத்திக்



மட்பாண்டத் தொழிலில் 280 தொழில் கூட்டுறவுகளும், 3 வாரியச் சார்பு நிலையங்களும் ஈடுபட்டுள்ளன. இத்தொழிலில் பதினோராயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

கூடம் வாசனையுள்ள குளியல் சோப்புகளைத் தயாரிக்கிறது. இதற்கு நல்லஆதரவுகிடைத்து வருகிறது. 1973—74-இல் ரூ. 41.30 இலட்சம் மதிப்புள்ள சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**கே: கையால் செய்யப்படும் காகிதம் எங்கெங்குத் தயாராகின்றன?**

ப : கையால் செய்யப்படும் காகிதத்துக்கும், காகித அட்டைக்கும்கூட நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. கரும்புச் சக்கை, வைக்கோல், கழிவுப் பஞ்சு, பனியன் முதலிய பொருள்களைப் பயன்படுத்தி இக் காகிதம் தயாரிக்கப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் வீரராகவபுரத்திலும், திருநெல்வேலியில் அத்தியூற்றிலும், கோவையில் செண்பகப் புதூரிலும், திருச்சியில் மகேந்திரமங்கலத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் பிடாகத்திலும், வடார்க்காடு மாவட்டத்தில் அரப்பாக்கத்திலும் கையால் செய்யும் காகிதத் தொழிற்கூடங்கள் உள்ளன.

**கே: 'சாண எரிவாயு'வினால் என்ன நன்மை? இதை அமைக்கக் கதர் வாரியம் உதவி செய்கிறதா?**

ப : விவசாயிகளுக்குள்ள பிரச்சினைகளில்இரசாயன உரப் பற்றாக்குறை ஒரு முக்கிய பிரச்சினையாகும். அவர்களுக்குள்ள மற்றொரு பிரச்சினை எரிபொருள் பற்றாக்குறை. இதற்கு எரிவாட்டி முக்கிய எரிபொருளாக விளங்குகிறது. மாட்டுச் சாணத்தில் எரிபொருளான வாயு நிறைய இருக்கிறது. அந்த வாயுவை எடுத்து எரிபொருளாகப் பயன்படுத்தலாம். இதற்கு 'கோபர் காஸ் இயந்திரம்' (Gobar gas) சிறந்த சாதனமாக விளங்குகிறது. இதன் மூலம் எரிபொருளும், இயற்கை உரமும் ஒரே சமயத்தில் கிடைக்கிறது.

இந்த இயந்திரத்தை நிறுவுவதற்குக் கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் தொழில் நுணுக்க சம்பந்தமான வழிவகைகளைக் கூறுகிறது. அது மட்டுமல்ல, நிதி உதவியும் அளிக்கிறது. இது சம்பந்தமான விவரங்களை அந்தந்த மாவட்ட கதர் வாரிய அலுவலகங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**கே: கதர் கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்குப் புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா ?**

ப : பனை வெல்லத்தைப் போல, எல்லா மாவட்டங்களிலும் தென்னை வெல்லமும் எடுப்பதற்கான ஒரு திட்டம் உள்ளது. கோவையில் தற்போது தென்னை வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது.

சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றைத் தொடங்கவும் திட்டமிட்டு உள்ளோம். சந்தன எண்ணெய்யை மேலை நாட்டினர் அதிகம் விரும்புகின்றனர்.

நாமக்கல்லில் பிண்ணாக்கில் இருந்து எண்ணெய் எடுத்து சோப்பு செய்வதற்கான ஒரு 'யூனிட்' ரூ. 15 இலட்சம் செலவில் விரைவில் துவங்கவிருக்கிறது.

இவ்வாறு தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம், மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்கள் முதல் கலைப் பொருள்கள் வரை மிகச் சிறந்த முறையில் தயாரித்து வழங்கி வருவதைப் பெருமையோடு குறிப்பிடலாம்.


**—பேட்டி: பி. வி. ஜி.**

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 4 கோடி பனைமரங்கள் உள்ளன.

அபாயமின்றிச் சுலபமாக மரமேறவும், அதிகப்படியான பதநீரைப் பெற்று வருவாயை உயர்த்திக் கொள்ளவும், சிறந்ததோர் சாதனத்தைக் கண்டுபிடித்துக் கொடுப்போருக்கு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஒரு இலட்சம் ரூபாய் பரிசாக அளிக்க முன் வந்துள்ளது.



# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

### தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

*சிறு சேமிப்புத் தரும் சிரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1, 650/- |

## சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். **இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை.** சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.

# கல்யாண சமையல் சாதம்!

அது ஒரு திருமண மண்டபம். ஊர்தியிலே வந்து இறங்குவோரை வரவேற்றுப் பந்திக்கு அழைத்துச் செல்லுகிருர்கள். சூடான இட்லி, உப்புமா, காபி ஆகியவை வயிருரத் தருகிருர்கள்.

மத்தியானம் மீண்டும் விருந்துச் சாப்பாடு; அதுவும் இறைச்சியுடன் கூடிய முழுச் சாப்பாடு.

மாலையில் இனிப்பு. காரம் வகைகளுடன் சூடான — சுவையான தேநீர். இரவில் மீண்டும் வயிறு புடைக்கச் சாப்பாடு — மலைப்பழம். இரவு உணவிற்குப் பின் திரைப்படக்காட்சி. மூன்று நாட்களுக்கு இதே விருந்தோம்பல்.


விருந்துகள் முடிந்து திரும்பும் போது கையில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்குத் தருவதற்குப் பதில் 4 கிலோ அருமையான அரிசியும், 60 ரூபாய் பணமும் தந்து அனுப்புகிருர்கள்.

யார் வீட்டுத் திருமணத்திற்காக இந்தத் தடபுடல் விருந்து? மாப்பிள்ளை யார், மணமகள் யார், என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்களா?

இது திருமணமே அல்ல! சென்னை மாநகராட்சி, ரோட்டரி கிளப்பினருடன் சேர்ந்து இரு மாத காலமாகத் தீவிரமாக நடத்தி வரும் 'குடும்பநலத் திட்ட' அறுவைச் சிகிச்சை முகாமில் தான் இத்தனை அருமையான ஏற்பாடுகள் — விருந்துகள் — திரைப் படக்காட்சிகள்.

சென்னை ராயபுரத்திலுள்ள மாநகராட்சி புதிய திருமண மண்டபத்தில் தான் 2-2-75 முதல் இந்தச் சிறப்பான முகாம் நடைபெறுகிறது.

சென்ற ஆண்டு இதே போன்று நடைபெற்ற 'குடும்பநலத் திட்ட' முகாமில் 2,000 ஆடவர்கள் அறுவைச் சிகிச்சையின் பலனைப் பெற்றனர்.




இந்த ஆண்டு 5,000 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்பது இந்த முகாமின் இலக்காகும்.

இந்த அறுவைச் சிகிச்சை முகாமுக்கு வருவோர் யார்?

இதோ! வருகிருர் ராமன். வயது 33. கண்பார்வை இழந்தவர் திண்டிவனத்தை அடுத்த சிற்றூரில் ஒரு வீட்டில் வேலை செய்து வந்தவர். சென்னைக்கு உறவினர் வீட்டிற்கு வந்த இடத்தில் இந்த அருமையான திட்டத்தைக் கேள்வியுற்றதும் ஆர்வமுடன் முன்வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். 'இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்' என்ற கருத்தினை ஏற்றுக்கொண்ட ராமனுக்குத் தற்போது இருப்பது இரண்டு குழந்தைகள் (6 வயதில் பெண் ஒன்று, 3 வயதில் பையன் ஒன்று) மட்டுமே!

அடுத்தவர் திரு. சண்முகம். பின்னி நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்.

பின்னியைச் சேர்ந்தவர் இவர் மட்டுமல்ல. சுமார் 400-க்கும் மேற்பட்ட பின்னி ஊழியர்கள் இந்த முகாமில் பங்கு பெற்றுப் பயன்பெற்றனர். பின்னி நிறுவனத்திலிருந்து மட்டும் இத்தனை அதிக அளவில் வரக்காரணம் யார்? அதன் நிருவாகத்தினர் தான். தங்களது தொழிலாளர்கள் அளவான குடும்பத்தினராக இருந்தால் வளமான வாழ்வு வாழ முடியும் என்பதனை அறிந்து அவர்களே முன்வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளத் தூண்டுகிறார்கள். அதனை ஊக்கப்படுத்துவதற்காக அவர்கள் அறுவைச் சிகிச்சை செய்பவர்களுக்குச் சில சலுகைகள் வழங்குகிறார்கள், அவை:

1. ரூ- 100 மதிப்புள்ள பின்னித் துணி இலவசமாக வழங்குதல்.

2. அறுவைச் சிகிச்சை முடிந்து திரும்பியதும் 6 நாட்களுக்கான ஊதியத்தினை-ரூ.100-க்குக் குறையாது வழங்குதல்.

3. அறுவைச் சிகிச்சை செய்பவர்களின் எண்ணிக்கை 50க்கு மேற்பட்டால் ஒவ்வொரு 50 பேருக்கும் ஒரு எச். எம். டி. கைக்கடிகாரம். 50 பேரின் பெயர்களையும் குலுக்கிப் போட்டு அதில் வெற்றி பெறுவோர்க்கு இப் பரிசினை அளித்தல்.

4. 500—க்கும் மேற்பட்டால் குலுக்கலில் வெற்றி பெறுவோருக்கு புத்தம் புதிய சைக்கிள் பரிசு.

"இவ்வாறு நிருவாகத்தினர் ஊக்குவிப்பதால் ஏராளமான தொழிலாளர்கள் முன்வந்து அறுவைச்சிகிச்சைசெய்துகொள்கிறார்கள். டி.வி.எஸ். நிறுவனமும் இத்தகைய திட்டத்தில் தீவிரமாக இருப்பது அனைவருக்கும் தெரியும்; பின்னி, டி.வி.எஸ் போன்று எல்லாப் பெரிய தொழில் நிறுவனங்களும் இவ்வாறு தங்களது தொழிலாளர்களை ஊக்கப்படுத்தினால், 'குடும்பநலத் திட்டம்' பெருமளவில் வெற்றி பெறும்" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் திரு. அந்தோணி.

இந்த அறுவைச் சிகிச்சைக்கு ஆகும் செலவு என்ன? ஒரு நபருக்குச் சுமார் ரூ 100 வீதம் ஆகிறது. இதில் அரசு தருவது ரூ.60; எஞ்சிய சுமார் 30 ரூபாய் செலவினங்களுக்கான தொகையை ரோட்டரி கிளப் போன்ற சமூகநலச்சங்கங்கள் நன்கொடையாக வழங்குகின்றன. சென்ற ஆண்டு ரோட்டரி கிளப் இந்த முகாமிற்கு ரூ. 56,000 நன்கொடையாக வழங்கியுள்ளது.

சுவை மிக்க சமையலைச் சுத்தமாகச் சமைத்துத் தரும் பணியினை "கில்ட் ஆப் சர்வீஸ்" ஏற்று நடத்துகிறது, ஏ.வி.எம். நிறுவனத்தினர், திரைப்படங்களை இலவசமாகத் தந்து உதவுகிறார்கள்.

எவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்தாலும், அறுவைச் சிகிச்சைக்கு வருவோர் எண்ணிக்கை போதுமான அளவு இருப்பதில்லை. எனவே மக்களைக் கவருவதற்காகப் பல்வேறு வழிகளில் பிரச்சாரம் செய்ய வேண்டியது உள்ளது. அதன் ஒரு பகுதியாகச் சமீபத்தில் இந்தத் திருமண மண்டபத்தின் மேலே குடும்ப நல வாசகம் அடங்கியுள்ள ராட்சதப் பலூன் ஒன்றைப் பறக்க விட்டிருக்கிறார்கள்.

"குடும்பநலத் திட்டத்தின் நற்பயனை எல்லா மக்களும், குறிப்பாக அடித்தளத்திலுள்ள மக்கள், தொழிலாளர்கள் ஆகியோர் புரிந்துகொண்டால், இத்திட்டம் வெற்றி பெறுவது நிச்சயம்: இன்று நமது நாட்டுக்குத் தேவையானவை மூன்று. ஒன்று அதிகமான உணவு உற்பத்தி. அடுத்தது உற்பத்தியாகும் உணவு அனைவருக்கும் கிடைக்க வகை செய்ய அளவான,சிறிய குடும்பம். மூன்றாவது, அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கச் சிறுதொழில் வளர்ச்சி" என்று நாட்டின் அடிப்படைத் தேவைகளை அழகாக எடுத்துரைக்கிறார், மாநகராட்சித் தனி அலுவலர் திரு. டி. வி. அந்தோணி, ஐ. ஏ. எஸ். இந்த முகாமின் முழு வெற்றிக்கு இவரது அயராத உழைப்பும் ஆர்வமும் காரணமென்றால் அது மிகையாகாது.

—கே.ந.

## கிராம நல ஊழியர்கள்!

தஞ்சையில் ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு 10 கிராம நல ஊழியர்கள் (கிராம சேவகர்கள்வீதம் நியமிக்கப்பட்டிருந்தனர். தற்போது தீவிர விவசாயத் திட்டத்திற்காக 20 கிராம நல ஊழியர்களாக அதிகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர். கூட்டுறவு—குடும்பநலத் திட்டம்—விவசாய உதவி மற்றும் கிராம வளர்ச்சிப் பணிகள், யாவும் அவர்களது பணிகளாகும். அவர்கள் தங்க வேண்டிய இடத்தில் தங்கிப் பணிகளைக் கவனிக்கத் தவறினால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.



# வறட்சியிலும் வளம் காப்போம்

— ஆர்.எம்.

"அனல் காற்று வீசிக் கொண்டிருக்கிறது! பச்சைப் பட்டாடை போர்த்தியிருந்த வயல்கள் வறண்டு கிடக்கின்றன! பாலைவனத்திலே பசுந் திட்டுகள் இருப்பதைப்போல, வறண்டு கிடக்கும் பரந்த வயல் வெளிகளுக்கு இடையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பசுமையான ஒரு சில வயல்கள் மட்டுமே கண்ணில் படுகின்றன! இத்தகைய கொடும் வறட்சியில், கோடைச் சாகுபடி திட்டத்தின் மூலம் வேளாண்மைத் துறை என்ன சாதித்துவிடப் போகிறது?'' என்று தென்னார்க்காடு மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பெற்றுள்ள கோடைச் சாகுபடித் திட்டத்தைக் காணச் சென்று கொண்டிருந்த பத்திரிகை நிருபர்களில் ஒருவர் கேட்டார்.

''வேளாண்மைத் துறை கோடைச் சாகுபடி திட்டத்தின் மூலம் என்ன சாதித்துள்ளது; மேலும் என்ன சாதிக்கவிருக்கிறது என்பதை நான் முன் கூட்டியே சொல்வதைவிட இந்தச் சுற்றுப்பயணத்தின் இறுதியில் பத்திரிகை நிருபராகிய நீங்களே சொல்வதுதான் முறையானது'' என்று பத்திரிகை நிருபர்களைச் சென்னையில் இருந்து தென்னார்க்காடு மாவட்டத்திற்கு அழைத்துச் சென்ற இணை வேளாண்மை இயக்குநர் (பயறு வகைகள்) திரு. ஆதிகேசவன் அவர்கள் குறிப்பிட்டார்.

### கோடைச் சாகுபடித் திட்டம்

"கோடைச் சாகுபடித்திட்டத்தின் நோக்கம் என்ன என்பதைச் சொல்லுங்கள்'' என்று அந்த நிருபர் கேட்டார்.

''வரலாறு காணாத வகையில் இந்த ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டது! அதனால் பல இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த உணவு தானியப் பயிர்களும், வாணிபப் பயிர்களும் காய்ந்து கருகிவிட்டன! அதன் காரணமாக மொத்தத்தில் வேளாண்மை உற்பத்தி-குறிப்பாக உணவு தானிய உற்பத்தி குறைந்து விட்டது! உணவு தானிய உற்பத்திக் குறைவை இயன்ற அளவில் ஈடுகட்டவே, தமிழ்நாடு வேளாண்மைத் துறை கோடைச் சாகுபடி திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இருக்கின்ற கிணறுகளில் கிடைக்கின்ற நிலநீரை எடுத்து மிகமிகச் சிக்கனமாகவும், சிறந்த முறையிலும் பயன்படுத்தி உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதே கோடைச் சாகுபடி திட்டத்தின் நோக்கமாகும்'' என்று திரு ஆதிகேசவன் குறிப்பிட்டார்.

### சிக்கனமாகத் தண்ணீரைப் பயன் படுத்தல்

''தண்ணீரைச் சிக்கனமாகவும், சிறந்த முறையிலும் பயன்படுத்துவது என்று குறிப்பிட்டீர்களே அதைப் பற்றி கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்'' என்று கேட்டார் அந்த நிருபர்.

''பொதுவாக நெல்சாகுபடி செய்ய அதிகமாகத் தண்ணீர் தேவைப்படும். ஒரு ஏக்கரில் நெல்சாகுபடி செய்வதற்குத் தேவைப்படும் தண்ணீரைக் கொண்டு 2.5 ஏக்கரில் கேழ்வரகு அல்லது மக்காச்சோளம் பயிரிடலாம்; அதே போல ஒரு ஏக்கரில் நெல்சாகுபடி செய்வதற்குத் தேவைப்படும் தண்ணீரைக் கொண்டு 3 ஏக்கரில் கம்பு அல்லது சோளம் பயிரிடலாம். அல்லது 5 ஏக்கரில் குறுகிய கால வயதுடைய ஊட்டச்சத்து மிக்க பயறு வகைகளைப் பயிரிடலாம். எனவே, வறட்சி நிலவும் இந்நேரத்திலே, நெல் சாகுபடி செய்வதற்குப் பதிலாக கேழ்வரகு, மக்காச்சோளம், கம்பு, சோளம் போன்ற சிறு தானியங்களையும், 'அஞ்சுகம்' பச்சைப் பயறு, 'கோ-2'' பச்சைப் பயறு, 'கோ. 2' உளுந்து, 'டீ. 9' உளுந்து, 'கோ-2' துவரை, 'பிரபாத்' துவரை போன்ற குறுகிய கால வயதுடைய பயறு வகைகளையும் பயிரிட்டு பயனடையுமாறு உழவர் பெருமக்களை வேளாண்மைத் துறை வற்புறுத்தி வருகின்றது. உழவர் பெருமக்கள் இந்தக் கோடைச் சாகுபடி திட்டத்தில் நெல் மட்டுமே பயிரிட விரும்பினால்—தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் வசதி இருக்குமானால்—நெல் பயிரிடுமாறும், ஆனால் குறுகிய கால வயதுடைய உயர்விளைச்சல் ரகங்களையே தேர்தெடுத்துப் பயிரிடுமாறும் வேளாண்மைத்துறை பரிந்துரைக்கின்றது. இவ்வாறு திட்டமிட்டுப் பயிரிடுவதால் தண்ணீரைச் சிக்கனமாகவும், சிறந்த முறையிலும் பயன்படுத்த முடிகிறது'' என்றார் திரு ஆதிகேசவன்.

### மாநில இலக்கு

''கோடைச்சாகுபடி திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு எவ்வளவு ஏக்கரில் பயிரிடத் திட்டமிட்டுள்ளீர்கள்?'' என்று மற்றொரு நிருபர் கேட்டார்.

''வறட்சியிலும் வளம் காப்போம்! என்ற இலட்சியத்துடன் தமிழ்நாட்டில், இந்த

ஆண்டில், கோடைச் சாகுபடி திட்டத்தின்கீழ் 5 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களையும், 6 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் சிறுதானிய ரகங்களையும் 6 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகளையும் பயிரிடத் திட்டமிட்டுள்ளோம்'' என்றார் திரு. ஆதிகேசவன்.

இவ்வாறு பல்வேறு பயன் மிகு வேளாண்மைச் செய்திகளைப் பற்றி விவாதித்துக் கொண்டே திண்டிவனத்தை அடைந்தோம். திருச்சி மண்டல துணை வேளாண்மை இயக்குநர் திரு ஜே. பால்ராஜ் ஜோசப் அவர்களும், திண்டிவனத்தில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களும், தென்னார்க்காடு மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இராசமாணிக்கம் அவர்களும் பத்திரிகை நிருபர்களை வரவேற்றனர்.

**தென்னார்க்காடு மாவட்ட இலக்கு**

''வறட்சி வாட்டும் நிலையிலே தென்னார்க்காடு மாவட்டத்தில் கோடைச் சாகுபடி திட்டத்தின் கீழ் 70,000 ஏக்கரில் நெல்லும், 21,500 ஏக்கரில் 'எச். பி. 5' கம்பும், 600 ஏக்கரில் 'சி.எஸ். எச். 5' சோளமும், 30,000 ஏக்கரில் கேழ்வரகும், 9,000 ஏக்கரில் வீரிய மக்காச் சோளமும் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கு மேல்மட்ட அலுவலர்கள் நிர்ணயித்தது அல்ல! நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வது போல், கீழ்மட்டத்தில் உள்ள துணை வேளாண்மை அலுவலர்களால் (Deputy Agricultural Officers) அந்தந்த வட்டாரத்தில் உள்ள நீர்ப்பாசன வசதிக்கு ஏற்ப-திட்டமிடப்பட்டதை வைத்தே இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கினை எய்திடத் துணை வேளாண்மை அலுவலர்கள், முதலில்கோடை சாகுபடித் திட்டத்தில் பங்கு பெறக் கூடிய, நீர்ப்பாசன வசதியுடைய, ஆர்வம் உடைய உழவர் பெருமக்களைத் தனித் தனியே சந்தித்துக் கலந்தாலோசித்தே தேர்ந்தெடுத்துள்ளனர். பிறகு ஊர்நல உதவியாளர்களின் (Gramasevaks) உதவியுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர் பெருமக்கள் ஒவ்வொருவரும் 'கோடைப் பருவத்தில் என்ன பயிர் செய்ய விரும்புகிறார்?', 'எவ்வளவு ஏக்கரில் பயிரிட விரும்புகிறார்?', 'எவ்வளவு கடன் வேண்டும்?' என்கிறார் என்பதைக் கலந்தாலோசித்து, அதற்கேற்ப பண்ணைத் திட்டம் தயாரித்துள்ளனர். பண்ணைத் திட்டத்தின் ஒரு நகல் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களின் பரிந்துரையுடன் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. பண்ணைத் திட்டத்தில் கண்டுள்ளவாறு கூட்டுறவுக் கடன் கிடைக்க மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி உதவி வருகிறது. பண்ணைத் திட்டத்தில் கண்டுள்ளவாறு ஒவ்வொரு உழவர் பெருமகனுக்கும் தேவையான விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள் ஆகியவற்றை ஒவ்வொரு துணை வேளாண்மை அலுவலரும் வழங்கியுள்ளதுடன், சாகுபடியின் ஒவ்வொரு கட்டத்திலும் உழவர் பெருமக்களுக்கு நவீன சாகுபடியின் நுட்பங்களை நேரடியாகச் செய்து காட்டி விளக்கி வருகின்றனர். இவ்வாறு ஊர்நல உதவியாளர்கள், வேளாண்மை உதவியாளர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி அலுவலர்கள், கூட்டுறவு அலுவலர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியின் காரணமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் கோடைச் சாகுபடி திட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்றப்பட்டுள்ளது. அதைப் பத்திரிகை நிருபர்களாகிய உங்களுக்குக் காட்டிடவே இச்சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்துள்ளோம். இச்சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். முதலில் திண்டிவனம் வேளாண்மைக் கோட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இப்பொழுது காணப் புறப்படுவோம்'' என்று திருச்சி மண்டல துணை வேளாண்மை இயக்குநர் திரு. ஜே. பால்ராஜ் ஜோசப் அவர்கள் கூறினார்.

**உழவர்களுக்குச் சலுகைகள்!**

''கோடைச் சாகுபடித் திட்டத்தில் பங்கு கொள்ளும் உழவர்களுக்கு ஏதேனும் தனிச் சலுகைகள் அளிக்கப்படுகிறதா?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

**"கோடைச் சாகுபடியில் ஈடுபடும் உழவர் பெருமக்களை ஊக்குவிக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 6 சலுகைகளை அறிவித்துள்ளார். அவை :—**

(1) கோடைப் பருவத்தில் மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்ய, ஒவ்வொரு நாளும் இரவில் தரும் மின்சாரத்துடன், பகலில் 6 மணி நேரத்திற்கு மின்சக்தி அளிக்கப்படும்.

(2) கிணறு வெட்டி அல்லது குழாய்க்கிணறு அமைத்து அல்லது வடிமுனைக்குழாய் அமைத்து, 'டீசல்' என்ஜின் பொருத்தி தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்ய விரும்பினால் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுவதுடன், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியில் பணி கூட்டுறவு இணையகம் மூலம் வாங்கும் 'டீசல்' என்ஜின் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 1,000 மானியம் வழங்கப்படும்.



(3) கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் சாகுபடி கடன் கொடுக்கப்படும்.

(4) கோடைச் சாகுபடிக்கு வேண்டிய அளவு இரசாயன உரத்தைத் தட்டுப் பாடின்றி வழங்கப்படும்.

(5) கோடைச்சாகுபடி செய்யும் உழவர்களுக்கு வேண்டிய பூச்சிப் பூஞ்சாள மருந்துகளையும், தூவான்களையும்வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும்.


(6) கோடைப் பருவத்தில் மூன்ருவது போகமாகவும் புதிதாகவும், நெல் பயிரிடுவோருக்கு, 'லெவி'யிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.

(7) கோடைப்பருவத்தில் நெல்பயிரிடுவோர் தாங்களாகவே மனமுவந்து 'லெவி' நெல் கொடுக்க முன்வந்தால், கொள்முதல் விலைக்கு மேல் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

**திரும்பிய இடத்திலெல்லாம் போஸ்டர்கள்!**

இந்த ஏழு சலுகைகளையும் விளக்கிடும் வண்ணச் சுவரொட்டிகள் ( Posters ) பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒட்டப்பட்டுள்ளன! கோடைச் சாகுபடிக்கு ஏற்ற ரகங்களைப் பற்றியும், சாகுபடி நுட்பங்களைப் பற்றியும் விளக்கிடும் பல வண்ணச் சுவரொட்டிகள் கிராமங்களில் எல்லாம் ஒட்டப்பட்டுள்ளன! இச்சுவரொட்டிகளைத் தட்டிகளில் ஒட்டி, அத்தட்டிகளைச் சாலை ஓரங்களில் உள்ள மரங்களில் எல்லாம் ஆணியால் அடித்துப் பொருத்தியுள்ளோம். திரும்பிய இடத்திலெல்லாம் காணப்படும் வேளாண்மை விளம்பரச் சுவரொட்டிகள், உழவர் பெருமக்களின் உள்ளத்திலே ஆர்வத்தைத் தூண்டி கோடைச் சாகுபடியில் ஈடுபட வழி வகுத்துள்ளன. மேலும் இரவு நேரங்களில் நவீன சாகுபடி முறைகள் பற்றிய திரைப்படங்களும், ஸ்லைடுகளும் காட்டப்பட்டு, உழவர்களுக்குக்கோடைச்சாகுபடி பற்றிய நல்விளக்கம் அளிக்கப்படுகிறது'' என்ருர் திரு. ஜோசப்.

அடுத்து, கோடை சாகுபடி திட்டம் பற்றி வெளியிடப்பட்டுள்ள வண்ண வண்ணச் சுவரொட்டிகள், சாகுபடி




நுட்பங்கள் அடங்கிய சிறுசிறு வெளியீடுகள், புகைப்படங்கள் ஆகியவற்றை விளக்கி அவற்றின் தொகுதியைப் பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கியதுடன், வேளாண்மை நுட்பங்கள் பற்றிய ஸ்லைடுகளையும் போட்டுக் காட்டினர். பிறகு திண்டிவனத்திற்கு அருகில் உள்ள பாலக்குப்பத்திற்குப்பத்திரிகை நிருபர்களை அழைத்துச் சென்றனர்.

''பலாக்குப்பத்தில் கோடை சாகுபடி திட்டத்தின்கீழ் பயிர் செய்வதற்கு 24 உழவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த ஊரில் உள்ள 14 மின் சார மோட்டர்களையும், 3 கபிலைகளையும் பயன்படுத்தி, 16 ஏக்கரில் நெல்லும், 57 ஏக்கரில் கம்பும், 29 ஏக்கரில் கேழ்வரகும், 3 ஏக்கரில் சோளமும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 21 ஏக்கரில் கேழ்வரகும், 4 ஏக்கரில் நெல்லும் பயிரிடப்பட்டுள்ளது'' என்று துணை வேளாண்மை அலுவலர் குறிப்பிட்டார்.

பாலக்குப்பத்தில் கேழ்வரகு பயிரிட்டிருந்த ஒரு உழவர் பெருமகனைப் பத்திரிகைநிருபர்கள் சந்தித்துக்கோடைச சாகுபடித்திட்டம் பற்றி கேள்வி கேட்டனர். அந்த உழவர் பெருமகன் ''வழக்கமாக கோடைப் பருவத்தில் என் கிணற்றில் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு 2 ஏக்கரில் நெல் பயிரிடுவேன். இந்த ஆண்டு எங்க ஏ.இ.ஒ. ( AEO ) (துணை வேளாண்மை அலுவலர்) குறிப்பிட்டபடி 1.00 ஏக்கரில் நெல்லும், 2.50 ஏக்கரில் கேழ்வரகும் பயிரிட்டுள்ளேன். பயிர் நன்ருகவே உள்ளது. கேழ்வரகு பயிருக்கு 'கால்சியம் அமோனியம் நைட்ரேட்' உரம் கிடைக்கவில்லை. மற்றபடி எனக்கு எந்தவித கஷ்டமும் இல்லை'' என்ருர். உடனே துணை வேளாண்மை இயக்குநர், 'கால்சியம் அமோனியம் நைட்ரேட்' உரம் இருப்பில் இல்லை என்ருல், யூரியா கொடுக்க ஏற்பாடு செய்யும்படி துணை வேளாண்மை அலுவலருக்கு ஆணையிட்டார். துணை வேளாண்மை அலுவலர் 'சரி' என்று ஒப்புக்கொண்டு அந்த உழவர் பெருமகனிடம் ''நாளை உரக் கார்டை எடுத்து வாருங்கள். யூரியா கொடுக்க ஆவன செய்கின்றேன்'' என்று கூறியதும் அந்த உழவர் பெருமகன் உள்ளபடியே மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து நன்றி கூறினுர்.

அடுத்து கொள்ளார் என்ற ஊரில் உள்ள திரு. முத்துக்கிருஷ்ணு ரெட்டியார் என்பவரது பண்ணையைப் பத்திரிகை நிருபர்கள் பார்வையிட்டு விட்டு, அந்த உழவர் பெருமகனிடம் சரமாரியாகக் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். அந்த உழவர் பெருமகன் வேளாண்மைத்துறையினர் செய்துவரும் உதவிகளை எல்லாம் கூறி விளக்கினுர். நீர் மேலாண்மைப் பணி ( Water Management ) திட்டத்தின்படி கிணற்றிலிருந்து மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் இறைத்து, பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ளகுழாய் வழியாக, மேட்டுப் பாங்கான நிலத்திற்குத் தண்ணீர் கொண்டு போய், புன் செய் நிலமாக இருந்ததை, நன்செய் நிலமாக மாற்றியுள்ளதை விவரித்தார்.

**மின்சாரம் கிடைக்கிறது!**

''பகலில் 6 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்கிருர்களே! உங்களுக்குக் கிடைக்கிறதா?'' என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

''பகலில் 6 மணி நேரத்திக்குக் குறையாமல் மின்சாரம் கிடைக்கிறது. ஆனல் வறட்சியின் காரணமாகப் பலருடைய கிணற்றில் தண்ணீர்தான் கிடைக்கவில்லை!'' என்று முத்துக்கிருஷ்ண ரெட்டியார் கூறினர்.

பிறகு ரெட்டணை என்ற கிராமத்தில் திரு. ஆர்.டி. சுப்பராமன் அவர்களால் 10 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள 'எம். 4', 'எச். 165' ரக மரவள்ளிப் பயிரையும், கேழ்வரகையும் பார்வையிட்டோம்.

''ஏக்கருக்கு 4,000 கரணை வீதம் நடவுசெய்து மரவள்ளி பயிரிட்டுள்ளோம். ஒவ்வொரு செடியில் இருந்தும் குறைந்தது 15 கிலோ கிழங்கு பெறமுடியும் என்று நம்புகின்றேன்'' என்று திரு சுப்பராமன் அவர்கள் கூறினர்.

அதே ஊரில் உள்ள திரு. ரெங்கபாஸ்யம் என்பவர், ''வேளாண்மைத் துறையினரின் உதவியுடன் நான், 'சி.பி.எஸ்.156' என்ற வீரிய பருத்தியையும், 'வரலட்சுமி' பருத்தியையும், 'எச். 165' மரவள்ளியுடன் ஊடுபயிராக 'டி.9' என்ற உளுந்தையும் பயிரிட்டுள்ளேன். வேளாண்மைத் துறையின் நீர் மேலாண்மைப் பணிகள் பயன் உடையது'' என்று குறிப்பிட்டுவிட்டு அவைகள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டினர்.

இரவு வந்துவிட்டது! பத்திரிகை நிருபர்களை அழைத்துக் கொண்டு வேளாண்மைத் துறையின் வாகனங்கள் கடலூர் நோக்கி விரைந்துகொண்டிருந்தன!

**இனிப்பான செய்திகள்!**

இரவு சுமார் 8.00 மணி இருக்கும்! கொல்லியமங்கலம் என்ற ஊரின் அருகில் ஒரு பெரியவர் கையில் 'லாந்தர்' விளக்கை வைத்துக் கொண்டு பத்திரிகை நிருபர்கள் சென்ற வாகனங்களை நிறுத்தும்படி கையால் சைகை செய்தார். வண்டிகள் நின்றன!

''என்ன சார்! நீங்களெல்லாம் வருகின்றீர்கள் என்று கேள்விப்பட்டு, உங்களை அழைத்துச் சென்று என் பண்ணையைக் காட்டலாம் என்று விரும்பி, நான் காத்துக் கிடக்கின்றேன். என்னைப்பார்க்காமல் போகப் பார்க்கின்றீர்களே!'' என்ருர் அந்த பெரியவர்.

''தவருக நினைக்காதீர்கள்! இரவு மணி எட்டுக்கு மேல் ஆகிவிட்டதால்தான், நாங்கள் நேரடியாகக் கடலூர் புறப்பட்டுப் போகிருேம். பத்திரிகை நிருபர்களிடம் சொல்ல விரும்புவதைச் சுருக்கமாகச் சொல்லி, சீக்கிரம் எங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறினர் துணை வேளாண்மை இயக்குநர்.

''எல்லோரும் பசியோடு இருப்பீர்கள் என்று எண்ணி, வறுத்த நிலக்கடலையும், வெல்லமும், சூடான காப்பியும் வைத்திருக்கின்றேன். மறுக்காமல் சாப்பிட்டுவிட்டு செல்லுங்கள்'' என்று கூறி வறுத்த நிலக்கடலையையும், வெல்லத்தையும் வழங்கினர்.

அவைகளைச் [illegible] சுவைத்துக் கொண்டே பத்திரிகை நிருபர்கள் அப்பெரியவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டனர்.

''என் பெயர் வீராசாமி ரெட்டியார். எனக்கு வேளாண்மைத்துறையினரிடம் மிகுந்த பற்று உண்டு. வேளாண்மைத் துறையினர் கூறியபடி 1.5 ஏக்கரில் 'எம்.சி.யு. 5' பருத்தி பயிரிட்டு 7 குவிண்டால் பருத்தியும், ஒரு ஏக்கரில் 'டி.எம்.வி. 9' மணிலா பயிரிட்டு 29 மூட்டை (40 கிலோ கொண்ட மூட்டை) நிலக்கடலையும் விளைவித்தேன். என் கிணற்று நீரைக் கொண்டு முன்பு 5 ஏக்கரில் சாகுபடி செய்தேன். இப்பொழுது நீர் மேலாண்மைப் பணி முறையை மேற்கொண்டு, அதிகப்படியாக 6 ஏக்கரில் அதாவது மொத்தத்தில் 11 ஏக்கரில் சாகுபடி செய்துள்ளேன். இவ்வாறு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, அதிகப் பரப்பளவில் பயிரிடுவதற்கான நீர் மேலாண்மைப் பணியை மேற்கொண்டதற்கு ரூபாய் 3,000 செலவாகியுள்ளது. அதில் ரூபாய் 2,333-ஐ, வேளாண்மைத்துறை கடனுகக் கொடுத்துள்ளது. கோடைச் சாகுபடித் திட்டத்தின்கீழ் 'ரத்ன' நெல்லும், 'சாரதா' ராகியும் பயிரிட்டுள்ளேன். மேலும் பருத்தியையும் நிலக்கடலையையும் கலப்புப் பயிராகவும், கேழ்வரகையும் பருத்தியையும் கலப்புப் பயிராகவும் பயிரிட்டுள்ளேன். வேளாண்மைத் துறையினரின் பரிந்துரைப்படி நான் சாகுபடி செய்ததால், அதிக வருவாய் பெற்று, கொஞ்சம் நிலமும் வாங்க முடிந்துள்ளது'' என்று அப்பெரியவர் கூறினர்.

அவர் அளித்த வறுத்த நிலக்கடலையும், வெல்லமும் அளித்த இனிப்பைவிட அவர் சொல்லிய செய்திகள் பத்திரிகை நிருபர்களுக்கு இனிப்பானதாக இருந்தது என்ருல் மிகையல்ல!

இரவு 10.00 மணிக்கு கடலூரில் உணவு உண்டுவிட்டு, அன்றைய பயணத்தைப் பற்றியும், மறுநாள் பயணத்தைப் பற்றியும் பேசி முடித்துவிட்டு இரவு 11.00 மணிக்குஅயர்ந்து படுத்தோம்.

**கூட்டுறவுக் கடன்கள்**

2.3.75 அன்று காலை 7.30 மணிக்கே எங்கள் பணி



தொடங்கியது! தென்னுர்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் செயலாளர், ''தென்னுர்க்காடு மாவட்டத்தில் 1974-75-ஆம் ஆண்டில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் குறுகிய காலக் கடனுக 720 இலட்சம் ரூபாய் வழங்க திட்டமிட்டோம். அதில் இதுவரை 697 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. பால் மாடுகள் வாங்கவும், செம்மறி ஆடுகள் வாங்கவும், கோழிப் பண்ணை அமைக்கவும் இந்த ஆண்டில் நடுத்தரக் காலக் கடனுக இதுவரை 45 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 3.25 கோடி ரூபாய் குறுகியகாலக் கடனுக வழங்கியுள்ளோம். கோடைச் சாகுபடி திட்டத்தின்கீழ் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு குறுகிய காலக் கடனுக ஏறத்தாழ 3 கோடி ரூபாய் வழங்க திட்டமிட்டுள்ளோம். மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் மூலம் 9,841 பண்ணைத் திட்டங்கள் மத்திய வங்கிக்கு வந்தன. பிப்ரவரி 1975 முடிய, கோடைச் சாகுபடி திட்டத்தில் பங்குபெறும் 1,580 உழவர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள உழவர்களுக்கு 31.3.75-க்குள் கடன் கொடுக்கப்பட்டு விடும்'' என்று விளக்கினுர்.

பிறகு எங்கள் பயணம் தொடர்ந்தது! ஆலப்பாக்கம் என்ற கிராமத்தில் உள்ள திரு வி. ஜெயராமன் என்ற உழவர் பெருமகனின் வயலில் அமைக்கப்பட்டிருந்த 'கல்ச்சர் 1722', 'கல்ச்சர் 2222', 'காஞ்சி' ஆகிய ரகங்களில் எது கோடை பருவத்திற்கு ஏற்றது என்பதை முடிவு செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த அனுசரணை ஆராய்ச்சித் தளையைப் பார்வையிட்டோம். அந்தத் தளை அமைக்கப்பட்டதின் நோக்கம், அதனுல் ஏற்படவிருக்கும் நன்மை, செய்முறை ஆகியவைகளைப் பற்றியும், ஆலப்பாக்கத்தில் நடைபெற்று வரும் தீவிர மருந்து தெளிப்புப் பணிகளைப் பற்றியும் ( Mass Spraying ) கடலூர் வேளாண்மைக் கோட்ட மாவட்ட அலுவலர் திரு. ராமலிங்கம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

**காய்ந்திடும் பயிர்களைக் கண்டோம்!**

அடுத்து, பெருமாள் ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் கோடை



சாகுபடி திட்டத்தின்கீழ் 4,100 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களைப் பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. பெருமாள் ஏரியில் தண்ணீர் இல்லாததனுல் பல இடங்களில் நெற்பயிர் வாடி வதங்கிக் காய்ந்து வருவதைக் கண்டோம். பெருமாள் ஏரி ஆயக்கட்டைச் சார்ந்த உழவர் பெருமக்கள் பல்வேறு இடங்களில் கூட்டம் கூட்டமாகத் திரண்டு 'காய்ந்திடும் பயிரைக் காப்பாற்ற உடன் வழி செய்திட வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தனர். காய்ந்திடும் பயிரைக் காத்திடத் துடிக்கும் உழவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, காய்ந்து கிடக்கும் பெருமாள் ஏரியையும் கண்டுவிட்டு, புவனகிரி, சிதம்பரம், லால்பேட்டை வழியாக வீராணம் ஏரி வரை ஆங்காங்கே நன்செய்த் தரிசில் வேளாண்மைத் துறையினரின் முயற்சியினுல் முதன் முதலாகப் பயிரிடப்பட்டிருந்த குறுகிய கால உளுந்து வகைகளையும், பச்சைப் பயறு வகைகளையும் கண்டு வியந்தோம்!

இவ்வாறு பல்வேறு இடங்களைப் பார்வையிட்டுக் கொண்டே வந்த எங்களை மடப்பட்டுக்கு அருகில் உள்ள சரவண குப்பத்தில் திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. இலட்சுமி நாராயண ரெட்டியார் அவர்களும், ஒன்றிய ஆணையாளரும் வரவேற்றனர். சரவணக் குப்பத்தில் திரு நடேசன் என்பவரின் வயலில் பயிரிடப்பட்டிருந்த 'ஐ.ஆர். 8' நெல்லைப் பார்வையிட்டுவிட்டு, திருவெண்ணெய் நல்லூர் பகுதிக்குச் சென்ருேம்!


**திருவெண்ணெ நல்லூரின் சாதனை**

''திருவெண்ணெய் நல்லூரில் வழக்கமாக கோடைப் பருவத்தில் சுமார் 550 ஏக்கரில் நெல் பயிரிடப்படும். தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக இந்த ஆண்டில் கோடைச் சாகுபடி திட்டத்தின்கீழ் 400 ஏக்கரில்தான் நெல்பயிரிட முடியும் என்று நம்பி, அதற்கேற்ப திட்டமிட்டுள்ளோம். இப்பகுதியில் ஏறத்தாழ 90 குழாய்க் கிணறுகள் உள்ளன. இவைகளைப் பயன்படுத்தி 120 உழவர்கள் இதுவரை 180 ஏக்கரில் 'ஐ.ஆர். 20' நெல் ரகத்தையும், 100 ஏக்கரில் 'ஐ.ஆர் 8' நெல் ரகத்தையும் பயிரிட்டுள்ளனர். மேலும் 120 ஏக்கரில் விரைவில் நெல்பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது'' என்று புள்ளி விவரத்தோடு திரு. இலட்சுமி நாராயண ரெட்டியார் கூறினுர். அது கண்டு வியந்த பத்திரிகை நிருபர்கள் அவரிடம் சரமாரியாகக் கேள்வி கேட்டனர். உழவர்களின் பிரச்சனையை நன்கு உணர்ந்துள்ள திரு. இலட்சுமி நாராயண ரெட்டியார், பத்திரிகை நிருபர்கள் ஒத்துக்கொள்ளும் வகையில் பிரச்சினைகளை எடுத்துக் காட்டினுர்.

**விவசாயிகளின் வேண்டுகோள்**

''அரசாங்கம் தரும் கடன் மூலம் கிணறு வெட்டி அல்லது குழாய்க் கிணறு அமைத்து மற்றவர்களும் நெல் பயிரிடக் கூடாதா?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

''செய்யலாம் சார்! ஆனுல் ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடையில் குறைந்



தது 480 அடி இடைவெளி இருந்தால்தான், நிலவளவங்கி மூலம் கடன் கொடுக்கிறார்கள். இதனால் பலர் கடன் பெற முடியவில்லை. இந்த இடைவெளி தூரத்தைக் குறைத்தால்தான் சிறிய விவசாயிகள் கடன்பெற்று கிணறு அல்லது குழாய்க்கிணறு அமைக்க முடியும். இவ்விதியை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து இடைவெளி தூரத்தைக் குறைக்க முன்வர வேண்டும் என்று விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்' என்று திரு இலட்சுமி நாராயணரெட்டியார் வேண்டுகோள் விடுத்தார். கூடியிருந்த விவசாயிகள் அனைவரும் அவர் கருத்தை ஆமோதித்தனர்.

கிராமம் என்ற ஊரில் பலர் கேழ்வரகு பயிரிட்டிருக்கின்றார்கள். அந்த ஊரில் 80 ஏக்கரில் புதிதாகச் சிறு தானியங்களைப் பயிரிட்டு உள்ளனர்.

**கேழ்வரகின் முக்கியத்துவம்!**

''தண்ணீர் வசதி இருக்கும்பொழுது நெல் பயிரிடக்கூடா கூடாதா?'' என்று ஒரு நிருபர் கேட்டார்.

''நெல் பயிரிடலாம் சார்! ஆனால் நெல்பயிரிடுவதைவிட, கேழ்வரகு பயிரிடுவதே சிறந்தது! ஏனெனில், கேழ்வரகு பயிரிட அதிகத் தண்ணீர் தேவையில்லை. இதைவிட முக்கியமான காரணம் என்னவெனில், ஒரு ஏக்கரில் விளையும் நெல்லைக் கொண்டு எவ்வளவு மக்களுக்கு உணவளிக்க முடியுமோ, அதைவிட 3 பங்கு மக்களுக்கு ஒரு ஏக்கரில் விளையும் கேழ்வரகைக் கொண்டு உணவு அளிக்க முடியும்! மேலும், கேழ்வரகு ஊட்டச்சத்து மிகுந்தது என்பதை இப்பகுதி மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். எனவே, தான் இப்பகுதிகளில் உள்ள மக்கள் கேழ்வரகு பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்'' என்று திரு. இலட்சுமி நாராயண ரெட்டியார் குறிப்பிட்டார்.

காலைமுதல் தொடர்ந்து பயணம் செய்து கொண்டே வந்த களைப்பு தீர விழுப்புரத்தில் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டோம். பத்திரிகை நிருபர்களால் உடலுக்குத்தான் ஓய்வு கொடுக்க முடிந்ததே தவிர, உள்ளத்திற்கு ஓய்வு கொடுக்க முடியவில்லை! அவர்களுக்கு ஏற்பட்ட ஐயங்களை விளக்கிடும்படி இணை வேளாண்மை இயக்குநர் திரு. ஆதிகேசவன் அவர்களையும், துணை வேளாண்மை இயக்குநர் திரு ஜோசப் அவர்களையும் கேட்டனர். ஏறத்தாழ 1 மணி நேர விவாதம் நடந்தது. ஐயம் தீர்ந்ததும் சென்னை நோக்கிப் பயணம் தொடர்ந்தோம். ஆனால் எங்கள் உள்ளம், கண்டதையும் கேட்டதையும் பின் கண்டவாறு தொகுத்துக் கொண்டிருந்தது!

**தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்**

வழக்கமாகக் கோடைப் பருவத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1.53 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடியாகும். இதில் பெரும்பகுதி இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக, சாகுபடி செய்யப்படாமல் கிடக்கநேர்ந்துள்ளது. ஆனால் வேளாண்மைத்துறையினரின் இடையறாத முயற்சியால் கோடை சாகுபடி திட்டத்தின்கீழ் இதுவரை (2.3.75), 35,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் மேலும் 40,000 ஏக்கரில் நெல் பயிரிட வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

அதுபோல் வழக்கமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் கோடைப் பருவத்தில் ஏறத்தாழ 53,000 ஏக்கரில் சிறு தானியங்கள் பயிராகும். ஆனால் வேளாண்மைத்துறையினரின் விடாமுயற்சியால் கோடைச் சாகுபடி திட்டத்தின் கீழ் இதுவரை (2-3-75) 30,000 ஏக்கரில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன. மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் மேலும் 40,000 ஏக்கரில் கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற சிறுதானியங்களைப் பயிரிட வேளாண்மைத்துறை ஆவன செய்துள்ளது.

இந்த ஆண்டு கோடைப் பருவத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் நன்செய்த்தரிசு நிலங்களில் முதன் முதலாக 40,000 ஏக்கரில் குறுகிய கால பயறு வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. அதேபோல் முதன் முதலாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் 7,000 ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது".

மேலும் ஏப்ரல் மாதத்தில் ஏறத்தாழ 9,000 ஏக்கரில் வீரிய மக்காச் சோளம் பயிரிடவும் வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

கோடைச் சாகுபடிக்குத் தேவையான மின்சாரம் இரசாயன உரம், கூட்டுறவுக் கடன் வசதி ஆகியவை தென்னார்க்காடு மாவட்டத்தில் தட்டில்லாமல் கிடைக்கின்றன

**பத்திரிகை நிருபர் அளித்த பாராட்டு!**

இணை வேளாண்மை இயக்குநர் திரு. ஆதிகேசவன் அவர்கள், வறட்சி வாட்டும்போது வேளாண்மைத்துறை என்ன சாதித்துவிடப் போகிறது என்று கேட்ட நிருபரிடம், ''இப்பொழுது சொல்லுங்கள் வேளாண்மைத்துறையின் சாதனையைப் பற்றி'' என்று கேட்டார்.

''கொளுத்தும் வெய்யிலில், கொட்டிடும் வியர்வையைக் கூட துடைக்க நேரமின்றி. உழைக்கும் உழவர் பெருமக்களுக்கு, வறட்சியிலும் வளங்காக்கும் வழிமுறைகளைக் கூறி, தென்னார்க்காடு மாவட்டத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்க வேளாண்மைத் துறையினர் தேனீக்களென சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகின்றனர். வேளாண்மைத் துறையினரின் சாதனைப் பாராட்டுக்குரியதே!'' என்று அந்த நிருபர் தெரிவித்தார். எங்கள் பயணம் இனிதே முடிந்தது!

## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண் 151

தபால் பை எண் : 171 தொலைபேசி எண் : 240

சேலம்-1.

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிபேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். நடைமுறை மூலதனம் ரூ. 1,711 லட்சம்.

வட்டி விகித அட்டவணை 16-1-75 தேதி முதல்.

| | | |
|---|---|---|
| கால் டெபாசிட்டுகள் : | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}$% |
| சீசன் டெபாசிட்டுகள் : | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3 % |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}$% |

| | | |
|---|---|---|
| பிக்செட் டெபாசிட்டுகள் : | 1. 61 மாதங்களுக்கு மேல்...... | $10\frac{1}{2}$% |
| | 2. 36 முதல் 61 மாதங்களுக்குள் | $9\frac{1}{2}$% |
| | 3. 12 முதல் 36 மாதங்களுக்குள் | $8\frac{1}{2}$% |
| | 4. 9 முதல் 12 மாதங்களுக்குள் | $7\frac{1}{2}$% |
| | 5. 6 முதல் 9 மாதங்களுக்குள் | $6\frac{1}{2}$% |
| | 6. 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் | 6 % |

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$% சேமிப்புக் கணக்கு $5\frac{1}{2}$%

*ரூ. 5,000/- மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவசப் பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. *பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. *ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. *இதர விவரங்களுக்கு எமது தலைமை மற்றும் 31 கிளைகளிலும் தொடர்பு கொள்க.

| | | |
|---|---|---|
| **எம். அய்யனர்,** | **எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ,** | **கே. இராசப்பன், எம்.ஏ.,** |
| துணைப் பதிவாளர் | தலைவர். | சி.ஏ.ஐ.ஐ.பி., சி.சி., |
| நிர்வாக அதிகாரி. | | உதவிச் செயலாளர். |

---

ESTD: 2-3-52. **தபால் மூலம்** GOVT REGD: 3072.

## இலவசக் கல்வி போதனை

B குரூப் வகுப்புகள் ஆரம்பம் : **14-5-1975**

ஆண்—பெண் இருபாலரும் 1975-76-ம் வருட சர்க்கார்-பல்கலைக் கழக தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S. V. B. A., B. Com., B. Sc., March- 1976 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B. L., M. A., M. Com., A. M. I. B. M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி-கர்நாடக் B. A., B. Com., B. Sc., (S. S. L. C. (அ) S. S. C. ஆ. மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபால்-ஆந்திரா-கர்னுடக்-டெல்லி இண்டர் (S.S.L.C./S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A. C. B- I. (London) S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள், 6. Account Text Exmns. (I. M. C., S.S.L.C./S,S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்-டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை-மதுரை-திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை-மதுரை P. U. C. 10, தமிழ் வித்துவான்-புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மென். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸ்சி. 16. கிராம மணியம்-கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-75). 18. S.S.L.C. (8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com INTER. D. Com., B. Com., B. Com (Hons) M. Com., S. S. L. C. அல்லது P. U. C. தேறியவர்களும்-தவறியவர்களும் 75-நவம்பர் தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாசிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X. XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.)

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'

Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi

## ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

**ரிஷிவந்தியம்—S.O., Pin : 606205. தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு.**

**கிளைகள் :** சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

**'Kalvikkadir' Dr. R. P. Kandasami, H.P., B.Com (Hons). Principal,**

# கால்நடைத் துறையின் சீரிய பணிகள்!



டாக்டர் க. வெங்கடாசலம்,
இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,

காால்நடைகளின் தரத்தையும் அவற்றின் பயனையும் மேம்படுத்தும் நோக்குடனும், வெண்மைப் புரட்சியின் இலக்கினை எய்தும் நோக்குடனும் கால்நடை வளர்ப்புத் துறை, அந்நிய இனவகைக் கால்நடைகளைக் கொண்டு இனப் பெருக்கம் செய்வது போன்ற பல திட்டங்களைத் தயாரித்துள்ளது. கால்நடைத் தீவன உற்பத்தி, செம்மறியாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழியின வளர்ப்பு ஆகியவற்றிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கு நல்ல சுகாதார வசதி அளித்தல், நோய்த் தடுப்பு மருந்துகள் தயாரித்தல் ஆகியவை குறித்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### கால்நடைகளின் நலம்

தமிழ் நாட்டிலுள்ள கால்நடைகளின் நலம் காக்கப் பின்கண்ட கால்நடை மருத்துவ நிலையங்கள் செயல்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கால்நடை மருத்துவமனைகள் ... | 19 |
| 2. | மையக் கிராம நிலையங்களோடிணைந்த கால்நடை மருத்துவமனைகள் ... | 18 |
| 3. | கால்நடை மருந்தகங்கள் ... ... | 425 |
| 4. | மையக் கிராம நிலையங்களோடிணைந்த கால்நடை மருந்தகங்கள் ... ... | 120 |
| 5. | மருத்துவச் சிகிச்சை ஆய்வுக் கூடங்கள் ... | 13 |
| 6. | வெக்கை நோய்த் தடுப்புச் சாவடிகள் .. | 8 |
| 7. | ,, கண்காணிப்புப் பிரிவுகள் ... | 4 |
| 8. | கிளை நிலையங்கள் ... ... | 1,956 |

இந்த நிலையங்கள் அனைத்திலும் கால் நடைகளுக்குச் சிகிச்சையளிக்கப்படுகிறது. நோய்கள் வராமலும், இறப்பு நேராமலும் தடுக்க, நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவ நோய்த்தடுப்பு மருந்துகள் நிறுவனம், முக்கியமான அம்மைப் பால், நிணநீர்கள் இவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. அங்கு விலங்குகட்குக் காலிலும் வாயிலும் ஏற்படும் நோய்க்கான தடுப்பு மருந்தினைத் தயாரிக்கும் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## செயற்கை முறை இன விருத்தியால் ஏற்படும் நன்மைகள்!

1. ஒரு காளை ஒருமுறை பொலியும் பொழுது வெளிப்படுத்தும் விந்துவைக் கொண்டு பல பசுக்களைக் கருவுறச் செய்யலாம். இயற்கை முறையில், ஒரு காளை ஒரு முறை பொலிந்தால் ஒரு பசுதான் கருவடையக்கூடும்.

2. பதனப்படுத்தப்பட்ட விந்துவை பல இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும்.

3. அநேக காளைகளின் பராமரிப்புச் செலவை குறைக்கலாம்.

4. ஊனமுள்ள, ஆனால் நல்ல வம்சா வழியைக் கொண்டுள்ள காளைகளின் விந்துவையும், செயற்கை முறைக் கருவூட்டலுக்குப் பயன்படுத்தலாம்.

5. காளைகளின் மூலம் பசுக்களுக்கு பரவும், அநேக கர்ப்பப்பை நோய்களைத் தவிர்க்கலாம்.

6 தற்சமயம் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வரும் உறைந்த பதப்படுத்தப்பட்ட விந்தை (Deep Frozen semen) பல ஆண்டுகளுக்குக் கெடாமல் பாதுகாத்து செயற்கை முறை கருவூட்டல் மூலம், நல்ல இனக் கால்நடைகளைப் பெறமுடியும்.

எல்லா கேந்திர கிராம நிலையங்களிலும். செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களிலும், இச்செயற்கை முறையில் கருவூட்டல் நடத்தப்பட்டு, பல பசுக்கள் சினையுற்று, தரமுள்ள கன்றுகள் பிறந்திருக்கின்றன. செயற்கை முறை இனவிருத்தி கடந்த 25 ஆண்டுகளாக நம் நாட்டில் நடைபெற்று வருவதால், கால்நடை மேம்பாட்டில் நாம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்.

### நிதி ஒதுக்கீடும் செலவும்

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதற்கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்வரை கால்நடை வளர்ப்புத் துறை குறித்துச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கமும், செலவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| திட்டம் | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் | 56.28 | 51.05 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் | 216.18 | 200.15 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் | 352.25 | 341.20 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் | 270.45 | 197.44 |

### ஐந்தாவது திட்டத்தில் கால்நடை வளர்ச்சி


ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முழுமைக்கும், அத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கான திட்டங்களுக்கும் (1974—75, 1975—76) கீழ்க் கண்டவாறு நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் | ... | 1,000.04 |
| முதல் ஆண்டு (1974—75) | ... | 41.24 |
| இரண்டாம் ஆண்டு (1975—76) | ... | 90.00 |

கால்நடை வளர்ப்புத்துறைக்கு ஐந்தாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கால்நடை வளர்ப்பு ... ... | 510.71 |
| 2. | கோழியின வளர்ப்பு ... ... | 25.00 |
| 3. | செம்மறியாடு வளர்ப்பு ... | 84.75 |
| 4. | பன்றி வளர்ப்பு ... ... | 36.70 |
| 5. | கால்நடைச் சுகாதாரம் ... | 208.69 |
| 6. | கால்நடை நோய்த் தடுப்பு நுண்ணுயிர் உற்பத்தி ... ... | 54.03 |
| 7. | கால்நடைத் தீவனப் பயிர்—தீவன உற்பத்தி ... ... | 65.01 |
| 8. | நிர்வாக அமைப்பை வலுப்படுத்தல் ... | 5.45 |
| 9. | ஆடுமாடு வெட்டுமிடங்களை நவீனப் படுத்த உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியுதவி ... ... | 9.70 |
| | மொத்தம் ... | 1,000.04 |

மேற்கூறிய நிதியைக் கொண்டு கால்நடைகளின் தரம் உயர்த்தவும், நலம் காக்கவும் கால்நடைத் துறை சீரிய பணியாற்றி வருகிறது.



## ஆடுகள் வளர்ப்பதின் அனுகூலங்கள்!

1. சாதாரணமாக ஆடுகளை வளர்க்க பெரிய கட்டடங்களோ அல்லது உபகரணங்களோ தேவையில்லை.

2. ஆடுகள் உற்பத்திக்கு ஆரம்பச் செலவு-எண்ணிக்கைகளின் அடிப்படையில்-மற்ற கால் நடைகளுடன் ஒப்பிடுகையில் கணிசமாக குறைவாகவே உள்ளது. மேலும் அவைகள் குறுகிய காலத்தில் பெருகுகின்றன.



3. ஆடுகள் பராமரிப்புக்கு அதிகப்படியான ஆட்கள் தேவையில்லை

4. ஒரு ஆண்டில் கம்பளத்தில் மூலமும், இறைச்சிக்காக விற்கப்படும் ஆட்டுக் குட்டிகளின் மூலமும், ஆக இரு வகைகளிலும் வருமானம் கிடைக்கிறது. அதுவும் குறுகிய அதாவது 9 மாதங்களில் கிடைக்கின்றது.



5. மற்ற கால்நடைகளான பன்றி, கன்று இவைகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் ஆடுகள் குறைந்த தீனியில் அதிக உற்பத்தி கொடுக்கும் சக்தி உள்ளதாக இருக்கின்றன.

6. விவசாயத்திற்கு ஒத்து வராத கடினமானதும், மலைப் பாங்கானதுமான நிலங்களில் வளரும் புல் பூண்டுகளை உண்டு பலன் கொடுக்கின்றன. இவைகள் புல் பூண்டு விதைகளை நன்றாக மென்று விழுங்குவதால் வேண்டாத பயிர்களின் பெருக்கத்தை அழித்து உதவுகின்றன. இந்தப் பணியில் அவைகள் இரு வகைகளில் வருமானத்தை பெருக்குகின்றன.

1. வேண்டாத பயிர்களை செலவு இல்லாமல் அகற்றுகின்றன.

2. அவற்றை உண்டு செலவின்றி இறைச்சியையும், கம்பளத்தையும் உற்பத்தி செய்கின்றன.



# கால் நடை வளம் பெருக்க கன்றுகள் நலம் காக்க வேண்டும் !

இன்றைய கன்று, நாளைய பசுவாகும் அல்லது காளையாகும்! கன்று வளர்ப்பானது ஒரு சினை மாட்டைப் பராமரிப்பதிலிருந்தே தொடங்குகிறது. அதாவது ஒரு நல்ல திடமான கன்றைப்பெற, அதன் தாய் பசு கர்ப்ப காலத்திலிருந்தே நன்றாக பராமரிக்கப்படவேண்டும். அவ்வாறின்றி ஆரம்ப காலத்தில் கவனிப்பின்றி விட்டு விட்டு, பின்னர் கன்று பசுப் பருவத்தை அடைந்தபின் எவ்வளவுதான் செலவு செய்து ஊட்டச் சத்து வழங்கினாலும் அது முழுப் பயனைத் தர முடியாது. ஆகவே ஒரு கன்றின் தோற்றத்திலிருந்து அது பருவமடைந்து கன்று ஈனும் வரை கவனிக்க வேண்டிய வழி முறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

கன்று பிறந்தவுடன் அதன் மேல் ஒட்டியிருக்கும் பிசுபிசுப்பான் திரவத்தையும், நாசித் துவாரங்களை அடைத்துக் கொண்டிருக்கும் பொருட்களையும்ஒருதூய்மையானதுணியால் துடைக்கவேண்டும். தொப்புள் கொடியை சுமார் 3 சென்டி மீட்டர் விட்டு முடிச்சிட்டு, முடிச்சிற்குக் கீழ் சுத்தமான கத்திரியினால் கத்தரித்து விடவேண்டும். உடனே ‘டிஞ்சர் அயடின்’ மருந்தை இரண்டு, மூன்று நாட்கள் தடவினால், தொப்புள் வீக்கமும், தொப்புள் கட்டியும், ஏனைய வியாதிகளும் ஏற்படாமல் தடுக்கலாம்.

கன்று பிறந்தவுடன் மூச்சுவிட திணறினால் விலாப் புறத்தை அழுதி விடவும். அல்லது குளிர்ந்த தண்ணீரைக் கன்றின் மேல் ஊற்றலாம். பின்பு நாசித் துவாரங்களின் வழியாக நமது வாயினால் ஊதலாம்.

இவ்விதம் செய்வதால் கன்று நன்றாக மூச்சுவிடும். பிறந்தவுடன் கன்றை தாய்ப்பசுவால் நக்க விடவேண்டும். தாய் பசுவிற்கு கன்றை நக்கும் உணர்ச்சி இல்லாவிட்டால், சிறிதளவு உப்புத் தண்ணீரை கன்றின் மேல் தெளித்தால், பின்பு தாய்ப் பசு நக்கிவிடும்.

நல்ல திடமுள்ள கன்று, பிறந்த 30 நிமிட நேரத்திற்குள் எழுந்து நிற்கும். அப்படி எழுந்து நிற்க கஷ்டப்பட்டால் நாம் உதவி செய்யலாம். குளம்பின் நுனியிலுள்ள ஜவ்வு பாகத்தை அகற்றிவிட்டால், கன்று சிரமமில்லாமல் நிற்கும்.

## கன்று வளர்ப்பு

பிறந்த கன்றுகளைக் கீழ்க் கண்ட முறைகளில் வளர்க்கலாம்.

1. பிறந்த கன்றுகளைத் தாய் பசுக்களிடமிருந்து பிரித்து, பாலைப் புட்டிகளின் மூலம் ஊட்டி வளர்ப்பது. முதல் சீம் பாலை கன்று கட்டாயமாகக் குடிக்கவேண்டும்.

2. தாய்ப் பசுவோடு கன்றை விட்டு வளர்ப்பது. இம்முறையில் கன்றுகள் தன்னிச்சைப்படி பாலைக் குடித்து வளரும்.

3. கன்றுகளை முதலில் தாய் பசுவிடம் பாலைக் குடிக்கவிட்டு, பிறகுபாலைக்கறந்துவளர்ப்பது. இம்மூன்று முறைகளில் கன்று பிறந்தவுடன் பசுவிடமிருந்து பிரித்து வளர்ப்பதுதான் சாலச் சிறந்தது. ஏனெனில்,

1. பசுவின் பால் உற்பத்தியைக் கணக்கிட முடியும்.

2. பிறந்தவுடன் கன்று இறந்துவிட்டால், பசுவின்பால் உற்பத்தி திறன் குறையாது.

3. தூய்மையான பாலைப் பெறலாம்.

4. துரிதமாகப் பாலைக் கறக்கலாம்.

5. கன்றுகளுக்குத் தேவையான அளவு பால் கிடைக்கும்.

இம்முறையிலும் கீழ்க்கண்ட குறைபாடுகள் உள்ளன.

1. கன்றுகளுக்கு தனியாகப் பால் ஊட்டவேண்டியிருக்கும்.

2. அதிக நேரமாகும்.

3. தனியாக ஒரு வேலையாள் நியமிக்க வேண்டியும் வரலாம்.

4. பால் புட்டிகள், இதர பால் பாத்திரங்களின் மூலம் கன்றுகளுக்கு நோய் பரவலாம்.

மற்ற இருமுறைகளில் பசுவின் பால் உற்பத்தி திறன் கணக்கிடுதல் சிரமம். பால் தூய்மையாக இராது. சில கன்றுகள் பாலை அதிகமாகக் குடித்து விடலாம். அதனால் வயிற்றுக் கோளாறுகள் ஏற்படலாம். கன்றுகள் இறந்து விடின், பால் சுரப்பு பாதிக்கப்படும். தாய்ப் பசு இறந்து விட்டால் கன்றை வளர்ப்பது சிரமம்.

## முதல் உணவு

பிறந்த கன்றுகளுக்கு முதல் உணவு சீம்பால்தான்! கன்றைத் தாய்ப் பசுவிடமிருந்து பிரித்து வளர்த்தாலும், முதல் உணவு சீம்பால்தான்கொடுக்க வேண்டும். சீம்பாலில் கன்று வளர்ச்சிக்கு வேண்டிய புரதச் சத்தும், உயிர்ச்சத்து ‘‘ஏ’’ யும், நோயை எதிர்க்கும் சக்தி அணுக்களும் உள்ளன. சீம்பாலைக் கன்றுகள் குடிப்பதால் நோயை எதிர்க்கும் சக்தி ஏற்படுகிறது. சீம்பால் நல்ல மலமிளக்கியுமாகும். பிறந்த கன்றுகளின் குடல் வழியாக சீம்பாலிலுள்ள உயிர்ச்சத்து ‘ஏ’ கன்றின் உடலில் சேர 12 மணி நேரம் வரைதான் சாத்தியப்படும். சீம்பால் மலமிளக்கியாக இருப்பதாலும், கன்றின் குடலிலிருக்கும் நஞ்சுப்பொருட்கள் வெளித்தள்ளப்படுகின்றன.

பிறந்த கன்றைத் தாயினிடமிருந்துப் பிரித்து வளர்க்க, பிறந்தவுடன் கன்றைப் பிரித்து விடவும். அடுத்த ஈற்றுகளிலும் இம்முறை பின்பற்றப்பட வேண்டும். உடனே சீம்பால்

கொடுக்கப்பட வேண்டும். குறிப்பாக இந்திய நாட்டுப் பசுக்களுக்கு தாய்மை உணர்ச்சி அதிகம். உடனே கன்றைப் பிரிக்காவிடில், பின்பு கன்றுகளைப் பிரித்து வளர்ப்பது சிரமம்: பசுவின்பால் சுரப்பும் குறையும்.

அடுத்தபடியாக, கன்று எந்த முறையில் வளர்க்கப்பட்டாலும் பாலைத் தேவையான அளவில், குறிப்பிட்ட நேரங்களில் கொடுப்பது உசிதம். ஏனெனில், ஆவினங்களின் வயிற்றில் நான்கு அறைகள் உண்டு. பிறந்த கன்றுகளுக்கும் பெரிய மாட்டிற்கும் வயிற்றைப் பொருத்தமட்டில் வித்தியாசம் உண்டு. பிறந்த கன்றுகளில் 'அபோமேசம்' என்கிற 4-வது வயிறு பெரியது. பெரிய பசுக்களில் உள்ள முதல் வயிறு (ரூமன்) மிகப்பெரியது. இதனால் பிறந்த கன்றுகள் தங்கள் வயிற்றில் உணவுப்பொருள்களை நிரப்பிக் கொள்ள முடியாது. இதனால் பிறந்த கன்றுகள் பாலைக் குடிக்கும்போது, பால் நேராக 'அபோமேசம்' என்னும் அறைக்குச் செல்கிறது. கன்றுகள் அதிகமாகப் பாலை குடிக்கும்பொழுதுபால்,'ரூமன்' என்னும் அறைக்குச் செல்கிறது. இதனால் பால் திரிந்து விடுகிறது. இளங்கன்றுகளில் இவ்வயிறு அதிக விருத்தியடையாமலிருப்பதால், நன்குச் செல்பட முடியாது. ஆகையால் இவ்வறைக்குச் சென்ற பாலானது அங்கேயே தங்கி புளித்து வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்கும். ஆகையால் தான் இளங்கன்றுகளுக்கு குறித்த வேளைகளில் சிறிது சிறிதாகப் பாலை கொடுப்பது நல்லது. தாயுடன் ஓடித் திரிந்து வரும் கன்றுகளுக்கு இத் தொல்லை வருவதில்லை.

### பால் குடிக்கப் பழக்குதல்

கன்றுகளைத்தனியாகப் பிரித்து வளர்க்கும்போது அவைகளைப் பின்கண்டவாறு பழக்க வேண்டும். முதலில் நமது கைகளில் பாலை நனைத்து, விரல்களை கன்றை நக்கவிட வேண்டும். பிறகு பாலைப் பாத்திரத்தில் ஊற்றிவிரலைப்பாலில்அமிழ்த்தி பாலை விரல்களின் வழியாகக் கன்றுகளுக்கு உறிஞ்ச பழக்க வேண்டும். நன்கு பழக்கப்பட்ட கன்றுகள் சில நிமிடங்களில் நன்றாக உறிஞ்சி குடிக்கக் கற்றுக் கொண்டுவிடும். இம் முறையில் பாலின் வெப்பநிலை 40 டிகிரி சென்டிகிரேடுக்கு இருக்க வேண்டும். குளிர்ந்த பால், கழிச்சல் ஏற்படுத்தும்.

### பாலின் அளவு

ஒரு கன்றின் எடையில் 10 சதவிகிதம் அளவுக்குப் பால் கொடுக்க வேண்டும். வயிற்றுக் கோளாறோஅல்லதுகழிச்சலோ ஏற்பட்டால், பாலின் அளவைக் குறைத்து விட வேண்டும். 'ஆரோபாக்', 'டெராமைசின்' முதலிய மருந்துகளைப் பாலுடன் கொடுத்தால் கழிச்சல் போன்றவியாதிகள் ஏற்படாது.

கன்றுகளை மற்ற முறைகளில் அதாவது, பசுவுடன் விட்டு வளர்க்கும் பொழுது கன்றுகளுக்கு விடப்படும் பாலின் அளவை நிர்ணயிக்க வாரத்தில் ஒரு நாள் பாலை கன்றுக்கு விடாமல் முழுவதும் கறந்துவிட வேண்டும். இதன் மூலம் பாலின் உற்பத்தியின் அளவு தெரியும். இந்த அளவிலிருந்து இதற்கு முதல்நாள் கறந்த பாலின் அளவைக் கழித்தால், கன்று குடித்த பாலின் அளவு தெரியவரும். இதிலிருந்து கன்றுகளுக்கு வேண்டிய பால் கிடைத்து வருகிறதா, இல்லையா என நிர்ணயிக்கலாம்.

கன்று, பால் குடித்தவுடன், அதன் நாக்கில் சிறிதளவு உப்பைத்தடவவேண்டும். இளங்கன்றுகளுக்கு வாய்ப்பூட்டு போடுவதும் நல்லது. இதனால் கன்றுகள் ஒன்றை ஒன்று நக்கும் பழக்கமும், அதனால் நாக்கில் திரளும் ரோமம் உருண்டை வடிவமாக குடலுக்குள் தங்கி கோளாறுகளை விளைவிப்பதும் தவிர்க்கப்படும். கன்றுகள் மண்ணை தின்பதையும் வாய்ப்பூட்டு தவிர்க்கும். கன்றுகள் வளர வளர பாலின் அளவை குறைக்க வேண்டும். கலப்பு உணவு கொடுக்க வேண்டும். ஆறுமாத வயது ஆனவுடன் பால் ஊட்டுவதை அறவே நிறுத்தி விடலாம்.

### கன்றுகளுக்குக் கலப்புணவு

கன்றுகளுக்கு வேண்டிய கலப்பு உணவில் கன்றுகளுக்கு வேண்டிய புரதம், மாவுப் பொருட்கள், தாதுப்பொருட்கள், உயிர் சத்துக்கள் அடங்கியிருக்க வேண்டும்.

கன்றுகளின் கலப்பு உணவைக் கீழ்க்கண்டபடி தயாரிக்கலாம்.

| | பாகம் |
|---|---|
| கடலைப் பிண்ணாக்கு | 38 |
| கேழ்வரகு மாவு | 30 |
| கோதுமைத் தவிடு | 20 |
| ஆளி விதை | 10 |
| தாது உப்பு | 1 |
| உப்பு | 1 |
| மொத்தம் | 100 |

கன்று பிறந்த 15 நாட்களிலிருந்து சிறிது பசும்புல் கொடுக்கலாம். அருகம்புல் சிறந்தது. வயது செல்ல செல்ல பசும்புற்களின் அளவை அதிகரிக்கலாம். 2-வது மாதத்திலிருந்து வைக்கோல் கொடுக்கலாம்.

தொழுவத்தில் உப்புக் கட்டிகளை(Salt bricks)கட்டித் தொங்கவிட வேண்டும். இதனால் கன்றுகளுக்கு வேண்டிய தாது உப்புக்கள் கிடைக்கிறது.

### கன்றுகளுக்குத் தொழுவம்

கன்றுகளுக்குத் தொழுவம் வசதியாகவும், வெளிச்சமாகவும், காற்றோட்டமுள்ளதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கன்றுக்கும் 10 சதுர அடி தேவை. கன்றுகளின் தொழுவத்தோடு அவைகள் ஓடித்திரிய ஒவ்வொரு கன்றுக்கும் 30 சதுர அடி இடம் தேவை. கன்றுகளுக்கு உபயோகப்படுத்தும் பாத்திரங்கள், தண்ணீர், மற்றும் தீவன தொட்டிகள் முதலியன சுத்தமாக இருத்தல் வேண்டும். தொழுவத்தின் தரை எளிதில் சுத்தம் செய்வதற்கேற்ப சிமெண்டினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். கன்றுகளின் மலம் மற்றும் கழிவுத் தீவனப் பொருள்களை அடிக்கடி அப்புறப்படுத்த வேண்டும். சுவர்கள், தொழுவத்தின் தரை ஆகியவைகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை சுண்ணாம்பு அடிக்க வேண்டும்.

### நோய்த் தடுப்பு

கன்றுகளை நோய் மற்றும் குடற் புழுக்களில் இருந்து காப்பாற்ற உங்கள் அருகாமையில் உள்ள கால்நடை உதவி மருத்துவரின் உதவியை நாடுவதே சிறந்தது.

இன்றைய கன்றுகளே நாளைய செல்வங்களாதலின் மேற்கூறியவாறு கன்றுகளைப் பராமரிப்பதே சிறந்தது.



# அதிக லாபம் பெற ஆழ்கூளக் கோழிவீடு அமைத்திடுவீர்!

**கோ**ழிப்பண்ணை அமைப்பது இலாபகரமான ஒரு துணைத் தொழில்! ஆனால் பலர்-ஆர்வத்தின் காரணமாகக் கோழிப் பண்ணை அமைப்பது பற்றிய விவரங்களை நன்கு அறிந்து கொள்ளாமல்-பெரும் செலவு செய்து கட்டடம் கட்டி, கருவிகளையும் வாங்கி வைத்து, வீரிய இனக் கோழிகளையும் வாங்கி வளர்க்கின்றனர் கொஞ்ச நாள் கழித்து எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது போகவே கோழிப்பண்ணை இலாபகரமானது அல்லது என்று கூறி கூக்குரலிட ஆரம்பித்து விடுகின்றனர். இதனால் கோழிப் பண்ணை அமைக்க முன் வருகிறவர்களும் 'நட்டம் ஏற்பட்டுவிடுமோ' என்று அஞ்சி கோழிப் பண்ணை அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு விடுகின்றனர். இது தவறு! எனவே, கோழிப் பண்ணை அமைக்க விரும்புகின்றவர்கள் முதலில் கோழிவீடு அமைப்பது எப்படி என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

'கிராமப்புறங்களிலே பரம்பரை பரம்பரையாகக் கோழி வளர்த்து வந்துள்ளார்களே அவர்களெல்லாம், கோழிவீடு அமைத்துத்தான் கோழி வளர்த்தார்களா? திறந்த வெளியில் அலையவேண்டியக் கோழிகளுக்கு, வீடு வேண்டிக் கிடக்குதா?'' என்று கேட்டுப் பிற்போக்கு வாதம் பேசுகின்றவர்களும் நாட்டில் இருப்பதால், முதலில் கோழிகளுக்கு ஏன் வீடு அமைக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பெட்டைக் கோழிகள் திறந்த வெளியில் அலைந்து திரிந்து, குப்பையைக்கிளறி, இரை தேடினால், அவைகளின் சக்தி வீணாகி, முட்டையிடும் திறன் குன்றிவிடுகிறது என்பது வளர்ந்துவரும் அறிவியலின் மூலம் தெரியவருகிறது.** கிராமபுறங்களில் அலைந்து திரிந்து குப்பையைக் கிளறி இரைதேடி வாழும் கோழிகள் ஒரு ஆண்டில் 50 அல்லது 60 என்று குறைந்த எண்ணிக்கை முட்டைகள் இடுவதிலிருந்தும், கோழிவீடு அமைத்து தீனியும் கொடுத்து வளர்த்தால் அதே நாட்டுக் கோழிகளிலிருந்து ஒரு ஆண்டில் அதிக எண்ணிக்கை முட்டைகள் கிடைப்பதிலிருந்தும் மேற்கூறிய உண்மை தெளிவாகும். **கோழிகள் எக்காரணம் கொண்டும் தீனிக்காகவோ அல்லது தண்ணீருக்காகவோ, 10 அடி தூரத்திற்கு மேல் நடக்கக்கூடாது. அவ்வாறு நடக்க நேர்ந்தால், முட்டை உற்பத்தி குறையும்.** எனவே பெட்டைக் கோழிகளின் முட்டை உற்பத்தித்திறன் வீணாவதைத் தடுக்க, முதலில் கோழி வீடு அமைத்து மிகவும் நல்ல தீனியும் கொடுப்பது மிகவும் இன்றியமையாததாகும். இவ்வாறு செய்தால் ஒவ்வொரு கோழியின் மூலமும் அதிக முட்டைகளைப் பெறலாம்!

### ஆழ்கூளக் கோழிவீட்டின் பயன்

கோழி வீடு அமைக்க பல்வேறு முறைகள் இருந்தாலும் அவைகளில் ஆழ்கூளவீடு (Deep litter house) முறையே சிறந்தது. ஏனெனில் கிராமியச் சூழ்நிலையில் அங்கே கிடைத்திடும் பொருள்களைப் பயன்படுத்தி-அதிகச் செலவில்லாமல்-ஆழ்கூளக் கோழி வீடு அமைக்க முடிவதுடன், அதிக முட்டைகளையும், விலையுயர்ந்த எருவையும் பெற முடிகிறது. இதனால் இலாபம் இரட்டிப்பாகிறது!

**ஆழ்கூளக் கோழிவீடு அமைப்பின் மூலம், ஒரு ஆண்டில் மூன்று கோழிகளிலிருந்து கிடைக்கும் எரு, ஒரு பசுவிலிருந்து கிடைக்கும் எருவிற்கு சமமாகும்!**

ஆழ்கூளக் கோழிவீடு அமைத்து 40 கோழிகளை வளர்ப்பதன் மூலம், ஒரு ஆண்டில் கிடைக்கும் எரு 1 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு அல்லது 0.5 எக்கர் காய்கறி பயிரிடும் நிலத்திற்குப் போதுமானதாகும்.

ஆகவே, கோழிகள் மூலம் அதிக முட்டைகள் பெறவும் எருப் பற்றாக்குறையைப் போக்கி மகசூலைப் பெருக்கவும், ஆழ்கூளக் கோழி வீடு அமைப்பதே சிறந்தது.

### ஆழ்கூளக் கோழிவீடு அமைக்கும் முறை

ஆழ்கூளக் கோழிவீடு அமைக்க மேட்டுப் பாங்கான இடத்தையே தேர்ந்தெடுக்க வேண்டும். உயரமான இடத்தில் கோழிவீடு அமைத்தால், மழைக்காலத்தில் சுற்றுப்புறத்தில் தேங்கும் தண்ணீரினால், கோழி வீட்டிற்குள் கசிவு ஏற்படாது.

கோழிகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முடியுமெனில், ஒரு கோழிக்கு 2.5 சதுர அடி இடவசதி போதுமானது. 100 சதுர அடி பரப்புள்ள ஆழ்கூள வீட்டில், 40 கோழிகள் வளர்க்கலாம்.

கோழிப்பண்ணை அமைப்பவர்கள் அவரவர்களுடைய வசதிக்கு ஏற்ப செங்கல் சுவர் எழுப்பியோ அல்லது மண்சுவர் வைத்தோ ஆழ்கூளக் கோழி வீடு அமைத்துக் கொள்ளலாம்.

### குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு

குறைந்த வருவாய் உடைய கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட வேண்டும் என்ற இலட்சியத்துடன், கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டே பின்கண்டவாறு ஆழ்கூளக் கோழி வீடு அமைத்திடலாம்.

கிராமப்புறங்களில் உள்ளவர்கள் 40 கோழி வளர்க்க விரும்பினால் மேடான இடத்தில் 10 அடி × 10 அடி அளவிற்குக் கடைக்கால் (அஸ்திவாரம்) இட்டு, பூமிக்கு மேல் 2 அடி உயரத்திற்கு மண்சுவர் எழுப்பி 4 சவுக்குக் கால்களை நட்டு, தென்னங்கீற்றினால் அல்லது விழற்புல்லினால் கூரை

மேய்ந்து சுற்றிலும் கம்பி வலை அடைத்து ஆழ்கூளக் கோழிவீடு அமைக்கலாம். ஆழ்கூளக் கோழி வீட்டின் தரையை நன்கு கெட்டித்து மெழுகி, 6 அங்குல உயரத்திற்கு உமி அல்லது துண்டு செய்த வைக்கோல் தூளைப் பரப்பிட வேண்டும். உமி மழையில் நனையாதிருக்க கூரையைத் தாழ்வாகவும் சுவரைவிட 2.5 அடி நீளமாகவும் அமைக்க வேண்டும்.

கோழிகளுக்குத் தீனி வைப்பதற்காக 6 அடி நீளமுள்ள மூங்கிலைக் குடைந்து, தீனித் தொட்டியாகப் பயன்படுத்தலாம். 20 கோழிகளுக்கு ஒரு தீனித்தொட்டி வீதம் அமைக்க வேண்டும்.

கோழிகளுக்குத் தண்ணீர் வைப்பதற்கு, 10 கோழிகளுக்கு 2 லிட்டர் தண்ணீர் கொள்ளக்கூடிய ஒரு மண் சட்டி அல்லது பிளாஸ்டிக் பாத்திரம் வீதம் வைக்கவேண்டும்.

கோழிகள் முட்டையிடுவதற்கு 10 கோழிகளுக்கு ஒரு பானை வீதம் மண்பானைகளைச் சுவற்றின் ஓரத்தில் அமைக்க வேண்டும்.

கிளிஞ்சல் பொடியை எப்பொழுதும் ஒரு பாத்திரத்தில் வைத்திருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு 40 கோழிகளுக்கு ஆழ்கூளக்கோழி வீடு அமைக்க கீழ்க்கண்டவாறு பொருள்கள் தேவைப்படும்.

1. சவுக்குக் கால்—4
2. மூங்கில் கட்டு—4
3. தென்னங்கீற்று—200
4. கயிறு (பாளை) கட்டு—4
5. 6அடி மூங்கில் குடைந்த தீனித் தொட்டி—2
6. மண்தண்ணீர்த்தொட்டி—4
7. கம்பிவலை-3 அடி× 40 அடி
8. முட்டையிடப் பானைகள்—4

மேற்கூறியவைகளை வாங்குவதற்கும், கூலிக்கும் ஆக மொத்தம் ரூபாய் 125 முதல் ரூபாய் 150 வரை செலவிட வேண்டியிருக்கும். உழவர்கள் தங்களிடம் உள்ள பொருள்களைக் கொண்டே ஆழ்கூள வீடு அமைக்கும் பொழுது, மேற்கூறிய செலவு கணிசமாகக் குறையும்.

**வசதியுள்ளவர்களுக்கு**

பொருளாதார வசதியுள்ளவர்கள் ஆழ்கூளக் கோழிவீடு அமைக்கப் பின்கண்ட முறையைப் பின்பற்றலாம்.

**கட்டடம்**

ஆழ்கூளக் கோழி வீடு அமைக்க தரைமட்டத்திற்குக் கீழே 2 அடி ஆழம் வரை தோண்டி, 'கான்கிரிட்' கடைக்கால் அமைக்க வேண்டும். அதன்மேல் தரைமட்டம் வரை 1.25 அடி அகலமுள்ள செங்கல் சுவர் எழுப்பவும். தரை மட்டத்திற்கு மேல் செங்கல் சுவர் அரைக்கல் அகலம் இருந்தால் போதுமானது. தரைமட்டத்திற்கு மேல் 1.5 அடி முதல் 2 அடி உயரத்திற்கு செங்கல்சுவர் அமைக்கவேண்டும். செங்கல் சுவர் உயரம், ஆழ்கூளத்தின் மேல் நிற்கும் கோழியின் தலைமட்ட உயரத்தைவிட, சற்றுக் குறைவாகவே இருக்க வேண்டும். இதனால் கோழிகளுக்கு நல்லக் காற்றோட்ட வசதி ஏற்படும்.

செங்கல், சுண்ணும்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி சுவற்றை அமைத்து, மேலே சுண்ணும்புக் கலவையால் பூச வேண்டும். சுவற்றின் மேல் மேடு பள்ளங்களோ, கீறல்களோ இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால், கோழிப் பேன், உண்ணி முதலியவைகள் பரவக்கூடும்.

கோழி வீட்டின் தரையை 'கான்கிரீட்' போட்டு நன்கு கெட்டித்து சிமெண்டினல் பூச வேண்டும். கோழி வீட்டின் தரை சுற்றுப்புறத் தரையின் உயரத்தைவிட 6 அங்குலம் உயரமாக இருக்க வேண்டும். அதன்மேல் 2 முதல் 3 அங்குல உயரத்திற்குச் சுத்தமான மண் பரப்பி அழுத்தமாகத் தளம் போட வேண்டும். அதன்மேல் தான் ஆழ்கூளம் பரப்ப வேண்டும். மண் தரையின்மேல் 6 அங்குல உயரத்திற்கு உமி, மரத்தூள், வைக்கோல் துண்டு போன்ற ஏதாவது ஒன்றைப் பரப்பிட வேண்டும்.

**கதவு**

ஆழ்கூள வீட்டின் அகலவாட்டத்தில் தரைக்குமேல் 1 அடி உயரத்தில் 4 அல்லது 5 அடி உயரமும், 2 அடி அகலமும் உள்ள கம்பிக்கதவு அமைக்கவும்.

**கம்பிவலைத் தட்டி**

ஆழ்கூள வீட்டைச் சுற்றிலும் சுவரின்மேல் 3 அடி உயரத்திற்கு 0.5 அங்குல வலைக் கம்பி தட்டிகளைப் பொறுத்த வேண்டும். கூரைக்கும் இத் தட்டிகளுக்கும் இடையில் இடைவெளி இருக்கக்கூடாது.

**கூரை**

ஆழ்கூளக் கோழி வீட்டின் கூரைக்கு தென்னங்கீற்று, பனை ஓலை விழற்புல், துத்தநாகத் தகடு, ஆஸ்பெஸ்டாஸ் தகடு, இலேசான கூரை அட்டை (Light roofing material) ஆகியவற்றை உபயோகிக்கலாம். உலோகத் தகடுகளைக் கொண்டு கூரை அமைத்தால், அவற்றின்மேல் வைக்கோல் அல்லது விழற்புல் ஆகியவைகளை வேய்ந்து கோடைக்காலத்தில் வெப்பத்தைக் குறைத்திட வேண்டும். அல்லது உலோகத் தகடுகளின் உட்புறத்தில் வெள்ளை வர்ணம் பூசி வெப்பத்தைக் குறைத்திட வேண்டும்.

தென்னங்கீற்று, பனை ஓலை ஆகியவைகளைக்கொண்டு கூரை அமைத்தால் கோழி வீட்டில் வெப்பம் குறைவாக இருக்கும். ஆனல் இத்தகைய கூரைகளில் எலிகள் தாங்கி சேதம் ஏற்படுத்தக்கூடும். இதைத் தவிர்க்க, கூரையின் அடியிலும் கம்பிவலைஅமைப்பது சிறந்தது.

மழைத்தூரல் சிதறி கோழி வீடும், ஆழ்கூளமும், கோழிகளும் நனையாதிருக்க சுவற்றைவிட கூரை 2.5 அடி நீளம் நீண்டிருக்கும்படி அமைக்க வேண்டும்.

**தீனி, தண்ணீர் பாத்திரங்கள்**

ஆழ்கூளக் கோழி வீட்டில் 20 கோழிகளுக்கு ஒன்றுவீதம் தானியங்குத் தீனித் தொட்டிகளையும், 10 கோழிகளுக்கு ஒன்று வீதம் தானியங்குத் தண்ணீர்த் தொட்டிகளையும் அமைக்க வேண்டும். உலோகத்தினல் செய்யப்பட்ட தண்ணீர் தொட்டிகளாக இருந்தால், அவைத் துருப்பிடிக்கும். அதைத் தவிர்க்கத் துத்தநாகத் தகட்டினல் தண்ணீர்த் தொட்டிகளைச் செய்வதே சிறந்தது.

உங்களுடைய கோழிக் குஞ்சுகளின் வயது 5 வாரத்திற்குட்பட்டதெனில், தீவனத் தொட்டிகளின் அடிதட்டு ஆழ்கூளத்திற்குள் பாதிவரைப் பாதியும் படியும், 6 முதல் 10 வார வயதுடைய கோழிகள் எனில், தீவனத் தொட்டியின் அடித்தட்டு ஆழ்கூளத்திலிருந்து 1 அங்குல உயரத்தில் தொங்கும் படியும், 10 வார வயதுக்கு

மேற்பட்ட கோழிகள் எனில், தீவனத் தொட்டிகளின்அடித் தட்டு ஆழ்கூளத்திலிருந்து 5 அங்குல உயரத்தில் தொங்கும் படியும் அமைக்க வேண்டும்.

### முட்டையிட மாடம்

கோழிகள் முட்டையிடுவ தற்கு வசதியாக ஆழ்கூளக் கோழி வீட்டின் நீண்ட சுவர் களின் ஓரத்தில் 10 அங்குல நீளம், 10 அங்குல அகலம், 10 அங்குல உயரம் உள்ள மாடங் களை-5 கோழிகளுக்கு ஒரு மாடம் வீதம்-அமைக்க வேண் டும். இம்மாடங்களை தரை மட்டத்திலிருந்து 1.25 அடி உயரத்தில்அமைப்பது நல்லது.

### கிருமி நாசினித் தொட்டி

ஆழ்கூளக் கோழி வீட்டின் வெளிப்புறத்தில் கதவுக்கு முன்னால் 2 அங்குல ஆழமுள்ள 2 நீண்ட சதுரத் தொட்டிகளை அமைக்க வேண்டும். முதல் தொட்டியில் கிருமி நாசினி கலந்த நீரை ஊற்றி வைக்க வேண்டும். இரண்டாவது தொட்டியில் கால் துடைப்ப தற்காக, சுண்ணாம்பு அல்லது கயிற்று விரிப்பு இருக்க வேண் டும். கோழிவீட்டின் உள்ளே செல்பவர்கள் முதலில் கிருமி நாசினி கலந்த கலவை நீரில் காலை நனைத்துக் கொண்டு சென்று, பிறகு சுண்ணாம்பு அல் லது கயிற்று விரிப்பில் ஈரத்தை நன்கு துடைத்துக் கொண்ட பிறகே உள்ளே செல்ல வேண் டும்.

### சுற்றுப்புறம்

கோழி வீடுகளின் சுற்றுபுறத் தில் உள்ள வெப்பம், கோழி வீட்டிற்குள் புகுந்து கோழிகளை தாக்காதிருக்க கோழி வீடுகளை சுற்றிலும் புல்பாத்தி அமைப் பது சிறந்தது. புல்பாத்தியின் வெளிவரிசையில் அகத்தி, மல் பெரி, கல்யாண முருங்கை போன்ற மரங்களை வளர்க்க வேண்டும். இம்மரங்களின் பயனாய் கோழி வீட்டைக் குளிர்ந்த நிலையில் வைத்தி ருக்க முடிவதுடன், அம்மரங் களின் இலைகளைக் கோழிகளுக் குத் தீவனமாகவும் அளித்திட இயலும்.

### ஆழ்கூளப் பராமரிப்பு

ஆழ்கூளக் கோழி வீடு அமைக்க விரும்புகின்றவர்கள் ஆழ்கூளம் பராமரிப்பு பற்றிய நுட்பத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். சிலவகை நுண்கிருமிகள் கூளத்தையும் கோழி மலத்தையும் தூளாக்கி ஈரத்தை உறிஞ்சக்கூடிய ஆழ் கூளத்தை உற்பத்தி செய்கின்றன. அந்த ஆழ்கூளத்தில் மீன்தூள், இறைச்சி ஆகியவற்றில் இருப்பது போன்ற வைட்டமின் 'பி. 12', 'பி. 2' மற்றும் தாதுப் பொருள் கள் உற்பத்தி ஆகி, கோழிகளுக்குச் சத்துள்ள உணவை அளிக்கின்றன.

ஆகவே ஆழ்கூளத்தை பின் கண்ட முறையில் பராமரிக்க வேண்டும்.

1. ஆழ்கூளம் அமைப்ப தற்கு மார்ச்சு, ஏப்ரல் மாதங் கள் சிறந்தவை. மழைக்காலத் தில் ஆழ்கூளம் ஆரம்பிக்கக் கூடாது. மழைக்காலம் முடிந்த பிறகே ஆரம்பிக்க வேண்டும்.

2. உமி, மரத்தூள் வைக் கோல் துண்டு, கரும்புச் சக்கை கடலைத் தோல் முதலிய எந்தப் பொருள் எளிதாகவும்குறைந்த விலையிலும் கிடைக்கிறதோ, அவைகளை ஆழ்கூளங் களாகப் பயன்படுத்த முற்பட வேண்டும்.

3. கூளம் மிகவும் தூளாக இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் கோழிகளின் கண் களுக்கும் மூச்சுக் குழல்களுக் கும் தீங்கு நேரிடும்.

4. கூளம் கூர்மையானதாக இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் கோழிகள் அவை களை உட்கொள்ளும்பொழுது தீங்கு நேரிடலாம்.

5. ஈரத்தை நன்கு உறிஞ்சக் கூடியதாகவும், விரைவில் காயக்கூடியதாகவும் கூளம் இருக்க வேண்டும்.

6. புதிதாகக் கோழிக் குஞ்சு களை வாங்கி வளர்க்கத்தொடங் கும் ஒவ்வொரு முறையும், புதிய கூளத்தின் மீதே தொடங்க வேண்டும்.

7. ஆரம்பத்தில் சிமெண்டு தரையின் மேல் 2 முதல் 3 அங்குல உயரத்திற்குத் தூய மண் பரப்பி கெட்டித்துத் தள மிட வேண்டும். இது அதிக ஈரத்தை உறிஞ்ச உதவும்.

8. புதிதாக ஆழ்கூளம் துவங்கும்போது முதலில் மண் தரைமீது 4 அங்குல உயரத் திற்கே கூளத்தைப் பரப்ப வேண்டும்.

9. நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூளத்தைப் போட்டு, 6 அங்குலம் முதல் 8 அங்குலம் உயரத்திற்கு ஆழ் கூளத்தை உயர்த்த வேண்டும்.

10. மழைக்காலத்தில்கூளம் சேர்ப்பதைத் தவிர்க்க வேண் டும்.

11. அடிக்கடி கூளத்தைக் கிளறிவிட வேண்டும். அதனால் கூளத்துடன் கோழி மலம் சமமாகக் கலந்து நல்ல ஆழ் கூளம் ஏற்படும். மேலும் அடி யிலுள்ள ஈரமான கூளம் மேலே வந்து, உலர்வதற்கும் ஏதுவாகிறது.

12. கூளத்தில் ஈரம் ஏற்பட் டால் 10 சதுர அடிக்கு 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் வீதம் கலந்து நன்றாகக் கிளறி விடவேண்டும். சூப்பர் பாஸ் பேட்டிற்குப் பதிலாக நீர்த்த சுண்ணாம்புத்தூளும் சேர்க்க லாம். இதனால் அமோனியா வாயு உற்பத்தியாகும், ஆனால் அதிக அளவு சுண்ணாம்பு நீர் சேர்க்கக்கூடாது.

13. ஒவ்வொரு கோழிக்கும் 2.5 சதுர அடி பரப்பளவு ஆழ் கூளம் இருப்பது அவசியம். ஆழ்கூளத்தின் மேல் இந்த அளவுக்கு மேல் மிகவும் நெருக் கமாகக் கோழிகளை நிறுத்தக் கூடாது. அவ்வாறு நெருக்க மாக நிறுத்தினால் கோழிக் கிருமிகள் பரவவும், கோழி கள் ஒன்றுக்கொன்று கொத் திக் கொள்ளவும் ஏதுவாகிறது

14. மழைக்காலத்தில் ஒழுக் கினாலோ அல்லது மழைச் சாரலினாலோ அல்லது தண் ணீர் தொட்டி கவிழ்வதாலோ கூளம் ஈரமடைய நேரிட்டால் உடன் ஈரமடைந்த கூளத்தை அகற்றிவிட்டு, புதிய கூளம் போட வேண்டும். இல்லாவிட் டால் நச்சுக்கிருமிகள் பெருகி கோழிகளைத் தாக்கி, நட்டம் ஏற்படுத்தும். மேலும் ஆழ்கூள மும் கெட்டுவிடும்.

மேற்கூறியவாறு ஆழ்கூளக் கோழிவீடு அமைத்து, வீரிய இனக் கோழிகளை வளர்த்தால் அதிக முட்டைகளைப் பெற்று அதிக இலாபம் பெறவும், சத்து நிறைந்த ஆழ்கூளத் தைப் பயன்படுத்தி வேளாண் மை உற்பத்தியைப் பெருக்க வும் முயற்சிக்கும்படி கோழிப் பண்ணை அமைப்பதில் ஆர்வம் உள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.



# கொள்ளை லாபம் பெற வெள்ளைப் பன்றி வளர்த்திடுவீர்!

"பன்றி பலக் குட்டிப் பயந்ததனால் ஏது பயன்?'' என்று கேட்டது அந்தக் காலம்! ஆனால் இந்தக் காலத்தில் அவ்வாறு யாரேனும் கேட்பார்களேயானால், அவர்கள் பன்றிகளைப் பற்றி அறியாதவர்களாகவும், உலக நடப்பை உணராதவர்களாகவும் உள்ளார்கள் என்பதில் ஐயமில்லை.

செம்மறி ஆடு ஆண்டிற்கு ஒரு குட்டி ஈனும். வெள்ளாடு இரண்டு குட்டிகள் போடலாம். ஆனால் யார்க்ஷயர் பன்றிகளோ சுமார் 15 குட்டிகள் வரை போடுகின்றன. மேலும் இக்குட்டிகளின் எடை நாள்தோறும் அதிக விரைவில் கூடி சுமார் 150 நாட்களில், 60 கிலோ கிராம் எடையை அடைகிறது.

இவ்வளர்ச்சியை அடைய தாயிடமிருந்து 8 வாரங்களில் பிரிக்கப்படும் ஒரு குட்டிக்கு (எடை சுமார் 10 முதல் 15 கிலோ கிராம் வரை), 140 கிலோ கிராம் எடையுள்ள உணவு தேவைப்படுகிறது. 100 கிலோ எடை பன்றி உணவின் விலை ரூபாய் 70. ஆகவே 140 கிலோ உணவிற்காகும் மொத்த செலவு ரூபாய். 98.00 ஆகும்.

புல் வகைகள், குதிரை மசால் மற்றும்கிழங்கு வகைகளையும் பன்றிகளுக்குப் போடலாம். சமையலறையில் எஞ்சிய உணவு பொருட்களைக் கொடுத்து தீனிச் செலவை மேலும் குறைக்கலாம். இதே போல் பெரிய பண்ணையில் பன்றிகளை இலாபகரமான முறையில் வளர்க்கலாம்.

மேலே கூறியபடி சுமார் 98 ரூபாய் செலவில் ஐந்து மாதங்கள் வளர்ந்த பன்றிகள் எடை சுமார் 60 கிலோ கிராம் எடை இருக்கும். இதை இறைச்சிக்காக வெட்டும்போது, 39 கிலோ கிராம் இறைச்சியும், 3.4 கிலோ கிராம் கொழுப்பும், மற்றும் உள்ளுறுப்புகளும் தலையும் கால்களும் கிடைக்கின்றன.

அவைகளிலிருந்து, பின்கண்ட அளவு வருவாய் பெறலாம்.

### வரவு

| | ரூபாய் |
|---|---|
| இறைச்சி 39 கிலோ (கிலோ ரூ. 5 வீதம்) | 195.00 |
| கொழுப்பு மற்றும் உள்ளுறுப்புகள் 3.4 கிலோ (1 கிலோ ரூபாய் 1 வீதம்) | 3.40 |
| தலை, கால்கள் | 5.00 |
| மொத்த வருவாய் ரூபாய் | 203.40 |

### செலவு

| | |
|---|---|
| பன்றிக்குட்டியின் விலை (8 வார வயதில் வாங்கும்போது எடை சுமார் 10-15 கிலோ இருக்கும்) | 30.00 |
| உணவு | 98.00 |
| மொத்தச் செலவு | 128.00 |

### இலாபம்


எனவே ஒரு பன்றிக் குட்டியை 3 மாத காலம் வளர்த்ததில் ரூபாய். 75.40 இலாபம் கிடைக்கிறது. 10 பன்றிக் குட்டிகளை வளர்த்தால் ரூ. 754.00 இலாபம் கிடைக்கும்.

வீட்டில் வீணாகும் உணவுப் பொருட்களையும், காய்கறிகளையும் கொடுத்துச் செலவை மேலும் குறைக்கலாம்.

இவ்வாறு குறைந்த முயற்சியிலும், சொற்ப செலவிலும் கொள்ளை இலாபம் அளிக்கக்கூடிய 'யார்க்ஷயர்' போன்ற சீமை இனப் பன்றிகளை வளர்த்து நம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும், உணவின் அளவிலும் தரத்திலும் தன்னிறைவு எய்துவதற்கும், உணவுத் துறையில் ஓர் மாபெரும் புரட்சிக்கு நம்மைத் தயார் செய்து கொள்வது இன்றியமையாததாகும்.

# கோழி வளர்த்தால் ஏழ்மையை விரட்டலாம்!

-ஆர்.எம்.



"கோழையாக இருந்தாலும் இரு; ஆனால் ஏழையாக இருக்காதே!'' என்பது பிரான்சு நாட்டுப் பழமொழியாக இருந்தாலும், இன்று எல்லா நாட்டிற்கும் பொருந்துவதாகவே உள்ளது. எனவே, ஏழையாக இருப்பவர்கள் தங்கள் ஏழ்மையைப் போக்கிக் கொண்டு ஏற்றமுடன் வாழ, என்ன செய்யலாம் என்று சிந்தித்தால், இன்றைய நிலையில் கோழி வளர்ப்பதே சிறந்த வழி என்பது புலனாகும்.

தற்பொழுது பலர் கோழிப் பண்ணை அமைத்துக் குபேரர்களாக மாறி வருகிறார்கள் என்பது ஒரு சிலருக்கே தெரிந்த உண்மையாக உள்ளது!

கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பு எந்த ஒரு செலவும் இல்லாத புறக்கடைத் தொழிலாக இதுவரை இருந்து வந்துள்ளது. ஆனால் நாட்டுக் கோழிகள் ஆண்டொன்றுக்கு 50 முதல் 60 முட்டைகளையே இடுவதால், நாட்டுக் கோழிகளை வளர்ப்பது இலாபகரமானதாக இல்லை.

**வீரிய கோழிகள் ஆண்டொன்றுக்கு 230 முட்டைகளுக்குக் குறையாமல் இடுகின்றன !** வளர்ந்து வரும் அறிவியலின் பயனாக கோழி வளர்ப்பு இன்று, குறைந்த செலவில் - குறுகிய காலத்தில்-பலன்தரும் சிறந்த தொழிலாக மலர்ந்துள்ளது. முட்டைகளிலிருந்து வெளி வந்த பெட்டைக் குஞ்சுகள் ஆறு மாதத்தில் முட்டையிடும் நிலையினை அடைந்து விடுவதால், கோழி வளர்ப்பில் செய்யும் முதலீட்டின் பயனை ஆறு மாதத்திலேயே அனுபவிக்க இயலும்! கோழிப்பண்ணை அமைப்பதன் மூலம், குறுகிய காலத்தில் அதிக இலாபம் பெற முடிவதாலேயே, இன்று கோழிவளர்ப்பு பற்றிய விழிப்புணர்ச்சி - படித்தவர்களிடம் மட்டுமல்ல; பாமரர்களிடத்திலும்-ஏற்பட்டு வருகிறது.

### கோழி வளர்ப்பின் அவசியம்


நாளொன்றுககு ஒரு முட்டைச் சாப்பிட்டால், நோய்கள் நம்மை அணுகாது! '' (An egg a day keeps the disease away) என்பது ஆங்கில நாட்டுப் பழமொழியாகும். எனவே, நாம் உடல்நலம் பெறவும், அறிவாற்றல் பெறவும் நாளொன்றுக்கு ஒரு முட்டை வீதம் சாப்பிட வேண்டும். ஆனால் வளர்ந்துவரும் நாடான இந்தியாவில் வாழும் நம்மால், நாளொன்றுக்கு ஒரு முட்டை வீதம் சாப்பிட நமது பொருளாதாரம் இடம் தராது! ஆகவே, நாம் ஒவ்வொருவரும் நலமாக வாழ, நாளொன்றுக்கு 8.5 கிராம் (0.3 அவுன்சு) முட்டை சாப்பிட வேண்டும் என்று ஊட்டச்சத்துணவு வல்லுநர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள மக்களுக்கு இன்றைய நிலையில் ஒவ்வொருவருக்கும் 1 கிராம் அளவு முட்டையே கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும் சற்று விரிவாகக் கூற வேண்டுமானால் தற்பொழுது தமிழ் நாட்டில் உள்ள மக்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆண்டு காலத்தில் 8 முட்டைகளே உண்கின்றார்கள். ஆனால் தமிழ்நாடு அரசின் மாநில திட்டக்குழு, தொலை நோக்குத் திட்டத்தின் (Perspective plan) முடிவில் - அதாவது 1984-க்குள்-தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு கால் முட்டை அளவாவது கிடைத்திடச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் திட்டமிட்டுள்ளது.

### நாளொன்றுக்கு 90 இலட்சம் முட்டை தேவை!

வெளிநாட்டு இனக்கோழிகள் பெரிய முட்டைகளை இடுவதால், அம்முட்டை ஒவ்வொன்றும் சராசரியாக 50 கிராம் எடை இருக்கும் என்று வைத்துக் கொண்டு, (நாட்டுக் கோழி முட்டை ஒவ்வொன்றும் சராசரியாக 37 கிராம் இருக்கும்), ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 8.5 கிராம் முட்டை தேவையென்ற அடிப்படையில் கணக்கிட்டால், 1984-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வசிக்கப் போகும் 5.37 கோடி மக்களுக்கும் நாளொன்றுக்கு ஏறத்தாழ 90 இலட்சம் முட்டைகள் தேவைப்படும்!

(நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 8.5 கிராம் முட்டை வீதம் (அதாவது 6 பேருக்கு ஒரு முட்டை வீதம்) என்பதற்குப் பதிலாக நாளொன்றுக்கு ஒவ்வொருவரும் ஒரு முட்டை வீதம் உண்ணும் நிலைமை ஏற்படுமானால், 1984-ஆம் ஆண்



டில் தமிழ்நாட்டில் வாழும் மக்களுக்கு நாளொன்றுக்கு ஏறத்தாழ 5.4 கோடி முட்டைகள் தேவைப்படக்கூடும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்).

ஒரு கோழிப்பண்ணையில் 100 முட்டையிடும் கோழிகள் இருந்தால், சராசரியாக அக்கோழிப் பண்ணையில் நாள்தோறும் 60 கோழிகளே முட்டை இடுகின்றன. இந்த அடிப்படையில், 90 இலட்சம் முட்டைகள் பெற, 150 இலட்சம் முட்டையிடும் கோழிகள் தேவைப்படும். இந்த அளவுக்குக் கோழிகளை வளர்க்க, ஒவ்வொரு கோழிப் பண்ணைக்கும் (யூனிட்) 100 பெட்டைக் கோழிகள் வீதம் தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டிற்குள் 1,50,000 கிராம கோழிப்பண்ணைகளை நிறுவிட வேண்டும்.

**1,50,000 கோழிப் பண்ணைகள் அமைத்திட வேண்டும்!**

கோழிப்பண்ணை அமைப்பதைத் துணைத் தொழிலாகக் கொண்டு, 100 பெட்டைக் கோழிகள் கொண்ட கோழிப் பண்ணைகளைக் குறிப்பாகக் கிராமப் புறங்களில் அமைப்பதே பொருளாதார நோக்கில் சிறந்ததாக-இலாபம் தரும் அமைப்பாக-இருக்கும். இத்தகைய 100 கோழிப்பண்ணைகள் (ஒவ்வொன்றும் 100 கோழிகள் கொண்டது) ஒன்று சேர்ந்து கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டால், முட்டைகளைச் சேகரித்து விற்பனை செய்யவும், கால்நடை மற்றும் கூட்டுறவுத் துறைகளின் உதவிகளைப் பெறவும் எளிதாக இருக்கும். இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை ஆண்டு ஒன்றுக்கு 150 வீதம் அமைத்துச் செயல்படுத்தினால், 1984-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் 1,500 கோழிவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும். இவைகளின் மூலம் தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டின் முடிவில் நாளொன்றுக்கு 90 இலட்சம் முட்டைகள் கிடைக்கும் என்பது உறுதி!

**வேலை வாய்ப்பு**

இத்தகைய கோழிப்பண்ணைகளை அமைத்து, முட்டை உற்பத்தி செய்வதன் மூலம் தமிழ்நாட்டில் 1.5 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன், முட்டைகளை விற்கும் பணியில் 18,000 பேர்களுக்கும் (500 முட்டைகளை விற்பனை செய்ய ஒருவர் வீதம்), முட்டைகளைச் சேகரித்தல், விற்பனைக் கூடங்களுக்கு அனுப்புதல் ஆகிய பணிகளில் 2,000 பேர்களுக்கும் (75 கோழிப்பண்ணைக்கு ஒருவர் வீதம்) ஆக மொத்தம் 1,70,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது திண்ணம்.

மேலும், மேற்கூறியவாறு 1,50,000 கிராமக் கோழிப் பண்ணைகளை அமைத்தால், அவைகளுக்குத் தேவையான தீனியை உற்பத்தி செய்யும் வகையிலும் பல்வேறு நன்மைகள்-குறிப்பாக உழவர் பெருமக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும்-கிடைக்கவிருக்கின்றன.

**மக்காச் சோளம் பயிரிட வாய்ப்பு!**

சாதாரணமாக முட்டையிடும் பெட்டைக் கோழி ஒவ்வொன்றுக்கும் நாளொன்றுக்கு 100 கிராம் தீனி வீதம் கொடுக்க வேண்டும். தீனியை கோழிகள் உண்ணும்போது சேதாரம் ஏற்படுத்துவதையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், சராசரியாக ஒரு கோழிக்கு ஒரு ஆண்டுக்கு 40 கிலோ தீனி தேவைப்படுகிறது. ஆகவே, 100 கோழிகளைக் கொண்ட ஒவ்வொரு கிராமக் கோழிப்பண்ணைக்கும் ஆண்டொன்றுக்கு 4 மெட்ரிக் டன் தீனி தேவைப்படும். இந்த அடிப்படையில் கணக்கிடும்போது 1,50,000 கிராமக் கோழிப் பண்ணைகளுக்கும் ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் தீனி தேவைப்படுகிறது. இதில் பாதியை மக்காச் சோள தானியங்களாகக் கொடுப்பது சிறந்தது. கோழித் தீனியில், பாதியளவுக்கு மக்காச் சோளத்தைப் பயன்படுத்துவதாகக் கொண்

டால், 1,50,000 கிராமக் கோழிப்பண்ணைகளுக்கும் ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் டன் மக்காச் சோளம் தேவைப்படும். ஆண்டு ஒன்றுக்கு 2 தடவை மக்காச் சோளம் பயிரிடுவதாகவும், ஏக்கருக்குச் சராசரியாக 2 டன் மக்காச்சோளம் விளைவதாகவும் வைத்துக் கொண்டால், 1,50,000 கிராமக் கோழிப்பண்ணைகளுக்கும் தேவையான மக்காச் சோளத்தை உற்பத்தி செய்ய 75,000 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

தற்பொழுது மக்காச் சோள சாகுபடி பரவி வந்தாலும், மக்காச்சோளத்தை விற்பனை செய்ய நல்ல வாய்ப்பு இல்லை என்று கூறுகிறார்கள். இக்குறையை கிராமக் கோழிப் பண்ணைகள் தீர்த்திடும் என்பதில் ஐயமில்லை. எனவே, கோழிப்பண்ணை அமைப்பதன் மூலம், உழவர்கள் பயன்பெறவும் வழி ஏற்படுகிறது.

### சத்து மிகுந்த எரு

மேலும், ஒவ்வொரு கிராமக் கோழிப்பண்ணையில் இருந்தும் ஒரு ஆண்டில் 2.5 மெட்ரிக் டன் கோழி எரு (சாணம்) கிடைக்கும் என்றும், 1,50,000 கோழிப் பண்ணைகளிலிருந்தும் மொத்தம் 3.75 இலட்சம் மெட்ரிக் டன் கோழி எரு கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் மக்காச் சோளத்திற்கு 5 டன் கோழி எரு வீதம் இட்டால், மொத்தம் கிடைக்கும் 3.75 இலட்சம் மெட்ரிக் டன் கோழி எருவைக் கொண்டு 75,000 ஏக்கர் மக்காச் சோளத்திற்குத் தாராளமாக எருவிட இயலும். கோழி எருவில் (காய்ந்த நிலையில்) 0.92 சதத் தழைச்சத்தும், 1.88 சத மணிச்சத்தும், 0.60 சதச் சாம்பல் சத்தும் அடங்யுள்ளதால், இரசாயன உரங்களின் விலை ஏற்றமாக உள்ள இந்த நேரத்தில், கோழி எருவைப் பயன்படுத்தி மக்காச் சோளம் பயிரிடுவது சிக்கனமானதாகவும், சிறந்த பலன் தரத்தக்கதாகவும் இருக்கும். எனவே, 75,000 ஏக்கரில் மக்காச் சோளம் பயிரிடுவதன் மூலம் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதுடன், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. கோழிகள் முட்டையிட சேவல் தேவையில்லை!
2. கோழிகள் உண்ணும் உணவு, சத்தான முட்டையாக வெளிப்படுகிறது!
3. கோழியின் முட்டையில் 60 சதவிகிதம் தண்ணீரும், 13 சதவீத புரத சத்தும் உள்ளன.
4. கோழியின் அன்றுடத் தேவை 100 கிராம் தீனி. அதன் விலை 7 பைசா. ஆனல் அவையிடும் முட்டையின் விலை குறைந்தது 25 பைசாவாகும்.
5. கோழிகளுக்குத் தேவையான இடவசதி:
   0 முதல் 4 வார குஞ்சுகளுக்கு........0.5 சதுர அடி.
   4 முதல் 8 வாரம் வரை.............. 1 சதுர அடி.
   8 முதல் 20 வாரம் வரை............ 2 சதுர அடி.
   20 வாரத்துக்கு மேல்.............:...2.5 சதுர அடி.
6. கோழி முட்டை ஒரு கலப்படம் செய்யமுடியாத உணவு!
7. 40 கோழிகள் ஒரு ஆண்டில், 1 டன் எரு கொடுக்கும்!
8. 3 கோழிகளின் உரம், ஒரு பசுவின் எருவிற்குச் சமம்!
9. வீரியக் கோழிகள் ஓராண்டில் 230 சிரிய முட்டைகள் இடும்!
10. ஒரு நாள் கோழிக்குத் தண்ணீர் மறுத்தால், ஒரு வாரம் முட்டைகள் குறைந்திட காண்பீர்!


### இலாபம்


100 கோழிகளை கொண்ட கிராமக் கோழிப்பண்ணை ஒவ்வொன்றுக்கும் நல்ல கட்டடம், கோழிகள், மாற்றுக் கோழிகள் உட்பட எல்லா செலவுகளும் சேர்த்து 3 ஆண்டு காலத்திற்கு ரூபாய் 7,150 செலவாகும் என்றும், முதலாண்டில் ரூபாய் 1,275 இலாபம் கிடைக்கும் என்றும், 2-வது 3-வது ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 3,025 இலாபம் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் கிராமத்தில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கோழி வீடு, கருவிகள், தீனி ஆகியவற்றைத் தயாரித்துக் கொண்டால் இலாபம் மேலும் அதிகமாகும்!

பல இடங்களில் முட்டையிடும் நிலைக்கு வந்த 100 கோழிகளை வளர்த்து, முட்டைகளை விற்பனை செய்வதன் மூலம், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 450-க்குக் குறையாமல் வருவாயும், ரூபாய் 125 முதல் ரூபாய் 150 வரை நிகர இலாபமும் பெற்று வருகின்றனர் என்றுல் மிகையல்ல!

இந்த அளவுக்கு 100 கோழிகளை வளர்க்க வசதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள் குறைந்தது 10 கோழிகளையாவது வீட்டின் பின்புறத்தில் குறைந்த செலவில்-ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி-வளர்த்திட முடியும். இதன் மூலம் நாளொன்றுக்குக் குறைந்தது 6 முட்டையாவது கிடைக்கும். அம்முட்டைகளில் ஒரு சிலவற்றை குடும்பத்தினரின் உணவுக்குப் பயன்படுத்திக் கொண்டாலும், மீதியை விற்பனை செய்து வருவாய் பெற முடியும். இதனல் நம் உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொண்டு வலிவோடும், வனப்போடும், அறிவோடும், ஆற்றலோடும், விளங்க முடிவதுடன் முட்டை விற்பனை மூலம் நாளொன்றுக்குக் குறைந்தது 1 ரூபாய் வருவாய் பெற முடியும்.

**எனவே, சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள குறைந்த வருவாய் உள்ளவர்கள், தங்கள் ஏழ்மையை போக்கிக் கொள்ளவும், ஊட்டச்சத்துமிகுத்த முட்டை, இறைச்சி ஆகியவைகளைப் பெறுவதற்கும் கோழி வளர்ப்பதே சிறந்த வழியாகும்!**





Yesterday's way of farming

low yields... lower profits

Next time you need new agricultural equipment, such as tractors, sprayers, or power tillers, call at your nearest branch of the State Bank.


The State Bank will help you modernise your farm for increased agricultural production through loans or cash credit, under its Direct Finance Scheme to farmers.

Today's modern farming

bumper crops... bumper profits

STATE BANK
FOR SERVICE

S.380G



# பால் வளம் பெருகிடப் பாங்கான திட்டங்கள்!

அன்றாட வாழ்க்கையில் பால் ஒரு முக்கிய உணவுப் பொருளாக இருந்து வருவதை நாம் அறிவோம்.

பாலை விரும்பாத குழந்தைகளோ, பெரியவர்களோ இருக்கமாட்டார்கள். மருத்துவ மனைகளிலுள்ள நோயாளிகளுக்கும் பால் மிகவும் தேவைப் படுகிறது.

இவ்வாறு மக்களின் அன்றாடப் பால் தேவையை நிறைவேற்றும் வண்ணம் விரைந்து செயலாற்றுகிறது, தமிழ்நாடு பால் வள நிறுவனம்.

மார்ச் 28-ஆம் நாள் மாதவரம் பால்பண்ணையில் ஒரு மகிழ்ச்சியான விழா!

பிளாஸ்டிக் பைகள் மூலம் பால் வழங்கும் இயந்திரம், கால் நடைத் தீவன உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் துவக்க விழா அன்று மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவினைத் துவக்கி வைத்துத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்—

''பத்தாண்டுக் காலமாகப் பால் வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சியை ஏற்கெனவே அரசின் சார்பில் செய்தும்கூட, அது சரியான அளவிற்கு வளராமல், மிகக் குறைவான அளவேதான் கிட்டத்தட்ட 50,000 லிட்டர் தான் நாள் ஒன்றுக்கு வழங்க முடியும் என்ற நிலையில் இருந்தது. அதற்குப் பிறகு 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் வள நிறுவனத்தைத் தமிழக அரசின் சார்பில் சிந்தித்துச், செயல்படுத்தி, அனைவரும் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் காரணமாக 50,000 லிட்டர் என்று இருந்த நிலை மாறி இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 1,20,000 லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்றால், இது ஒரு மிகப் பெரிய சாதனையாகும்.

''இந்தப் பால் வள நிறுவனம், தமிழகத்திலே ஏறத்தாழ ஆறேழு மாவட்டங்களில் தமிழகத்தின் விவசாயம் பெருங்குடி மக்கள் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் குடும்பங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

''இது போதுமென்று நான் சொல்லமாட்டேன். இருந்தாலும் நாம் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் இருக்கிறோம். நாம் மேலும் வளர்வோம் என்பதற்கு இது ஒரு நல்ல முன் மாதிரியாகும். அந்த வகையில் இந்த நிறுவனம் பல நவீன உத்திகளைக் கையாண்டு, சிக்கனம், சீரமைப்பு இவைகளையும் வகைப் படுத்தி அதே நேரத்தில் மக்களுக்கு அதிகமான அளவிற்குக் கூடுமானவரையில் இப்போதிருக்கிற அகவிலைக்கேற்ப நியாயமான விலைக்குப் பால் வழங்க நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.''

சென்னை நகர மக்கள் முன்பெல்லாம் புட்டிகள் மூலமே பால் பெற்று வந்தனர். இப்போது தமிழ்நாட்டிலேயே முதன்முறையாகப் பிளாஸ்டிக் பைகள் மூலம் பால் வழங்கப் படுகிறது. கால் லிட்டர், அரை லிட்டர், ஒரு லிட்டர் அளவுகளில் பால் நமக்குக்கிடைக்கும்.

பாலை பிளாஸ்டிக் பைகளில் நிரப்புவதற்கான ஒரு பெரிய இயந்திரம் பண்ணையில் காட்சியளிக்கிறது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் இது பைகளில் பாலை நிரப்பித் தள்ளிக் கொண்டேயிருக்கிறது! இந்த இயந்திரத்தின் மதிப்பு ரூ. 6 இலட்சமாகும்.

முன்னேற்றமடைந்த நாடுகள் எல்லாம் நவீன முறைகளில் பால் வழங்குவதை மேற்கொள்கின்றன. அவை. 1. பிளாஸ்டிக் பைகளில் வழங்குவது. 2. காகிதப் பைகளில் வழங்குவது.

பாலை இந்த உறைகளில் போடுவதற்கு முன் பக்குவப் படுத்தப்படுகிறது. எனவே பால் நீடித்து நிற்கிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில்

மேலும் ஒரு முன்னேற்றம் செய்துள்ளனர். பால் சுத்தமாகக் காய்ச்சப்பட்டுக் காகித உறைகளில் அடைக்கப்படுகின்றது. இப்படிக் காய்ச்சப்பட்ட பால் மூன்று மாதக் காலத்திற்குச் சாதாரண நிலையில் வைத்திருக்கக்கூடிய பக்குவத்தை அடைகிறது. மேற்படி காகித உறைகள் மளிகைக் கடையில் வீட்டுச் சாமான்கள் வாங்கும்போது வாங்கிக் கொள்ளலாம். மேற்படிக் காகித உறைகளைக் குளிர்பதனச் சாதனத்தில் வைக்க வேண்டியதில்லை.

சென்னையில் பால் அடைப்பு முறையில் மாற்றுமுறை ஏற்படுத்தத் தமிழ்நாடு பால் வழங்கு துறை இரண்டு இயந்திரங்களை பிரான்சிடமிருந்து வாங்கியது. வரவழைக்கப்பட்ட எல்லா இயந்திரங்களும் வெளிநாட்டுப் பொறியாளர்களால் நிறுவப்பட்டு வந்தபோதிலும், மாதவரம் பால்பண்ணையில் உள்ள இயந்திரங்கள் பண்ணைப் பொறியாளர்களாலேயே முழுவதும் நிறுவப்பட்டுள்ளது. இதனால் ரூ. 45,000 மிச்சப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இயந்திரமும் மணிக்கு 5,000 பைகள் தயார் செய்யும் தகுதி பெற்றவை. அவை ஒரு லிட்டர், அரை லிட்டர், கால் லிட்டர் கொண்ட பைகளாகும். தேவையான அளவு பைகளில் பாலை நிரப்பிக் கொள்ள இந்த இயந்திரம் உதவுகிறது. குறைந்த அளவான கால் லிட்டர் அளவு பால், சென்னை நகரில் ஏழை மக்கள் வாழும் பகுதிக்கு விற்பனை செய்ய ஏதுவாக இதன் மூலம் பிளாஸ்டிக் பைகளில் பாலை அடைக்க முடிகிறது. இந்த வசதி, புட்டிகளில் அடைக்கும் முறையினால் கிடைப்பதில்லை.

பிளாஸ்டிக் பைகளில் பால் வழங்குவதால் கலப்படம் செய்ய முடியாது. இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முதலில் 10,000 லிட்டர்கள் பிளாஸ்டிக் அடைப்புகளில் இருபது பால் வழங்கும் கடைகள் மூலம் சென்னையில் விற்கப்படும். பிளாஸ்டிக் பைகளில் பால் வழங்குந் திட்டம் வெற்றிகரமாக அமைந்தால், இம்முறை சிறிது சிறிதாக விரிவாக்கப்படும். தற்சமயம் வழங்கும் பதப்படுத்தப்பட்ட பால் லிட்டர் ரூ. 1.80 வீதம் விற்கப்படும்.

விழாவுக்குப் பால்வளத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்கள்—

''காசு போட்டதும் எடையைக் கார்டில் அச்சிட்டுத் தரும் இயந்திரத்தைப்போலப், பணத்தைப் போட்டதும் அரை லிட்டர், ஒரு லிட்டர் என்று பால் பைகளைக் கொடுக்கக் கூடிய இயந்திரங்களை, சென்னை நகரின் முக்கிய இடங்களில் வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சென்னை நகரில் பால் தேவையை நிறைவேற்றுவதற்கு விரைவில் அம்பத்தூரில் ஒருபால் பண்ணை நிறுவப்படும். இதில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படும்.''

பட்டதாரி மாணவர்கள் பால்பண்ணை நடத்த அரசு கடன் தந்து உதவும் ஒரு அரிய திட்டமும் இங்கு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இத்திட்டம் தொடங்கப் பெற்று வெற்றிகரமாக நடந்து வருகிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் மாதவரம் பால்பண்ணையில் பயிற்சி பெற்ற 19 பட்டதாரி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 40 ஆயிரம் வீதம் கடன் வழங்கப் பட்டது. இதற்கான காசோலையைக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. ஓ.பி. இராமன் அவர்கள் வழங்கினார்.

'பட்டதாரிகள் பால்பண்ணைத் திட்டம்' என்பது என்ன?

ஐந்து இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்படித்தபட்டதாரிகள், பள்ளி இறுதி வகுப்புத்தேர்ச்சி பெற்றவர்கள், பால்பண்ணை அமைத்துப் பயிற்சிபெற, தமிழக அரசு ரூ. 8.8 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்தப் பயிற்சி மாதவரத்தில் அளிக்கப்படுகின்றது. முதல் மூன்று அணிகளுக்கு மூன்று மாதத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மற்றும் அடுத்து மூன்று அணிகள் இரண்டு மாதப் பயிற்சி பெறுவர். பயிற்சிக் காலத்தில் பட்டதாரிகளுக்கு ரூ. 150-ம் பள்ளி இறுதி வகுப்புப் படிப்பு படித்தவர்களுக்கு ரூ. 100-ம் வழங்கப்படுகிறது. இதற்கான பண்ணைகள் ஏற்படுத்துவதற்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்கள் எழுப்புவதற்கு அனுமதிக்கப் பட்ட ரூ. 8.8 இலட்சத்திலிருந்து ஒரு பகுதி ஆரம்பத் தொகையாக உபயோகப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு பட்டதாரியும் 14 முதல் 15 கறவை மாடுகள் கொண்ட ஒரு பண்ணையை ஏற்படுத்துவார்கள். பள்ளி இறுதி வகுப்புப் படிப்பு படித்தவர்கள் 5 முதல் 6 கறவை மாடுகள் கொண்ட ஒரு பண்ணையை ஏற்படுத்துவார்கள். இதற்காக ஒவ்வொரு பட்டதாரியும் தோராயமாக ரூ. 60,000மும், பள்ளி இறுதி வகுப்புப் படிப்புப் படித்தவர்கள் தோராயமாக ரூ. 20,000-மும் கடனைப் பெறத் தகுதி பெறுகிறார்கள்.

எல்லா வசதிகளும் உள்ள மாதவரத்தில், சில பயிற்சி பெற்றவர்கள் தங்கள் பண்ணையை ஆரம்பிப்பார்கள். மற்ற பயிற்சியாளர்கள் அவர்களுடைய பண்ணையை அவர்கள் சொந்த நிலத்தில் ஆரம்பிப்பார்கள். அந்த இடத்திற்குத் தமிழ்நாடு பால் வள நிறுவனம் முதல் தரத் தீவனங்கள் வழங்குவது, மருத்துவ வசதி, மற்றும் பால் விற்பனை ஆகிய உள்ளீடு (Inputs) விஷயங்களிலும் தனது ஆதரவை வழங்கும்.

## தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை

தமிழ்நாட்டில், 1974–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பெற்ற கால்நடைக்கணக்கெடுப்பின்படி, கீழ்க்கண்ட அளவு (தற்காலிகமானது) கால்நடைகள் உள்ளன

| இனம் | | எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மாடுகள் | ... | 107.75 |
| எருமைகள் | ... | 28.79 |
| செம்மறியாடுகள் | ... | 56.15 |
| வெள்ளாடுகள் | ... | 40.18 |
| பன்றிகள் | ... | 5.84 |
| கோழிகள் | ... | 133.39 |

இதன்படி, ஒவ்வொரு பட்டதாரியும் மாதம் ரூ. 300 முதல் ரூ. 500 வரையும், பள்ளி இறுதி வகுப்புப் படித்த இளைஞர்கள் மாதம் ரூ. 200 முதல் ரூ. 300 வரையும் வருமானம் பெறுவர். இதன்படி ஐந்து ஆண்டுகள் கழிந்தபின் ஒவ்வொரு பட்டதாரியும் ரூ. 50,000-மும், ஒவ்வொரு பள்ளி இறுதி வகுப்புப் படித்த இளைஞர்கள் ரூ. 30,000-மதிப்புள்ள சொத்துக்களையும் பெறுகிறார்கள். இந்தத்திட்டத்திற்கு மாநில வங்கியும், இந்தியன் வங்கியும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் பணமுதலீடு செய்ய

முன்வந்துள்ளன. நிலம், கால்நடைக் கொட்டகை, கால்நடைகள் இவற்றின்மீது அடமானம் செய்து கடன் வழங்கப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமாக எல்லாவித உதவிகளையும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் அளித்து வருகிறது. அந்தத் திட்டத்தின் கீழ் 160 பேர் பயனடைவார்கள். அவர்களில் 133 பேர் தங்களது பயிற்சியை முடித்துவிட்டவர்கள்; மற்றும் 27 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி முடிவடைந்தவர்கள். மாதவரத்தில் 10 பேர்களும், தங்கள் சொந்த நிலத்தில் 9 பேர்களும் ஆக 19 பேர்கள் பண்ணைகள் ஆரம்பித்துவிட்டனர். மற்ற பயிற்சி பெற்ற 114 பேர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி, கோவை முதலிய மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள்.

குற்றாலம் பராசக்திக் கல்லூரியைச் சேர்ந்த ஐந்து பட்டதாரிப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி வட்டத்தில் பண்ணையை ஆரம்பிக்கவிருப்பது இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

இங்குக் கால்நடைத் தீவன உற்பத்தி நிலையம் ரூ. 10,22,000 செலவில் நிறுவப்பட்டிருக்கிறது. இலாப நட்டம் இல்லாமல் இந்தக் கலப்பு மாட்டுத் தீவனம் தயாரிக்கப்படுகிறது. விரைவில் இங்குக் கம்ப்யூட்டர் ஒன்றும் பொருத்தப் படவிருக்கிறது.

மாதவரம் பால் பண்ணையிலுள்ள நவீன இயந்திரங்கள் நியூசிலாந்து அரசின் சார்பில் நன்கொடையாக வழங்கப் பெற்றவையாகும். சுகாதார முறைப்படிப் பாலைப் பதப்படுத்துவதற்குத் தேவையான எல்லா வசதிகளும் இங்கு உள்ளன.

நியாயமான விலையில், தரமான பாலை வழங்குவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டிலிருந்து நடமாடும் பால் விற்பனை நிலையம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. குடிசைப் பகுதிகளில் பால் குப்பிகள் மூலம் சிறிய அளவில் பால் விற்கப் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பால் வளம் பெருக்கிட விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளும், கூட்டுறவுப் பால் சங்கங்களின் மூலம் கிராமங்களிலிருந்து பால் சேகரிக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1974-75-ஆம் ஆண்டில் இந் நிறுவனம் 4 ஊனமுற்றோருக்கு வேலை தந்திருக்கிறது. 600 குழந்தைகளுக்கு 100 லிட்டர் பாலை இலவசமாக வழங்க முன் வந்திருக்கிறது.

இவ்வாறு வெண்மைப் புரட்சி ஏற்பட-கலப்படம் இல்லாத தரமான பால் நியாய விலைக்குக் கிடைத்திட தமிழ்நாடு பால் வள நிறுவனம் நாளும் நற்பணியாற்றி வருவதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

பி. வி. ஜி.

---


## செழிப்பான பயிர்!

சிறப்பான மகசூல் தரும் செழிப்பான பயிர் வளர்க்க................

ஒவ்வொரு உழவர் பெருமகனும் கனவு காண்கின்றான்!

ஆனால் எல்லா உழவர் பெருமக்களும் செழிப்பான பயிரை

அறுவடை செய்ய முடிவதில்லை!


ஏனெனில், அவர்களுக்குக் கிடைக்காதது............பணம்!

தரமான விதைகள்,
இரசாயன உரங்கள்,
பூச்சி மருந்துகள்,
பம்பு செட்டுகள்,
டிராக்டர்கள் அல்லது இதர பண்ணைக் கருவிகள் வாங்க
உழவர் பெருமக்களுக்கு

**இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு**

தேவையான நேரத்தில் நிதி உதவி செய்கிறது.

# இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு.


இந்க்லீவர்
மாட்டுத் தீவணம்
அதிக பாலும்
மிக அதிக லாபமும் பெறுவீர்
இது ஓர் இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு